பதிவு இலக்கம் : 105267
வார இதழ்
# தீபம்
01.09.2019 தீபம் -197
விலை ரூபா 30.00






## சவேந்திர சில்வா நியமனத்துக்கு ஐ.நா. உட்பட சர்வதேச நாடுகள் கண்டனம்

## இன்று அமேசன் நாளை...?



## உண்மையைத் தேடுகிறோம்... நடந்தது என்ன?

### யாழ்.பல்லைக்கழகம் பற்றியது

## காணி விடுவிப்பை பகிஷ்கரித்த தமிழ் தலைமைகள்!



"முறையான பயிற்சியே உயிர் காக்கும்"
சீபன் பாஸ்கர் லேணர்ஸ்
SEEBAN BASKAR LEARNERS
அரச அங்கீகாரம் பெற்ற சாரதிப் பயிற்சி போதனாசிரியர்களைக் கொண்ட பாடசாலை
கண்டி வீதி, கைதடிச்சந்தி. 021 223 2050 | 076 713 6304
மத்திய மகாவித்தியாலய வீதி, நெல்லியடி. 021 226 0459 | 076 015 3375 | 077 057 0459
seebanbaskar
daseepan@gmail.com




# அறிவோம் உயர்வோம்

## வத்திக்கான்



வத்திக்கான் நகரமானது உலகிலேயே சிறிய நகரமாக காணப்படுகின்றது. இது ஐரோப்பா கண்டத்தில் அமைந்துள்ளது. இதன் நீளம் 1.05கிலோமீட்டர், அகலம் 0.85கிலோமீட்டர் ஆகும்.வத்திக்கான் 1929 ஆண்டு பெப்ரவரி மாதம் 11ம் திகதி நாடாக அறிவிக்கப்பட்டது.இது உலக சனத்தொகையில் 233வது நாடாக காணப்படுகின்றது.வத்திக்கான் என்ற பெயர் வத்திக்கான் உச்சி அங்கு இருப்பதனாலும் வத்திக்கான் என்பதன் பொருள் தோட்டம் என்பதனாலும் உருவாகியது.




## குறள் ஒன்று விளக்கம் இரண்டு

( குறள் எண் : 7 )

**தனக்குவமை இல்லாதான்**
**தாள்சேர்ந்தார்க் கல்லால்**
**மனக்கவலை மாற்றல் அரிது**

**குறள் விளக்கம் :**

**மு.வ :** தனக்கு ஒப்புமை இல்லாத தலைவனுடைய திருவடிகளைப் பொருந்தி நினைக்கின்றவர் அல்லாமல், மற்றவர்க்கு மனக்கவலையை மாற்ற முடியாது

**சாலமன் பாப்பையா :** தனக்கு இணையில்லாத கடவுளின் திருவடிகளைச் சேர்ந்தவர்க்கே அன்றி, மற்றவர்களுக்கு மனக்கவலையைப் போக்குவது கடினம்

## தோசையம்மா தோசை




**தோசையம்மா தோசை**
**அம்மா சுட்ட தோசை**
**அரிசி மாவும் உளுத்த மாவும்**
**கலந்து சுட்ட தோசை**

**அப்பாவுக்கு நாலு**
**அம்மாவுக்கு மூணு**
**அண்ணனுக்கு ரெண்டு**
**பாப்பாவுக்கு ஒண்ணு**

**தின்னத் தின்ன ஆசை**
**திருப்பிக் கேட்டா பூசை**
**அம்மா சுட்ட தோசை**
**அருமையான தோசை**

## இன்றைய சிந்தனை

## வீரமும் போராட்டமும்



பொதுவாக ஒவ்வொரு உயிருக்கும் இரண்டே இரண்டு அடிப்படைச் செயற்பாடுகள் இருக்கும். ஒன்று உயிர்த்திருப்பது. இரண்டு இனத்தைப் பெருக்குவது. அதற்காக தேவைப்படும் எதையும் செய்ய வேண்டும் என்பதுதான் இயற்கையின் ஏற்பாடு. ஓர் எறும்பைத் தொட்டால் அது இங்கும் அங்கும் ஓடும். அதற்கு , தான் உயிர்த்திருக்க வேண்டும் என்ற எண்ணம். கையால் பிடித்து விட்டாலோ, அதன் சக்திக்கேற்ப இறுதி முயற்சியாகக் கடித்து விடும். நாமும் அப்படித்தான், கோழையாக இருப்பவனாக இருந்தாலும், இழப்பதற்கு உயிர்தான் கடைசியாக இருக்கின்றது என்கிற நிலையில் எவனுக்கும் நிச்சயம் வீரம் வரும். போராடத்தான் செய்வான்.

## அறிஞர்கள் வாழ்வில் சுவையான சம்பவங்கள்

**ஐசக் நியூட்டன்**



அமெரிக்க விஞ்ஞானி சர். ஐசக் நியூட்டன் பூமிக்கு புவியீர்ப்பு சக்தி இருக்கிறது என்பதைக் கண்டுபிடித்துச் சொன்னவர். அவர் ஒரு சமயம் ஆராய்ச்சி செய்து கொண்டிருந்த பொழுது அவரைப் பார்க்க நண்பர் ஒருவர் வந்திருந்தார். அவர் அங்கிருந்த அறைக் கதவில் பெரியதும் சிறியதுமாக இரண்டு துவாரங்கள் வட்டமாக இருந்ததைப் பார்த்தார்.

“அறைக் கதவில் இரண்டு துவாரங்கள் போட்டிருக்கின்றீர்களே அது ஏன்?” என்று நியூட்டனிடம் கேட்டார். அதற்கு நியூட்டன் “நான் சிறியதும், பெரியதும் என்று இரண்டு பூனைகள் வளர்க்கின்றேன். வீட்டின் அந்த அறையைப் பூட்டிக் கொண்டு வெளியில் போய் விட்டால் பெரிய துவாரம் வழியாக பெரிய பூனையும், சிறிய துவாரம் வழியாக சிறிய பூனையும் அறைக்குள் வருவதற்காகவே இந்த இரண்டு துவாரங்களையும் போட்டிருக்கிறேன்” என்று சொன்னார். “அதற்கு இரண்டு துவாரங்கள் தேவையில்லையே? பெரிய துவாரம் வழியாகவே இரண்டு பூனைகளும் வந்து விடலாமே” “என்று நண்பர் கூறியதும், விஞ்ஞானி நியூட்டன் திடுக்கிட்டார். “ஆமாம், நீங்கள் சொல்வது சரி தான். எனக்கு இந்த யோசனை தோன்றவில்லையே” என்று கூறியவர் சிறிய துவாரத்தையும் அடைக்கச் சொன்னார்.




## சட்டைக்குள் முல்லா

ஒரு நாள் தம்முடைய உயரமான வீட்டுச் சுவரின் மீது , ஓர் ஏணியைச் சாத்தி வைத்து அதன் உச்சியில் ஏறி நின்றுகொண்டு சுவருக்கு சுண்ணாம்பு அடித்துக் கொண்டிருந்தார் முல்லா. தற்செயலாக ஏணியிலிருந்து அவரது கால் வழுக்கியது. அவர் உச்சியிலிருந்து தடாலென்று கீழே விழுந்தார். அவர் விழுந்த சப்தம் மனைவிக்கு கேட்டு, அவர் ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தார். “என்ன சத்தம் அங்கே”? என்று திகைப்போடு கேட்டார். முல்லா மெல்ல எழுந்தபடி “ஒன்றுமில்லை.சுவருக்கு வெள்ளை அடித்த போது, சட்டை தவறி விழுந்து விட்டது” என்று மனைவியைச் சமாளிக்க முயன்றார். “சட்டைக்கா இவ்வளவு சத்தம்?” என்று கேட்டார் மனைவி. “சட்டை விழுந்தது உண்மைதான்.ஆனால் துரதிஷ்டவசமாக அந்தச் சட்டைக்குள் என் உடலும் இருந்துவிட்டது” என்றார் முல்லா!

## அட அப்படியா?



- அங்குல அளவு முறையை கிரீஸ் நாட்டவர்களே முதன்முதலில் கண்டுபிடித்தார்கள். கட்டை விரலின் அகலத்தைக் கொண்டு அளந்தார்கள். பிறகு ரோமானியர்கள் இதனை கணித முறையில் மாற்றி அங்குல அளவு முறையை முழுமைப்படுத்தினர்.
- ஆஸ்திரேலியாவில் ஒவ்வொரு நபருக்கும் தலா 10 செம்மறி ஆடுகள் வீதம் இருக்கின்றன. அதனால் தான், அங்கு எங்கு பார்த்தாலும் மக்களைவிட ஆடுகள் அதிகம் காணப்படுகின்றன.
- ஈரான் மன்னராக இருந்த ஷா, தங்கத்தால் ஆன கத்திரிக்கோலை கொண்டு தான் ரிப்பன் வெட்டி எந்த திறப்பு விழாவையும் தொடங்கி வைப்பார்.
- திருமணத்தின்போது அட்சதை (அரிசி) தூவி வாழ்த்தும் முறை எகிப்திலும் இருந்தது. “உணவு கஷ்டம் இல்லாமல் நலமோடு நீண்ட காலம் மணமக்கள் வாழ வேண்டும்” என்பதுதான் அரிசி தூவி வாழ்த்துவதன் பொருள்.

வார இதழ்
# தீபம்
"யாமார்க்கும் குடியல்லோம்"
01.09.2019 இதழ் -197
gmail:- newsdeepam19@gmail.com
விநியோகம் / விளம்பரம் TP:- 021 4927542, 0771989445

## வெறும் பேச்சுவார்த்தைகள் விழவைத் தரப்போவதில்லை!

கடந்த வார இறுதியில் தமிழ் பேசும் மக்கள் வடக்கிலும் கிழக்கிலும் தமது பாரம்பரிய வாழ்விடப் பிரதேசங்களில் தற்போது எதிர்கொண்டுவரும் பல்வேறு முக்கிய பிரச்சினைகளுக்கு நியாயமானதும் சுமுகமானதுமான தீர்வுகாணும் நோக்கிலான ஜனாதிபதிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கியஸ்தர்களுக்கும் இடையே – பலத்த எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் நடைபெற்ற பேச்சுவார்த்தை எந்தவிதமான நம்பிக்கையையும் ஏற்படுத்தாத வகையில் தோல்வியில் முடிந்துள்ளதாக கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது ஒன்றும் இலங்கை அரசியல் இயங்குநிலையை உன்னிப்பாக அவதானித்து வருவோர் எதிர்பார்க்காத விடயமல்ல. ஏமாற்றம் தரும் விடயமுமல்ல.

அதுவும் நாட்டின் புதிய தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் அண்மித்துவரும் சூழலில் நாட்டின் அதி முக்கிய பிரச்சினைகளுக்கான தீர்வுகள் குறித்து ஆராயவும் முடிவெடுக்கவும் முனைவது வெறுமனே ஒரு தந்திரோபாய மூலோபாயத்தின் அடிப்படையிலான நகர்வாகவே கருதவேண்டும். இம்மாதிரியான அரசியல் சூழலில் எரியும் பிரச்சினைகள் தொடர்பான தீர்க்கமான முடிவுகள் எடுப்பதென்பது சூர்வாளின் விளிம்பின் பேமல் நடக்கும் விடயமேயாகும்.

இப்படியான உணர்வுபூர்வமான பிரச்சினைகள் குறித்து பேச்சு நடத்தும் இரு தரப்பினருமே தமது அரசியல் எதிர்கால அபிலாஷைகளைப் பாதிக்கும் வகையிலான எந்த முடிவையும் எடுக்கமாட்டார்கள் என்பது திண்ணம்.

சந்திப்புக்கான பேசுபொருள் மக்கள் நலன் சார்ந்த மிக அத்தியாவசியமான விடயமாக இருந்தாலும் கூட அதன் மூலம் எட்டப்படக்கூடிய முடிவுகள் மத மற்றும் இனத்துவ அடிப்படையில் விட்டக்கொடுப்புகளை மனிதாபிமான மற்றும் ஜனநாயக ரீதியில் கூட ஒரு தரப்பினருக்கு அனுகூலமாக அமையுமானால் அது மறு தரப்பினரின் அரசியல் இருப்பினைக் கேள்விக்குரியதாக்கிவிடும் என்பது இலங்கையின் அரசியல் மரபாக இருப்பது பரிதாபத்திற்கும் பரிகாசத்துக்குமுரிய விடயமே.

இலங்கையின் சிறுபான்மையிரான தமிழ்பேசும் மக்களின் பிரச்சினைகள் பலவும் பல தசாப்தகால துன்பியல் வரலாற்றைக் கொண்டவையாகும்.

இந்தப் பிரச்சினைகளின் நிரந்தர இருப்பென்பதே இங்குள்ள சகல தரப்பு அரசியல்வாதிகளினதும் வாழ்வியல் மற்றும் சமூகவியல் அந்தஸ்தை காப்பாற்றிக்கொள்ள அத்தியவசியமான மூலச்சுழற்சி மையமாகும்.

மதம், மொழி, இனம் இம்மூன்றும் இலங்கையின் அரசியல் எதிர்காலத்தை தீர்மானிக்கும் இயங்குதளமாக இருப்பதே அனைத்துப் பிரச்சினைகளுக்கும் காரணம் என்பதால் இத்தாளத்தில மையம் கொண்டுள்ள ஏனைய அனைத்து பிரச்சினைகளுக்கும் ஒரு நியாயமான ஜனநாயக ரீதியிலான – நாட்டின் எதிர்கால நலனில் அக்கறைமிக்க மனிதநேயப் பண்புடன் கூடிய தீர்வைக் காண்பது மிகக் கடினமான விடயமே! இந்தக் கடினத் தன்மைக்குக் காரணம் பரந்த மனப்பான்மையற்ற அரசியல்வாதிகளின் அதிகார ஆளுமை கொண்ட ஆட்சியே ஆகும்.

இது எந்தவகையிலும் இப்போதுள்ள தேசிய மற்றும் சர்வதேச அரசியல் இயங்கு தளத்தில் இலகுவில் மாற்ற முடியாத தீவிர வாதத்தின் பாற்பட்ட அரச பயங்கரவாதச் செயற்பாட்டு நிகழ்ச்சி நிரலுக்கேற்ப வடிவமைக்கப்பட்ட விடயங்களேயாகும்.

இப்படியானால் ஏன் இந்தப் பேச்சுவார்த்தை நாடகம்?

மக்களை ஏமாற்றவா?

எல்லாவகையிலும் ஏமாற்றப்பட்டு அடக்குமுறைக்கும் ஒடுக்குமுறைக்கும் உள்ளாக்கப்பட்டு குந்தியிருக்கும் குழி நிலமும் பறிபோகும் நிலையில் வலிசுமந்த நிற்கும் தமிழ் மக்களைக் காப்பாற்றப் போவது யார்? அல்லது எது?

தலைவர்களுமல்ல... தேர்தல்களுமல்ல.

அப்படியானால்?

தமிழ் பேறும் மக்கள் தமது அரசியல் உரிமைகளுடன் கூடிய வாழ்வியல் இருப்பின் உறுதியான எதிர்காலம் பற்றிய எண்ணக் கருத்தியலை துணிந்து வெளிப்படுத்த வேண்டிய காலகட்டம் இதுதான்.

நிற்பதுவே, நடப்பதுவே, பறப்பதுவே, நீங்களெல்லாம்
சொற்பனந் தானோ?-பல தோற்ற மயக்கங்களோ?
கற்பதுவே, கேட்பதுவே, கருதுவதே, நீங்க ளெல்லாம்
அற்பமாயைகளோ?-உம்முள் ஆழ்ந்த பொருளில்லையோ?

வானகமே, இளவெயிலே, மரச்செறிவே, நீங்களெல்லாம்
கானலின் நீரோ?- வெறுங் காட்சிப் பிழைதானோ?
போன தெல்லாம் கனவினைப்போற் புதைந்தழிந்தே போனதனால்
நானுமோர் கனவோ?- இந்த ஞாலமும் பொய்தானோ?

கால மென்றே ஒரு நினைவும் காட்சியென்றே பலநினைவும்
கோலமும் பொய்களோ?- அங்குக் குணங்களும் பொய்களோ?
சோலையிலே மரங்க ளெல்லாம் தோன்றுவதோர் விதையிலென்றால்,
சோலை பொய்யாமோ? - இதைச் சொல்லொடு சேர்ப்பாரோ?

காண்பவெல்லாம் மறையுமென்றால் மறைந்ததெல்லாம் காண்ப மன்றோ?
வீண்படு பொய்யிலே - நித்தம் விதிதொடர்ந் திடுமோ?
காண்பதுவே உறுதிகண்டோம் காண்பதல்லால் உறுதில்லை
காண்பது சக்தியாம் - இந்தக் காட்சி நித்தியமாம்.








நன்றி : சிரித்திரன் சித்திரக் கொத்து

## கும்பகர்ணக் கும்பல்



# ஜி-7 மாநாடும் ஈரான் - மேற்குலக இராஜதந்திர உரையாடலும்

**கலாநிதி கே.ரீ.கணேசலிங்கம்**

பிரான்சின் பியரிட்ஸ் நகரில் நடைபெற்ற ஜி-7 உச்சிமாநாடு அதிக முக்கியத்துவம் மிக்க அரசியல் நிகழ்வுகளைப் பதிவு செய்துள்ளது. குறிப்பாக அமேசன் காட்டுத் தீ ஏற்படுத்தியுள்ள விடயத்தில் பொருளாதார வல்லரசுகளது நிலைப்பாடு, சுற்றுச் சூழல் விவகாரங்கள், ஹொங் ஹொங் போராட்டம்இ உலகப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான வழிமுறைகள், அந்நிய வர்த்தகத்தில் சுதந்திரங்கள், பாதுகாப்பு, பாலினபாகுபாடு, ஜனநாயகம்,சமத்துவம்,கல்வி, எனப் பலவிடயங்கள் விவாதிக்கப்பட்டன. இதில் ஈரான் அமெரிக்க விடயம் மேற்குலகத்தினால் கையாளப்படும் இராஜதந்திர நகர்வுகள் நிகழ்ந்துள்ளன. அத்தகைய விடயத்தினை விளங்கிக் கொள்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

2015ஆம்ஆண்டு ஈரானுடான சர்வதேச அணுத்திட்ட உடன்பாட்டிலிருந்து அமெரிக்கா விலகுவதாக அதிபர் ட்ரம்ப் அறிவித்ததிலிருந்து இவ்விடயம் அதிகம் முக்கியத்துவம் பெறத் தொடங்கியது. இது இரு நாட்டுக்குமான உறவில் பெரும் நெருக்கடிக்கு வித்திட்டது. ஈரான் மீதான பொருளாதாரத் தடையுடன் நின்றுவிடாது, ஈரானுடன் பிறநாடுகள் வர்த்தகம் மற்றும் முதலீடுகள் மேற்கொள்வதற்கும் தடைவிதித்தது அமெரிக்கா. இந்த ஒப்பந்தத்தில் அங்கம் வகிக்கும் ஏனைய நாடுகளான பிரித்தானியா, பிரான்ஸ், ரஷ்சியா, ஜேர்மனி மற்றும் சீனா ஆகியவை அமெரிக்கா - ஈரான் இடையிலான நெருக்கடியைக் கையாள ஆரம்பித்தன. குறிப்பாக அணுவாயுத உடன்படிக்கையிலிருந்து அமெரிக்கா வெளியேறினாலும், தாம் தொடர்ந்து இருக்கப் போவதாக அந்நாடுகள் அறிவித்தன. இதில் பிரான்ஸ் ஜனாதிபதி அமெரிக்க-ஈரான் நாடுகளுக்கு இடையில் மத்தியஸ்தம் செய்து நெருக்கடியை முடிவுக்குக் கொண்டுவர தீவிரமுனைப்புக் காட்டினார். இந்த சூழலிலே பிரான்ஸ்சில் நடைபெற்ற ஜி-7 மாநாட்டில் பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோனின் ஈரான் வெளியுறவு அமைச்சர் ஜாவத் ஷாரிப்புக்குத் திடீர் அழைப்பை விடுத்திருந்தார். அது மட்டுமன்றி அழைப்பினை ஏற்ற ஈரான் நேரடியாகவே மகாநாட்டிலுள்ள பிரான்ஸ் ஜனாதிபதியை சந்தித்து உரையாடியது. ஈரான் - அமெரிக்கா இடையே பதற்றம் நிலவிவரும் சூழலில், நேரடியாகவே இந்தமாநாட்டில் ஈரான் அமைச்சர் கலந்துகொண்டிருப்பது அமெரிக்க அதிகாரிகளை மட்டுமல்ல உலகத் தலைவர்களையும் வியப்பிலாழ்த்தியுள்ளது. ஆனால் இது ஒரு ஆக்கபூர்வமான சந்திப்பு என ஈரான் வெளியுறவு அமைச்சு அறிவித்துள்ளது.

இந்நிலையில் ஈரானின் வெளியுறவுத்துறை அமைச்சர் பிரான்ஸ் ஜனாதிபதி உரையாடல் பற்றிச் செய்தியாளர் மாநாட்டில் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் பின்வருமாறு தெரிவித்திருந்தார்.

“நான் பலமான ஈரானை பார்க்கவிரும்புகிறேன். ஆனால் அது ஈரானில் ஆட்சி மாற்றத்தை எதிர்பார்ப்பதாக அமையாது. ஈரானின் வெளியுறவுத்துறை அமைச்சர் முகமது ஜாவத் ஷாரிப்பை பிரான்ஸ் அழைத்ததில் ஆச்சரியம் எதுவுமில்லை. ஆனால் அவரைச் சந்திக்க நான் விரும்பங் கொள்ளவில்லை. என்றார். அதே நேரம் சரியான சூழ்நிலையில் ஈரான் அதிபர் ஹசன் ரூஹானியைச் சந்திக்கத் தான் தயாராக இருப்பதாகவும், தனக்கும் ஈரான் ஜனாதிபதி ஹசன் ரூஹானிக்கும் இடையிலான சந்திப்பை வரவிருக்கும் வாரங்களில் கற்பனை செய்வது யதார்த்தமானது என்றும் ட்ரம்ப் குறிப்பிட்டார். மேலும் ட்ரம்ப் தெரிவிக்கையில் எனக்கு ஒரு நல்ல உணர்வு இருக்கிறது, ஈரானிய அதிபர் சந்திப்பில் பங்கேற்று அவர்களின் நிலைமையைச் சரிசெய்ய விரும்புகிறார் என்று நினைக்கிறேன் என்றார் ட்ரம்ப்.

அப்பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்து கொண்ட பிரான்ஸ் ஜனாதிபதி அமெரிக்கா- ஈரான் ஜனாதிபதிகளுக்கு இடையே ஒரு சிலவாரங்களில் நேரடியாகச் சந்தித்து அணு ஒப்பந்தம் தொடர்பாக மீண்டும் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான சூழல் உருவாகும் என நம்பிக்கை தெரிவித்தார். மேலும் ஜனாதிபதி ட்ரம்ப் உடனான சந்திப்பை ஏற்றுக் கொண்டால் அணுச்சக்தி ஒப்பந்தத்தைக் காப்பாற்ற முடியும் என ஹசன் ரூஹானியிடம் தான் தொலைபேசியில் கூறியதாக மேக்ரைன் கூறினார்.




இதற்குப் பதிலளித்த ஈரான் ஜனாதி பதி ஹசன் ரூஹானி அமெரிக்கா பேச்சுவார்த்தையை விரும்பினால் ஈரான் நாட்டின் மீதான பொருளாதாரத் தடைகளை முடிவுக்குக் கொண்டு வரவேண்டும். இருதரப்பு உறவை மேம்படுத்த வேண்டுமென்றால் அமெரிக்கா தனது நிலையை ஆக்கபூர்வமாக மாற்றிக் கொள்ள வேண்டும். தற்போது அத்தனை ஆக்கபூர்வமான மாற்றத்தை ஏற்படுத்தவேண்டியது அமெரிக்காவின் முறையாகும். எனவே, பேச்சுவார்த்தைக்கு தடைக்கல்லாக இருக்கும் ஈரான் மீது விதிக்கப்பட்ட அனைத்து சட்டவிரோதமானதும் நியாயமற்றதுமான பொருளாதார தடைகளை அமெரிக்கா விலக்குதல் வேண்டும். அத்துடன் அமெரிக்கா இதனைச் செய்யத் தவறினால் எந்தவொரு சாதகமான நகர்வுக்கு இடம் இருக்காது. முன்னேற்றங்களுக்கான திறவுகோல் அமெரிக்காவின் கைகளில்தான் உள்ளது எனவும் கூறினார்.

இவ்விடயம் தொடர்பில் ட்ரம்ப் உடன் பிரான்ஸ் ஜனாதிபதி உரையாடிய போதும் சாதகமான பதிலை அவர் வெளிப்படுத்தவில்லை என்பது கவனிக்கத்தக்கது.அமெரிக்கா -ஈரான் விடயத்தை ஏன் பிரான்ஸ் உட்பட மேற்கு நாடுகள் கவனம் செலுத்துகின்றன என்பது கவனிக்கத்தக்கது.

முதலாவது குறிப்பாக ஐரோப்பாவின் எண்ணை வளம் கிடைக்கும் நாடுகளில் ஈரான் மிகப்பிரதான நாடாகும். மிக நீண்டகாலமாக இத்தகைய சந்தைவாய்ப்பினை பயன்படுத்திவந்துள்ள ஐரோப்பிய நாடுகள் அதனை தற்போது இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அதனைத் தவிர்க்கவும் பாதுகாப்பான வழிகளைப் பலப்படுத்திக் கொள்ளவும் முயலுகின்றன.


இரண்டாவது ஈரானின் பொருளாதாரம் மீதான தடையானது தனித்து ஈரானை மட்டுமல்ல உலக நாடுகளையும் பாதிப்பதாக அமைந்துள்ளது. அதிலும் எண்ணைக்கான சந்தை முற்றிலுமாக ஐரோப்பிய பொருளாதாரத்தை நெருக்கடிக்கு உள்ளாக்கியுள்ளது. பிற எண்ணைவள நாடுகள் தமது எண்ணை வளத்தின் அளவையும் விலையையும் அதிகரிக்க முயலுவது ஐரோப்பிய சந்தையைப் பாதிப்பதாக மாறிவருகிறது.

மூன்றாவது அணுசக்தி ஒப்பந்தத்திலிருந்து விலகியதன் பின்னர் ஈரானின், ஹோமோஸ் நீரிணையிலும் வளைகுடாப் பிராந்தியத்திலும் அமைதியற்ற சூழலை அதிகரித்து வருகிறது. அத்தகைய சூழலுக்குச் சர்வதேசக் கடல் மட்டத்திலுள்ள குறைபாடுகளை முன்னிறுத்தி வருகிறது. இது முழு உலக நாடுகளின் வர்த்தக நடவடிக்கைகளுக்கும் அச்சுறுத்தலாக விளங்குகிறது.

நான்கு ஈரான் வெளிநாடுகளிடமிருந்து ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதற்கு விதிக்கப்பட்ட தடைகளை எதிர் கொள்ளும் விதத்தில் தனது உள்நாட்டுத் தொழில் நுட்பத்தினை விருத்தி செய்யும் நோக்கில் பாரிய ஆயுத உற்பத்தியை ஆரம்பித்துள்ளது. அதற்குச் சீன ரஷ்சியா ஆகிய வல்லரசுகளிடமிருந்து தொழிநுட்ப உதவியைப் பெற்று வருகிறது.

ஐந்தாவதும் மிக முக்கியமானதுமான விடயம் ஈரான் அணுவாயுதச் செறிவூட்டலை மேற்கொள்ளும் அனைத்து உத்திகளையும் கொண்டிருகிறது. வெகு வேகமாக அணுவாயுதத்தைத் தயாரிக்கும் திறனுடன் இருப்பதாகவும், சவால்விடும் திறன் மட்டுமல்ல எதிர் கொள்ளும், புவிசார் அரசியலையும் ஈரான் கொண்டிருகிறது. அதனால் ஈரான் அணுவாயுத உடன்பாட்டிலிருந்து வெளியேறுவதனைத் தடுப்பதுடன் அதன் மீதான நெருக்கடியைக் குறைக்கும் தந்திரத்தை கையாள்வதன் மூலம் மேற்குலகம் ஒரு நெருக்கடிமிக்க அரசியலைத் தவிர்க்கத் திட்டமிடுகிறது.


எனவே சர்வதேச அரசியல் களத்தில் ஈரானின் உபாயங்களும் மேற்குலகின் தந்திரங்களும் பரஸ்பரம் மேதிக் கொள்ளும் நிகழ்வாகவே ஜி-7 மகாநாடு காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இதில் ஈரானின் நகர்வுகள் எதிர்கொள்ளும் பலத்துடனும், மேற்குலகத்தின் உபாயங்கள் ஈரானை தேற்கடிக்கும் திட்டத்துடனும் அமைந்துள்ளது. இதன் அடுத்த கட்டத்தை அமெரிக்காவே தீர்மானிக்க வேண்டும் என்ற ஈரானின் முடிவு அதன் முதிர்ச்சியான அரசியலை வெளிப்படுத்துகிறது.



## டில்லிக்கு என்ன சொல்ல வேண்டும்?

# இலங்கைத் தமிழ் தரப்பு இதைத் தீர்மானிக்குமா?

இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் இந்தியாவுக்குச் சென்று பிரதமர் நரேந்திரமோடியைச் சந்திக்கவுள்ளனர். கடந்த மே மாதம் இரண்டாவது தடவையாகவும் பிரதமராகப் பதவியேற்ற நரேந்திரமோடி சில நாட்களிலேயே இலங்கைக்குப் பயணம் செய்திருந்தார். அப்போது கொழும்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சந்தித்திருந்த மோடி புதுடில்லிக்கு வருமாறு அழைப்பும் விடுத்திருந்தார். இந்த அழைப்பை ஏற்று இந்தியாவுக்குச் செல்லவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிரா கூறுகின்றார். ஆனாலும் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் இலங்கையுடன் இந்தியாவுக்குத் தற்போது ஏற்பட்டுள்ள பனிப்போர் தொடர்பாகவே கலந்துரையாடல்கள் இடம்பெறவுள்ளதாக உயர்மட்டத் தகவல்கள் கூறுகின்றன.



இந்த நிலையில் புதுடில்லி செல்வதற்கு முன்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக அல்லாமல் தமிழ்த் தரப்பாக ஏனைய கட்சிகளின் பிரநிதிகளையும் அழைத்துக் கொண்டு செல்லக் கூடிய நிலைமை ஒன்றை சிவில் சமூக அமைப்புகள் உருவாக்க வேண்டுமென அவதானிகள் கருதுகின்றனர்.

அத்துடன் இந்தோ- பசுபிக் பிராந்தியத்தில் தமது பூகோள அரசியல் நலன்களுக்கு ஏற்ப இலங்கையில் அரசியல் மாற்றங்களும் அமைய வேண்டுமென இந்திய மத்திய அரசு கூறுவதைக் கேட்பதைவிட, தமிழ்த் தரப்பாக இந்தியாவுக்கு என்ன சொல்ல வேண்டும் என்பது குறித்தே தீர்மானம் எடுக்கப்பட வேண்டும்.

ஆனால் இவ்வாறன தீர்மானம் எடுப்பதற்கும் அனைத்துத் தமிழ்க் கட்சிகளையும் அழைத்துச் செல்வதற்கும் சம்பந்தன் விரும்புவாரா என்பது கேள்விதான். அழைத்து வாருங்கள் என்று இந்தியா சொன்னாலும் தமிழரசுக் கட்சியின் பழமைவாதக் கொள்கை அதற்கு இணங்குமா என்பதும் சந்தேகமே.

1985 ஆம் ஆண்டு திம்புவில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின்போது அனைத்துக் கட்சிகளும் இயக்கங்களும் முரண்பாட்டில் ஓர் உடன்பாடாகச் சென்று பேசியிருந்தன. எனவே 2009 ஆம் ஆண்டு மே மாதத்தில் இருந்து பத்து ஆண்டுகளின் பின்னரான சூழலிலாவது அவ்வாறான கட்டமைப்பு ஒன்றை உருவாக்க வேண்டிய தேவை ஒன்றை தற்போதைய பூகோள அரசியல் ஏற்படுத்தியுள்ளது.

இந்தோ - பசுபிக் பிராந்தியத்தில் அமெரிக்காவுடன் இணைந்து இந்தியா அரசியல், பொருளாதார, இராணுவ நகர்வுகளை முன்னெடுத்து வருகின்றது. அமெரிக்காவும் இந்தியாவை நன்கு பயன்படுத்துகின்றது.

குறிப்பாக 2009 ஆம் ஆண்டு மே மாதம் போர் இல்லாதொழிக்கப்பட்டதன் பின்னரான சூழலில் அமெரிக்காவும் இந்தியாவும் தமது பூகோள அரசியல் தேவைக்கா இலங்கை மீது கடும் அழுத்தங்களைப் பிரயோகிப்பதுடன். ஈழத் தமிழர்களின் அரசியல் விடுதலை தொடர்பாக இலங்கை ஒற்றையாட்சி அரசியலமைப் புக்குள்ளேயே ஏதாவது ஒரு தீர்வை முன்வைத்து விடலாம் அல்லது அது இலங்கையின் உள்ளகப் பிரச்சினை என்ற நிலைப்பாட்டில் இரு நாடுகளும் செயற்படுவதை 2015ஆம் ஆண்டுக்குப் பின்னரான நகர்வுகள் கோடிகாட்டுகின்றன.

இவ்வாறானதொரு நிலையில் புதுடில்லிக்குச் செல்லவுள்ள தமிழரசுக் கட்சியை மையப்படுத்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இந்தியா சொல்வதையே செவிமடுக்கும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

எனவே கஜேந்திரகுமார் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணி, போன்ற கட்சிகள் இந்தியாவுடன் என்ன பேச வேண்டும் என்பது தொடர்பாக வெளிப்படையாகவே கருத்துக் கூற வேண்டும். அறிக்கை வெளியிட வேண்டும்.

அத்துடன் அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கிய தமிழ்த் தேசிய இயக்கமாக தமிழ்ப் பிரதிநிதிகள் குழு ஒன்று புதுடில்லிக்குச் செல்ல வேண்டும் என சிவில் அமைப்புகள் அழுத்தம் கொடுக்க வேண்டும்.

சர்வதேச உடன்படிக்கை மூலமே காஷ்மீர் மாநிலத்துக்கு சுயநிர்ணய உரிமை வழங்கப்பட்டிருந்தது. இலங்கையின் வடக்குக்கு - கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டிருந்தமையும் சர்வதேச ஒப்பந்தமே. அதாவது இந்திய- இலங்கை ஒப்பந்தம் என்பது சர்வதேச ஒப்பந்தமாகும். அதன் மூலமே இல்ங்கைத் தீவில் மாகாண சபைகளும் உருவாக்கப்பட்டிருந்தன.

ஆனால் அந்த மாகாணங்கள் பிரிக்கப்பட்ட பின்னர் சர்வதேச ஒப்பந்தம் ஒன்றை இலங்கை மீறிவிட்டது என்று இன்று வரை இந்தியா உள்ளிட்ட எந்தவொரு நாடுகளுமே பேசவில்லை. எனினும் காஷ்மீர் மாநிலத்துக்குரிய சிறப்பு அதிகாரங்களை இந்திய மத்திய அரசு ரத்துச் செய்துள்ளமை தொடர்பாக ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையில் விவாதிக்கப்பட்டுள்ளது. இந்தியா- பாக்கிஸ்தான் ஆகிய இரு நாடுகளும் காஷ்மீர் விகாரம் தொடர்பாகப் பேச வேண்டும் எனவும் சர்வதேசம் அழுத்தம் கொடுக்கின்றது.

எனினும் ஈழத் தமிழர்களின் அரசியல் விடுதலை தொடர்பாக இலங்கையின் ஒற்றையாட்சிக் கட்டமைப்புக்குள் நின்று கொண்டு தீர்வை முன்வைக்கலாமென்ற கருத்தையே அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகள் தொடர்ச்சியாகப் பரிந்துரைக்கின்றன.

மறுபுறத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் அங்கீகாரத்துடன் காஷ்மீர் மாநிலத்திற்கு வழங்கப்பட்டிருந்த சிறப்பு அதிகாரங்களையே தன்னிச்சையாகப் பறித்தெடுத்த இந்தியா, ஈழத் தமிழர்களுக்கு எப்படி இறைமையோடு கூடிய சுயநிர்ணய உரிமையை வழங்குமாறு இலங்கை ஒற்றையாட்சி அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் என்ற கேள்விகளும் எழாமல் இல்லை.

ஆனாலும் பூகோள அரசியல் தேவைப்பாடுகளுக்குள் ஈழத் தமிழர் விவகாரத்தைக் கையில் எடுக்க வேண்டிய தேவை தற்போது இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ளது. ஏனெனில் இந்துமா சமுத்திரத்தில் இலங்கைத் தீவை முக்கியத்துவம் வாய்ந்த நாடாக அமெரிக்கா போன்ற மேற்குலக நாடுகள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற நிலைப்பாட்டை சிங்கள ஆட்சியாளர்கள் முன்வைத்துள்ளனர்.

குறைந்த பட்சம் தென்னிந்தியாவிற்குள் கூட இலங்கை ஒரு முக்கிய சக்தியாக மாற வேண்டும் என்ற எண்ணக்கருவை சிங்கள ஆட்சியாளர்கள் கொண்டிருக்கின்றனர். மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலத்திலேயே இந்த எண்ணக் கரு உருப்பெற்றிருந்தது.

ஐரோப்பாவில் நேட்டோ நாடுகளின் பாதுகாப்பு அணி இருப்பது போன்று, இந்தோ- பசுபிக் சமுத்திரத்தை மையப்படுத்திய இன்னுமோர் இராணுவப் பாதுகாப்பு அணி ஒன்றை அமெரிக்கா கட்டி முடித்துள்ளது. குவாட் (Quad) எனப்படும் இந்தப் பாதுகாப்பு அணியை அமெரிக்கா, இந்தியா அவுஸ்திரேலியா, ஜப்பான் ஆகிய நான்கு நாடுகள் இணைந்து உருவாக்கியுள்ளன. இதற்கு இந்தியாவிடமே தலைமப் பொறுப்பும் வழங்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாகவே இந்தோ- பசுபிக் பிராந்தியத்தில் இலங்கை ஒரு முக்கிய சக்தியாக மாற வேண்டும் என்ற எண்ணக்கருவை சிங்கள ஆட்சியாளர்கள் உருவாக்கிக் கொண்டார்கள்.

அமெரிக்காவுடனான சோபா உடன்படிக்கை கூட இதன் அடிப்படையிலேயே அமைய வேண்டும் என்ற நிபந்தனைகளை இலங்கை முன்வைத்துள்ளதாக கொழும்பு உயர்மட்ட அரசியல் தகவல்கள் கூறுகின்றன. பௌத்த மகாநாயக்கத் தேரர்களும் அதனை அமெரிக்கத் தூதுவரிடம் வலியுறுத்தியதாக உள்ளகத் தகவல்கள் கூறுகின்றன.

ஒரு புறம் சீனாவின் பக்கபலத்துடனும் மறுபுறம் அமெரிக்காவின் செல்வாக்கோடும் செயற்பட்டு அந்த இரு நாடுகளின் பூகோள அரசியல் தேவைப்பாடுகளுக்கு ஏற்ப இலங்கையை, குறிப்பாக வடக்குக்- கிழக்குத் தமிழ் பேசும் மக்களின் தாயகப் பகுதிகளை விட்டுக் கொடுத்து இந்தோ- பசுபிக் பிராந்தியத்தில் இலங்கையைப் பிரதான சக்தியாக மாற்றுவதே சிங்கள ஆட்சியாளர்களின் தற்போதைய நிலைப்பாடு.

இதன் காரணமாகவே இந்திய மத்திய அரசு இலங்கையோடு பனிப் போர் ஒன்றை நடத்துகின்றது. நரேந்திரமோடி இரண்டாவது தடவையாகப் பதவியேற்ற பின்னர் இலங்கைக்கு உடனடியாகப் பயணம் செய்தமை கூட இலங்கைக்கான எச்சரிக்கையாகவே சிங்கள ஆட்சியாளர்களினால் நோக்கப்பட்டது.

மாலைதீவு எப்படி இந்தியாவின் முழுமையான கட்டுப்பாட்டுக்குள் இருக்கின்றதோ அதேபோன்று இலங்கையும் இருக்க வேண்டும் என்ற செய்தியையே நரேந்திரமோடி கொழும்புக்கு வந்ததன் மூலம் சிங்கள ஆட்சியாளர்களுக்குக் கொடுத்திருந்தார்.

எனவே இந்தப் பனிப்போருக்கு மத்தியில் தமிழ்த்தரப்பு இராஜதந்திரமாகச் செயற்பட்டு ஈழத்தமிழ் மக்களின் அரசியல் விடுதலைக்கான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கான நகர்வுகளை முன்னெடுக்க வேண்டும்.

இதன் பின்புலத்திலேதான் அடுத்தவாரம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு டில்லிக்குப் பயணிக்கும்போது, அனைத்துத் தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளையும் அழைத்துக் கொண்டு செல்லவேண்டுமென அவதானிகள் கருதுகின்றனர்.

இந்திரகாந்தி காலத்தில் இருந்து இந்தியாவை சிங்கள ஆட்சியாளர்கள் எப்படி ஏமாற்றினார்கள் என்பது குறித்தும் இலங்கை ஒற்றையாட்சி அரசின் புனைகதைகளை நம்பி இந்தியா ஈழத் தமிழ் மக்களின் அரசியல் விடுதலையில் அவசியமற்ற அச்சமான சூழல் ஒன்றைத் தாமே உருவாக் கிச் செயற்பட்டதனால் இன்று ஏற்பட்டுள்ள விளைவுகள் தொடர்பாகவும் தமிழ்த் தரப்பு எடுத்துக் கூற வேண்டும்.

இலங்கை ஒற்றையாட்சி அரசின் சாதாரண கட்சி அரசியலுக்குள் நின்று மோதுப்படாமல், தேர்தல் அரசி லுக்கான தயார்ப்படுத்தல்களில் மாத்திரம் ஈடுபடாமல் எழுபது ஆண்டுகால அரசியல் போராட்டத்தின் அனுபவங்கள் ஊடே இந்தியா, அமெரிக்கா போன்ற சர்வதேச நாடுகளை எப்படி அணுகுவது என்ற நிலையை தமிழ்த் தரப்பு உருவாக்க வேண்டிய காலகட்டமிது.

இலங்கை அரசியலில் பௌத்த மகாநாயக்கத் தேரர்கள் செல்வாக்குச் செலுத்துகின்றனர் என்பதை தமது இலங்கை குறித்த அரசியல் அனுபவத்தின் ஊடே அறிந்து கொண்ட அமெரிக்கா, இன்று மகாநாயக்க தேரர்களையும் சந்தித்து விளக்கமளித்து வருகின்றது.

மகாநாயக்க தேரர்களோடும் பேசினால் மாத்திரமே இலங்கைத் தீவில் தமது பூகோள அரசியல் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியும் என்பதை அமெரிக்கா உணர்ந்து கொண்டது போன்று வடக்குக்- கிழக்கில் ஈழத் தமிழர்களின் பிரதிநிதிகளோடும் பேசி அவர்களின் அரசியல் விடுதலைக்குரிய ஏற்பாடுகளை செய்தால் மாத்திரமே தமது அரசியல் நலன்களை எட்ட முடியும் என்ற அவசியத்தை உணரத்த வேண்டும்.

2009 ஆம் ஆண்டு மே மாதத்திற்கு முன்னரான சூழலில் அமெரிக்கா, சீனா, இந்தியா போன்ற நாடுகள் இந்தோ- பசுப் பிரந்தியத்தில் செல்வாக்குச் செலுத்த முடியாத நிலைமை ஒன்று இருந்தது.

- நன்றி : கூர்மை

# பொங்கி எழும் காஷ்மீர் இளைஞர்கள் திணறும் மோடி அரசின் அடக்குமுறை


மாசிலான்

இந்தியாவின் பொருண்மிய நிலை எழுபதாண்டுகளில் இல்லாத அளவு அதலபாதாளத்துக்குச் சென்றுவிட்டது என்று அரசின் நிதிப்பராமரிப்புக் குழுவின் பிரதித் தலைவர் அறிவித்துள்ளார் அதாவது அமைச்சர்கள் ஒத்துக்கொள்ளாமல், கூறாமல் இருக்கும்பொழுது உயர்மட்ட அதிகாரிகள் உண்மைகளைச் சொல்லியுள்ளனர். பல்வேறு தொழில்களும் முடங்கிக்கொண்டு போகின்றன. மகிழுந்து உற்பத்தி, உந்துருளி உற்பத்தி என்பன பாதி அளவு குறைந்துவிட்டன. இதனால் வேலை இழப்பு பல இலட்சங்களையும் தாண்டிப் போய்க்கொண்டிருக்கிறது என்று புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. மோடி அரசு உண்மைகளை மூடி மறைக்க முடியாமல் மக்களைத் திசை திருப்பும் நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

மோடி தனது அரசின் பொருளாதாரச் சிதைவை மறைப்பதற்கு முதலில் முதலாக் சட்டத்தைக் கொண்டு வந்து இஸ்லாமியர்களின் எதிர்ப்பையும் அதை மாற்றும் வகையில் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தையும் கொண்டுவந்து கவனத்தை திசை திருப்பினார். அடுத்துக் காஷ்மீரின் சிறப்புத் தகுதியில் கைவைத்தார் ஆனால் காஷ்மீர் அவர் நினைத்ததுபோல் கொந்தளித்து அடங்கிவிடவில்லை. உடனே அதைத் திசைதிருப்ப ப.சிதம்பரத்தைக் கைது செய்தார். இதன் எதிரொலியாக எதிர்ப்புகள் குறிப்பாக தமிழ்நாட்டில் எழுந்த நிலையில் தீவிரவாதிகள் தமிழ் நாட்டிற்குள் ஊடுருவதாக இப்பொழுது புதிதாக செய்தி விடுக்கப்பட்டு சிதம்பரத்தின் கைது திசை மாற்றம் செய்யப்படுகிறது. இவ்வாறு எவ்வளவு காலத்திற்குக் கொண்டு செல்வார்கள் என்பது தெரியவில்லை. ஆனால் ஒன்றை மாற்றி ஒன்றைச் சொல்லிக்கொண்டே போவார்கள்.

ஆனால் காஷ்மீரில் என்ன நடக்கிறது என்பது வெளியில் தெரியவராமல் தணிக்கை செய்யப்பட்டுள்ளது. தகவல் தொடர்புக் கிடையாது ஐயாயிரத்துக்கும் அதிகமானோர் அங்கு கைது செய்யப்பட்டுச் சிறையிலோ தடுப்புக் காவலிலோ வைக்கப்பட்டுள்ளனர். முன்னாள் முதல் அமைச்சர்கள், அமைச்சர்கள் பலரும் தடுத்தே வைக்கப்பட்டுள்ளனர். எதிர்க்கட்சி அரசியல் தலைவர்கள் காஷ்மீருக்குள் செல்வதற்குத் தடை தொடர்கிறது. ராகுல் காந்தி தலைமையில் எதிர்க்கட்சிக்குழு கடந்த சனிக்கிழமை 2019-08-24 இல் காஷ்மீருக்குப் புறப்பட்டது. அக்குழுவினர் சிறிநகர் வானூர்தி நிலையத்தில் வைத்தே திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். இதற்கு முன்னரும் சென்ற அரசியல் கட்சித் தலைவர்கள் திருப்பியே அனுப்பப்பட்டுள்ளனர். ராகுல் காந்தியை காஷ்மீருக்கு வருமாறு அழைத்தவரும் அம்மாநில ஆளுநரே ஆகும். ஆனால் அவர் அங்கு சென்றதும் உடனடியாக திருப்பி அனுப்பப்பட்டுள்ளார். இது எதனைக் காட்டுகிறது. உண்மையில் காஷ்மீர் மக்கள் டெல்கி அரசின் நடவடிக்கைகளை ஏற்கவில்லை அங்குள்ள நிலைமைகளை வெளி உலகம் கண்டுகொள்ளக்கூடாது என்பதுடன் இந்தியப்படைகள் அங்கு செய்யும் மனித உரிமை மீறல்களும் வெளியில் வந்து விடக்கூடாது என்பதாலுமே ஆகும்.

இந்திய ஊடகங்கள் இந்திய அரசின் கட்டுப்பாட்டை மீற முடியாமல் அரசு கூறும் உண்மைக்குப் புறம்பான செய்திகளை காஷ்மீர் வழமைக்குத் திரும்புகிறது என்று எழுதிக்கொண்டும் சொல்லிக்கொண்டும் இருக்கின்றன. உண்மை நிலை இவற்றிற்கு முற்றிலும் நேர்மாறானதாகவே இருக்கிறது. அமெரிக்க டைம்ஸ் இதழின் செய்தியாளர் அங்கு சென்று உண்மையான நெஞ்சை உருக்கும் செய்திகளையும் அங்குள்ள மக்கள் எதற்கும் அஞ்சாமல் தங்கள் உரிமைகளுக்காகக் குரல் கொடுப்பதையும் வெளி உலகத்திற்குக் காட்டியுள்ளனர். வீதிகளில் மக்கள் ஆர்ப்பாட்டங்கள் நடத்தினால் அவர்களைக் கலைக்க எறியும் கண்ணீர்ப்புகைக் குண்டுகளை இந்தியப்படைகள் வீடுகளுக்குள்ளும் வீசுகின்றனர். வீடுகளுக்குள் விழுந்து வெடிக்கும் அக் குண்டுகளால் உள்ளே இருக்கும் பெண்கள் மூச்சுத் திணறி இறந்த நிகழ்வுகளை அச்செய்தியாளர் புட்டுக்காட்டியுள்ளார். பெல்லட் குண்டுகளால் காயப்பட்ட இளைஞர்கள் காயங்களுடன் அறுவைச் சிகிச்சை செய்யப்பட வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். ஆர்ப்பாட்டங்களில் கலந்துகொண்ட இளைஞர்கள் சிறைப்பிடிக்கப்பட்டு கொண்டு செல்லப்பட்டுள்ளனர் ஆனால் அவர்கள் எங்கே? உயிருடன் இருக்கிறார்களா? என்று கூடத் தெரியாது அவ்விளைஞர்களின் பெற்றோர் பெரும் துயரத்தில் இருக்கிறார்கள் என்று அச்செய்தியாளர் கூறுகிறார். அது மட்டுமல்ல இந்தியப் படையினர் கதவைத் தட்டுவார்களாம் திறந்தவுடன் துப்பாக்கியால் சுட்டுவிட்டுச் சென்று விடுகிறார்களாம்.



இவற்றை நோக்கும் பொழுது அமைதி காக்க வந்த இந்தியப் படைகள் இங்கு தமிழ் மக்கள் மேல் நடாத்திய அட்டூழியங்களே நினைவுக்கு வருகின்றன. அன்றும் அப்பாவி மக்கள் தங்கள் வீடுகளில் இருந்து சமாதானப் படைதானே ஒன்றும் செய்யாது என்று எண்ணி கதவுகளைத் தட்டி, கதவைத் திறந்ததும் எதுவும் கேட்காமல் கண்டபடி சுட்டுக்கொலை செய்த நிகழ்வுகள் தான் நினைவுக்கு வருகின்றன. இவ்வாறு எண்ணாயிரம் வரையிலான அப்பாவிகளை இந்த மண்ணில் கொன்று குவித்தது இந்திய இராணுவம். அதேபோல் தான் இளைஞர்கள் ஏன் கைது செய்யப்படுகிறார்கள் என்று தெரியாமலே கொண்டு செல்லப்பட்டனர். அவர்களில் வீடு திரும்பியோர் எவருமில்லையே. அப்பொழுதும் காணாமல் ஆக்கப்பட்டோர் பட்டியல் இருந்தது தான் உண்மை. எனவே இஸ்லாமியர்களின் வெறுப்பை வளர்த்து வரும் மோடி அரசு காஷ்மீரில் எவ்வாறு நடந்துகொள்ளும் என்பது இங்குள்ள எமக்கு எழுதித்தான் தெரிய வேண்டியதில்லை.

இங்கு தனக்கு வேண்டிய ஈ.பி.ஆர்.எல்.எவ் வை கைக்குள் வைத்து மாகாண ஆட்சியையும் அவர்களிடம் கொடுத்து விட்டு அதுவும் அவ்வமைப்பின் தலைவரிடம் கொடுக்காது தனது நாட்டு வம்சாவழியில் வந்தவருக்கு முதலமைச்சர் பதவியைக் கொடுத்து தமிழினத்திக்குச் செய்த கொடுமைகளையும் மண்டையன் குழுவின் அட்டூழியங்களையும் கண்ட எமக்கு காஷ்மீரில் என்ன நடக்கும் என்பது புரிந்துகொள்ளக்கூடியதே. ஆனால் அங்கு மக்கள் அனைவரும் ஒன்றுபட்டே நிற்கிறார்கள். இங்கு இருந்தது போல் ஆட்சியாளருக்குத் துணை போகும் சில்லறைகள் அங்கு கிடையாது. மிகவும் எழுச்சியுடன் மக்கள் தங்கள் எதிர்ப்பை வெளியிட்டு வருகிறார்கள். இந்திய அதிகாரிகள் மக்களின் எழுச்சியைக் கட்டுப்படுத்த முடியாமல் திணறுவதாக அந்த அமெரிக்க ஏடு தெரிவிக்கிறது.

வெள்ளிக்கிழமைகள் என்றால் மக்கள் திரண்டு வழிபாடு செய்யும் நாளாகும். ஆனால் அது கடந்த சில வாரங்களாகத் தங்கள் எதிர்ப்பைக்காட்டும் நாளாக வீதிகள் எங்கும் திரண்டு தங்களின் எழுச்சியை காட்டும் நாளாக மாறிவிட்டது. இந்தியாவிற்கு எதிரான ஊர்வலங்களையே அப்பொழுது காண முடிகிறது. இந்தியாவிற்குக் கூறுகிறோம் நாம் ஒடுங்கி அடிபணிந்து போகும் மக்களல்ல. இப்பொழுது நாம் வெற்றி கொள்ளவில்லை என்றால் நாம் முற்றாக அழிந்தே போவோம். நான் உயிர் வாழ்கிறேன், சுதந்திரத்துக்காக, எனது சவப்பெட்டியில் எழுதுங்கள் சுதந்திரம் என்று குரல் எழுப்பியவாறு மக்கள் வெள்ளிக்கிழமைகளில் தங்கள் உணர்வெழுச்சியை காஷ்மீரில் காட்டி வருகின்றனர்.

எங்கும் இந்திய இராணுவத்திற்குப் பெரும் எதிர்ப்பு வலுத்து வருகிறது. இளம் பெண்கள்கூட கையிலே கற்களை ஏந்திப் போராடி வருகிறார்கள். பல இடங்களில் இதைக் காணமுடிகிறது. ஆனால் இளைஞர்கள் இனிமேல் எமக்குத் துப்பாக்கிதான் ஆயுதம் என்று குரல் கொடுத்து வருவதையும் காணக்கூடியதாக இருக்கிறது. இதற்கு முன்னர் அமைதியாக இருந்த காஷ்மீர் இப்பொழுது கொதி நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டது. எங்கும் ஆர்ப்பாட்டங்களும் எழுச்சி ஊர்வலங்கள் தான் காஷ்மீர் வீதிகளில் காணக்கூடியதாக இருக்கிறது.

இன்று காஷ்மீரில் உள்ள நிலைமையையும் அமைதிப்படை என்ற பெயரில் இங்கு இந்தியப் படைகள் வந்தபொழுது இருந்த நிலையையும் நாம் சற்று நோக்கினால் அங்கு என்ன நடக்கிறது என்பது புலனாகும்.

ஆனால் அங்கு ஒரு சிறப்பு என்னவென்றால் அங்கு அடிமை வாழ்வுக்கு ஆதரவு தெரிவிக்கும் குழுக்களும் கிடையாது அமைப்புக்களுக்கு கிடையாது. இங்கு தான் பல்வேறு தரப்பினர் இந்தியாவிற்கும் கொழும்பு ஆட்சியாளருக்கும் அடிமையாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர். ஆனால் முழுக் காஷ்மீரும் ஒன்றாகக் குரல் கொடுக்கிறது. தங்களின் விடிவுக்காக.

காஷ்மீரிலே தான் உலகத்திலேயே முற்போக்கான இஸ்லாமியப் பெண்கள் இருக்கிறார்கள். உயர் கல்வியிலும் உயர் தொழில்களிலும் அங்கு பெண்கள் பெற்றுள்ளஉரிமைகள் பங்குகள் இந்தியாவின் பல மாநிலங்களில் கூடக்கிடையாது. மோடியின் கோட்டையான குஜராத்தில் இல்லாத கல்வி வளர்ச்சியில் காஷ்மீர் பெண்கள் உள்ளார்கள் என்பது தான் உண்மை காஷ்மீர் நல்ல வளர்ச்சியில் இருக்கிறது. இதை எல்லாம் மூடி மறைத்துதான் மோடி அரசு காஷ்மீரை வளர்ச்சிப் பாதைக்கு அழைத்து செல்வதற்காக நடவடிக்கை மேற்கொண்டதாகப் பரப்புரை செய்கிறது. இப்பொழுது அப்பெண்களின் கைகளில் இந்திய இராணுவத்தை நோக்கிக் குறிபார்க்கும் கற்கள் இருப்பதை டைம்ஸ் செய்தியாளர் காட்டுகிறார். இந்தக் கற்கள் நாளை வேறு வடிவமும் பெறலாம். அடக்குமுறைக்கு அடிபணிந்தால் தாம் முற்றாக அழிந்து விடுவோம் என்ற குரல் அங்கு அனைவராலும் ஓங்கி ஒலிக்கப்படுகிறது. இக்குரல் ஓயப்போவதில்லை என்பது தெரிகிறது. மக்கள் திரள்திரளாக வீதிகளில் இந்திய எதிர்ப்புக் குரல்களுடன் செல்வது அம்மக்களின் துணிவையும் ஒர்மத்தையும் காட்டுகிறது.

இவ்வாறு எழுச்சி கொண்ட காஷ்மீரின் நிலைமையை மக்கள் அறியாவண்ணம் பல திசை திருப்பும் நடவடிக்கைகளில் இந்திய அரசு இறங்கி இருக்கிறது. ஆனால் தலைவலி போய் திருகு வலி நிலைக்குள் இந்தியா தள்ளப்பட்டு விட்டதை டைம்ஸ் ஏடு தெளிவாக்கி உள்ளது. இச்செய்தி உலகெங்கும் பரவும் பொழுது உலகமும் விழித்துக் கொள்ளும்.

காஷ்மீரின் மாநில உரிமைகளைப் பறித்தது போன்று இந்திய மாநிலங்களின் உரிமைகளையும் மெதுவாகப் பறிக்கும் வழியிலேயே மோடி அரசு பயணிக்கிறது. இவ்வாறான செயல் இந்தியாவின் தேசிய இனங்களின் எழுச்சிக்கு வித்திடும் அப்பொழுது இந்தியாவை உடைத்த பெருமையை மோடி அரசு பெற்றுக்கொள்ளும்.

# சாயம்போன சிவப்புக்களின் புதிய மணியோசை

பகலவன்


தமிழரைப் பொறுத்தவரை இடதுசாரி அரசியலுக்குக் கொள்ளி வைத்து, சாம்பலைக் கரைத்து எலும்பையும் கடலில் வீசியாயிற்று. தொடர்ந்து அந்தியேட்டி திவசமும் முடித்தாயிற்று. கொள்ளி வைத்த பரம்பரை போய் அடுத்த தலைமுறை நடமாடுகிறது. இப்போது கடற்கரையில் ஒதுங்கிய இடதுசாரி எலும்பை எடுத்து அதற்கு ஒட்சிசன் கொடுத்து உயிர்ப்பிக்க முயற்சி எடுக்கப்படுகிறது.

"இரு மொழியெனின் ஒரு நாடு ஒரு மொழியெனின் இரு நாடு" என முழக்கமிட்டார் பாராளுமன்றில் சமசமாஜக் கட்சியின் உறுப்பினர் கொல்வின் ஆர்.டி.சில்வா. பின்னர் நடைமுறையில் இந்த சமத்துவச் சிந்தனையெல்லாம் சிங்களவர்களிடம் வேலைக்காகாது என்பதை உணர்ந்தார் அவர். அதன் பின் சிங்களம் மட்டும் சட்டத்தைக் கொண்ட வந்த பண்டாரநாயக்காவின் துணைவியார் சிறிமாவோ அம்மையாரின் கூட்டணியில் இணைந்து கொண்டார். இதற்கு முன்னதாகவே "தோசே வடே அப்பிட்ட எப்பா" (தோசை வடை எமக்கு வேண்டாம்) என இனவாதக் கோஷத்துடன் ஊர்வலம் வந்தனர் இக்கட்சியினர்.

கொல்வின் ஆர்.டி.சில்வாதான் 1972 இல் கொண்டுவரப்பட்ட புதிய அரசியல் யாப்பின் பிதாமகர். தமிழரை இரண்டாம் தரப்பிரஜைகள் ஆக்கும் இந்த யாப்பினை தமிழர் ஏற்கவில்லை என்பதை அறிவித்துவிட்டு தனது எம்.பி பதவியை இராஜினாமா செய்தார் தந்தை செல்வா. இந்த வெற்றிடத்துக்கான இடைத்தேர்தலை சுமார் இரண்டரை வருடம் இழுத்தடித்தது கொல்வின் டாக்டர் எஸ்.ஏ விக்கிரமசிங்க சிறிமாஅரசு. இந்த யாப்பு சபைக்கு கொண்டுவரப்பட்ட சமயம் யாழ்ப்பாணத்தில் இருந்து கம்யூனிஸ்ட் தலைவர் வைத்திலிங்கம் தலைமையிலான இடதுசாரிகள் குழு ஒன்று பலமணிநேரம் கொல்வினுக்கு விளக்கியும் கெஞ்சியும் பார்த்தது. கொல்வின் தன்நிலைப்பாட்டில் இருந்து கொஞ்சமும் இறங்கிவரவில்லை. இத்துடன் சமசமாஜக் கட்சி என இனங்காணப்பட்ட அருளம்பலம் விஸ்வநாதன் போன்றோரின் குரல்கள் அடங்கிப்போயின.

பின்னர் நவ சமசமாஜக் கட்சி பிரமுகர் வாசுதேவ நாணயக்கார 1982 இல் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டார். அவர் யாழ்ப்பாணத்தில் சுமார் 2000 வாக்குகளைப் பெற்றார். பின்னாளில் இவர் சந்திரிகாவுடன் இணைந்து மீண்டும் எம்.பியானார். சந்திரிகாவின் கணவர் விஜேகுமாரணதுங்காவின் கட்சியைச் சேர்ந்த பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திர மற்றும் சில பிக்குகளுடன் புலிகளைத் தேடி வந்தார். வன்னித் தளபதி சூட்டி இவர்களை வரவேற்று உபசரித்தபின் கிளாலி நீரேரியூடாக யாழ்ப்பாணத்துக்கு அனுப்பிவைத்தார். அங்கிருந்து திரும்பிய இவர்களை வவுனியாவில் காத்திருந்து வரவேற்றனர் மக்கள். அவர்கள் மத்தியில் உரையாற்றிய பாரத லக்ஸ்மன் "யுத்தம் தேவையெனச் சொல்வோர் யாழ்ப்பாணத்துக்கு ஒருமுறை நேரில் சென்று பார்க்கட்டும்" எனச் சொன்னார். பின்னர் யாழ்ப்பாணம் அரச படைகளிடம் வீழ்ந்ததும் கொழும்பு சென்ற அனுருத்த ரத்வத்தைக்கு முதலில் மலர் மாலை சூட்டி கட்டித்தழுவி வரவேற்றவரும் அவர் தான். (துமிந்தசில்வா தலைமையிலான குழுவினரால் சுட்டுப்படுகொலை செய்யப்பட்ட இவரது மகள் தான் கிருணிகா) அடுத்தது இடதுசாரியாக நடித்துவந்த வாசுதேவ நாணயக்கார தனது முகமூடியை கழற்றி விட்டு சிங்களவராகவே தன்னை இனங்காட்டியதும் தமிழரால் இலகுவில் மறக்க முடியாதவை. இந்தக் கட்சியின் தற்போதைய தலைவர் திஸ்ஸவிதாரண இப்போது தமிழரின் மறதிமீது நம்பிக்கை வைத்து புதுநாடகம் ஒன்றை அரங்கேற்ற முனைகிறார்.

"தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது தொடர்பான இணைப்பாளரான என்னைத் தற்போது மஹிந்த நியமித்துள்ளார். எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் என்மீது நம்பிக்கை வைத்து தமிழ் மக்கள் கோத்தாவை ஆதரிக்க வேண்டும்" என யாழ்ப்பாணத்தில் தெரிவித்துள்ளார். 2006 ஆம் ஆண்டு இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வுகாண முயற்சிக்கிறேன் என உலகுக்கு காட்ட இவரது பொறுப்பில் சர்வகட்சிப் பிரமுகர்கள் குழு என்ற கட்டமைப்பை உருவாக்கினார் மஹிந்த. 14 கட்சிகள் 63 தடவைகள் கூடி இனப்பிரச்சினை தீர்வுக்கான முன்மொழிவுகள் அடங்கிய அறிக்கையினை 2008 ஜனவரி 31 அன்று மஹிந்தவிடம் கையளித்தன. யுத்தத்தில் வெற்றி கண்டதும் மஹிந்தவின் குப்பைக் கூடை பாரமாகியது. அறிக்கை அதற்குள் தான் இருந்திருக்க வேண்டும். "ஒரே நாடு ஒரே இனம்" என்று வியாக்கியானம் கொடுத்துவிட்டார் மஹிந்த. இப்போது வெண்ணிலா கபடிக்குழு படத்தை நினைவூட்டுகிறார் திஸ்ஸவிதாரண. 40 பரோட்டா சாப்பிட வேண்டும் என்று பந்தயம். கணக்கில் மோசடி செய்துவிட்டார் கடை ஊழியர். "சாப்பிட்ட எனக்கு கணக்கு தெரியாதா? இதை ஏற்க முடியாது.



மறுபடியும் முதலில் இருந்து சாப்பிடுகிறேன் கொண்டுவா பரோட்டாவை" என்பார் சூரி (இதற்குப் பிறகே இவருக்கு பரோட்டா சூரி என்ற பெயர் வந்தது) அதே பாணியிலேயே "போர் முடிந்து குறுகிய காலம் என்பதால் தமிழ் மக்களின் சமூக பொருளாதார விடயங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கவேண்டும் என்ற காரணத்தினாலேயே அந்த யோசனைத்திட்டத்தில் மஹிந்த கவனம் செலுத்தவில்லை" என்று சப்பைக்கட்டு கட்டுகிறார்.

இவரைப் போலவே டக்ளசும் கூறுகிறார். தன்னை நம்பி கோத்தாவுக்கு வாக்களிக்கட்டுமாம். சிவாஜிலிங்கம் பாணியில் யுத்தத்தால் கொல்லப்பட்ட உயிர்களுக்காக முள்ளிவாய்க்காலில் நினைவுச் சதுக்கமாம். இனப்பிரச்சினைக்குத் தீர்வாம். ஒரு இலட்சம் பேருக்கு வேலையாம். அத்துடன் ஜோக் ஒன்றும் அடித்தார். "நாங்கள் யாரை நம்புகிறோம் என்பதற்கு அப்பால் நாங்கள் எங்களை நம்புகிறோம். நாங்கள் சொல்வதையே கடந்த காலத்தில் செய்து வந்தோம்" என்கிறார் அவர். சிறீதர் தியேட்டரை தாண்டிச் செல்லும் போது உள்ளே "மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி எக்காலத்திலும் பிரிக்க முடியாத வடக்கு கிழக்கு இணைப்பு முஸ்லிம்களுக்கு ஓர் அலகு" என்று எழுதப்பட்டிருந்ததை முன்னர் காணமுடிந்தது. தற்போது அந்த வாசகங்களை காணமுடியவில்லை.

அரசியல் கைதிகளுக்கு விடுதலையாம். அமைச்சராக இருந்த போதே இவரது கட்சியின் மன்னார் மாவட்ட அமைப்பாளர் ஹரிச்சந்திரா, யாழ்.மாநகர சபை உறுப்பினராக இருந்த முருகையா கோமகன் ஆகியோரையே இவரால் விடுவிக்க முடியவில்லை. (கோமகன் கைதாகி ஒருவருட பூர்த்தியை யாழ் மாநகர சபையில் கேக் வெட்டிக் கொண்டாடினார் அப்போதைய முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா) காணியற்றோருக்கு காணியாம். அதைத்தான் நாவற்குழியில் பார்த்தோமே. அடாவடியாக வீடமைப்புத் திட்ட வீடுகளை ஆக்கிரமித்த சிங்களவர்கள் இவருக்கு நன்றி தெரிவித்து பனர் கட்டியிருந்தார்கள். இப்போது ஒரு விகாரையும் வந்துவிட்டது. முதலில் படையினரின் வசம் உள்ள பொது மக்களின் காணிகளை விடுவிக்கட்டும். அதேபோல ஶ்ரீதர் தியேட்டரையும் உரியவர்களிடம் ஒப்படைக்கட்டும். ஒரு காலத்தில் செந்தோழர், செந்தணல், செஞ்சுவர் (யாழ். போதனா வைத்தியசாலை பின்பக்கம்) போன்ற சொற்கள் மூலம் ரசியாவின் தத்துப்பிள்ளைகள் தாங்கள் என உணர்த்த முயன்ற அமைப்பின் இராணுவத்தளபதி இவர் என்பது குறிப்பிடத்தக்கது. தோழர் என்ற புனிதமான சொல்லையே அசிங்கமாகப் பார்க்கும் நிலை இவர்களால் தான் ஏற்பட்டது.

இதற்குள் சிங்களவர்களை குழப்புவோம் என்று முயற்சிக்கின்றனர் சிலர். எல்லாவற்றிற்கும் முதல் இது 2019 என்பதை நினைவில் கொள்ளவேண்டும். 2006 இல் கிளிநொச்சி பரவிப்பாஞ்சானில் இருந்து ஏதாவது சொன்னால் வடகிழக்கும் ஏற்கும். அதற்கும் அப்பால் மலையகம் கொழும்பு போன்ற இடத்தில் இருந்த கணிசமான தமிழரும் ஏற்பர். அதுபோன்ற நிலை இப்போதில்லை. அன்றிருந்த சூழலில் "ரணிலும் மஹிந்தவும் சிங்கள வாக்காளர் இடையே சமஅளவு செல்வாக்குடன் உள்ளனர். எவராலும் 50 வீதத்துக்கு மேற்பட்ட வாக்குகளைப் பெறமுடியாது. எனவே சிறுபான்மையினர் அளிக்கும் வாக்குகளே ஆட்சியாளரை தீர்மானிக்கும். நாம் தமிழர் தரப்பில் ஜனாதிபதி வேட்பாளராக சம்பந்தன் ஜயாவை களமிறக்குவோம். அவருக்கு எதிரே ஒன்று எனக் குறிப்பிடச் சொல்வோம். ரணிலுக்கு எதிரே 2 எனக் குறிப்பிடச் சொல்வோம். 50 வீத வாக்கு எவருமே பெறமுடியாத நிலையில் இரண்டாவது தெரிவை கணக்கிட நேரிடும் அதில் நிச்சயம் ரணில் வெற்றியீட்டுவார். சிறுபான்மையினரின் வாக்கால் பதவிக்கு வந்தவர் என்ற வகையில் எமது தரப்பு கோரிக்கையை அவரால் நிராகரிக்க முடியாது என்றார் பிரபல அரசியல் ஆய்வாளர் மு.திருநாவுக்கரசு. இந்த யோசனை பரிசீலிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. அதுபோன்ற நிலை இன்றில்லை. இன்றோ டக்ளஸ், பெருமாள், பிள்ளையான், கருணா, போபாலகிருஷ்ணன் எல்லோரும் கோத்தா பக்கம். மக்களுக்கு இழப்பில்லாமல் யுத்தத்தை நடத்தி முடித்தமைக்காக அரசுக்கு பாராட்டுப் பத்திரம் வழங்கிய சித்தாத்தனும் கோத்தாவை சென்று சந்தித்துள்ளார். (காணிவிடுவிப்பு தொடர்பாக ஜனாதி பதியை சந்திக்க மட்டும் அவருக்கு நேரம் கிடைக்க வில்லை) கோத்தாவை எதிர்த்து வெற்றிபெறக் கூடிய வேட்பாளருக்கு தமிழர் வாக்களித்துவிடக் கூடாது என்பதற் காகவோ என்னவோ தேர்தலை புறக்கணிக்க வேண்டும் என முன்னணியினர் கருதுகின்றனர் போலத் தெரிகிறது.

இந்த நிலையில் ஜே.வி.பி வேட்பாளருக்கு முதலாம் இலக்கத்தை இடுமாறு யோசனை முன்வைக்கப்படுகிறது. இரண்டாம் இடம் தொடர்பாக பேரம் பேசலாம் என்ற கருத்து அதில் தொனிக்கிறது. எந்த நிபந்தனையுமின்றியே தங்கத் தட்டில் வாக்குகளை அள்ளிக் கொடுப்பது ஏற்புடையதாகத் தெரியவில்லை. ஜே.வி.பியின் கடந்த கால வரலாறு தமிழருக்கு எதிரானதே. வடகிழக்கு இணைப்பு, சுனாமிக் கட்டமைப்பு போன்றவற்றை நீதிமன்றின் துணையுடன் இல்லாமல் செய்தவர்கள் இவர்கள். சிங்களவரின் பொருளாதாரத்தை சுரண்டுபவர்கள் என்று கருதி சினிமாஸ் லிமிட்டெட் அதிபர் கே.குணரத்தினத்தையும் சீனி இறக்குமதியாளர் சண்முகத்தையும் சுட்டுக் கொன்ற வர்கள். ஏன் ஒரு தமிழரின் தலைமைக்கு கீழ் (சீனக் கம்யூனிக்கட்சித் தலைவர் சண்முகதாசன்) இருக்க முடியாது எனத் தீர்மானித்தே தனிஇயக்கம் தொடங்கியவர் றோகண விஜேயவீர. இந்த இயக்கத்தின் அனுதாபியாக இருந்ததால் தான் மைத்திரியும் கைது செய்யப்பட்டு மட்டு சிறையில் அடைக்கப்பட்டார். மலையக மக்கள் இந்தியா வின் ஏஜெண்டுகள் என்பது றோகணவின் அபிப்பிராயம். றோகணவின் கருத்துகள் அடங்கிய உரையின் ஒரு பகுதியை 'சோசலிச தமிழீழத்தை நோக்கி'... எனும் நூலில் பின்னிணைப்பாக வெளியிட்டுள்ளார் அன்ரன் பாலசிங்கம். சவேந்திரா சில்வாவை இராணுவத் தளபதியாக நியமித்தமை தொடர்பில் யானை, மொட்டு, கை பாணியிலேயே மணியும் ஒலிக்கிறது.

நாம் சிங்களவரை குழப்புவதாக எண்ணி நாமே முட்டாள் ஆகக் கூடாது. சிங்களவர்கள் தமக்குள் எவ்வளவு மோதல் என்றாலும் தமிழரை ஒடுக்குவதில் நேர்கோட்டிலே நிற்பர். முஸ்லிம்களும் அரசியலில் தம்மைப் பற்றிய கணிப்பீடுகளைத் தகர்த்து ஒரே நிலைப்பாட்டில் நின்றனர் உயிர்த்த ஞாயிறு சம்பவங்களின் பின். இப்போது கோத்தாவுக்கு எதிராக முஸ்லிம்கள் வாக்களிப்பர் என்ற படியால் தான் பொதுவேட்பாளராக கிஸ்புல்லாவை களமிறக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

முதலில் சிங்களவரை குழப்ப வேண்டும் என்றால் இப்படிப் பகிரங்கமாக பிரகடனப்படுத்தக் கூடாது. போருக்கு செல்பவன் வியூகங்களை வெளியிடுவதில்லை. இந்த விடயத்தில் ரணில் ஒரு முன்னுதாரணம். புலிகளுடன் பேச்சு நடத்திக் கொண்டே தந்திரமாகக் கருணாவை பிரித்தெடுத்தாரே. ஜே.ஆரின் மருமகன் அல்லவா அவர். ஜே.வி.பிக்கு இலக்கம் ஒன்றை இடச் சொல்வோர் குறைந்த பட்சம் வடகிழக்கு இணைப்பு சுனாமிக் கட்டமைப்பு போன்றவற்றில் தமிழர்களுக்கு தவறிழைத்ததாக பகிரங்கமாக அக்கட்சியை ஒப்புக்கொள்ள வைக்கட்டும் அத்துடன் கடந்த காலத்தில் இனவாதத்துடன் செயல்பட்டதை ஒப்புக்கொள்ள வைக்கட்டும்.

நாம் முதலில் தமிழரை சுதந்திரமாக சிந்திக்க விடுவோம். அரசியல் நிபுணர்களைவிட அவர்கள் சுயமாக சரியாக சிந்திப்பர். 36 இயக்கங்களுள் ஒன்றைத் தெரிவு செய்தமை, தற்போது ஒரு கட்சிக்கு தொடர்ச்சியாக பாராளுமன்றக் கதவுகளை மூடுவது போன்றவை எமது மக்களின் சுயமுடிவுக்கு உதாரணம்.

# அவசரகாலச் சட்டம், சட்டரீதியாக நீக்கம். ஆனால் செயற்பாடு?

**துன்னாலை செல்வம்**



இலங்கையில் அடிக்கடி அமுல்படுத்தப்பட்டு வரும் அவசரகாலசட்டம் இப்பொழுது நீக்கப்பட்டிருந்தாலும் இந்த சட்டம் எவ்வேளையிலும் அமுல்படுத்தப்படும் என்பது கண்கூடு. போர் இடம்பெற்ற காலப் பகுதியில் இந்த அவசரகாலசட்டம் பயங்கரவாதச் சட்டம் போன்றன அமுல்படுத்தப்பட்டிருந்தன. போர் முடிவடைந்தும் பல வருடங்கள் கடந்த நிலையில் அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டது. இப்பொழுது போர் இல்லாத சூழ்நிலையிலும் அண்மையில் ஐ.எஸ் முஸ்லிம் பயங்கரவாதிகளால் அப்பாவி பொதுமக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட குண்டுத்தாக்குதலை அடுத்து நாட்டின் பாதுகாப்பு கருதி மீண்டும் இந்த சட்டம் அமுல்படுத்தப்பட்டது. 4 மாதங்கள் கடந்த நிலையில் இன்று நீக்கப்பட்டிருக்கிறது.

போர்க் காலங்களில் இந்த அவசரகாலச் சட்டம் மற்றும் பயங்கரவாத சட்ட மூலம் ஏராளமான தமிழ் இளைஞர் யுவதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் பலர் இன்றும் சிறைகளில் விடுதலை இன்றி வாடுகின்றனர். இவர்களின் விடுதலை தொடர்பில் இதுவரை எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்காமல் இருப்பதனால் இலங்கையில் இந்த சட்டங்களால் போர்க் காலங்கள் மட்டுமல்ல போர் முடிவடைந்த காலங்களிலும் பாதிக்கப்படுவது தமிழ் மக்கள் மட்டும் தான் என்பது கவலை தரும் விடயமாகும்.

காணாமல்ஆக்கப்பட்டோர் விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்கள் அல்ல என்பது அவர்களின் உறவினர்கள் தொடர்ந்து போராட்டங்களை நடத்தி வருவதில் இருந்து தெரிகிறது. விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து காணாமல்ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ஒரு போதும் சிங்கள அரசிடம் நீதி கேட்டு போராடமாட்டார்கள். அவர்கள் இந்த மண்ணுக்காக தம்மை அர்ப்பணித்தவர்கள் என்ற கௌரவத்துடன் அவர்களின் உறவினர்கள் இருக்கின்றனர்.

அரசியல் கைதிகளாக சிறையில் வாடுபவர்கள் விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்கள் அல்ல. அவர்கள் சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டவர்கள் என்பது இப்பொழுது வெளிப்படையாகத் தெரிந்தும் அவர்களை விடுதலை செய்ய சிங்கள அரசு மறுத்து வருகிறது. இந்தச் சட்டம் பல அப்பாவித் தமிழ் மக்களை கைது செய்ய பயன்படுத்தப்பட்டது என்பது உண்மை.

இலங்கையில் கடந்த நான்கு மாதங்களாக அமுல்படுத்தப்பட்டிருந்த அவசர காலச் சட்டம் நீக்கப்பட்டுள்ளது. இலங்கையில் கடந்த ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல் சம்பவத்தை அடுத்து, ஏப்ரல் மாதம் 22ஆம் திகதி இரவு முதல் அவசர கால சட்டம் பாதுகாப்பு அமைச்சரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவால் அமுல்படுத்தப்பட்டிருந்தது. பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் இரண்டாவது சரத்தின் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு அமையவே அவசரகால சட்ட அமுலாக்கம் தொடர்பான வர்த்தமானி வெளியிடப்பட்டிருந்தது.

அதனைத் தொடர்ந்து, ஜனாதிபதியினால் அமுல்படுத்தப்பட்ட அவசரகாலச் சட்டத்திற்கு நாடாளுமன்றம் கடந்த ஏப்ரல் மாதம் 24ஆம் திகதி அனுமதி வழங்கியது. அன்று முதல் ஒவ்வொரு மாதமும் 22ஆம் திகதி அவசரகாலச் சட்டத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நீடித்து வந்திருந்தார். இதன்படி, ஜூலை மாதம் 22ஆம் திகதி ஒரு மாதத்திற்கு அமுல்படுத்தும் வகையிலான அவசர காலச் சட்டம் வர்த்தமானியில் கையெழுத்திட்டு, மேலும் ஒரு மாதத்திற்கு அவசரகாலச் சட்டம் நீடிக்கப்பட்டிருந்தது.

பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் 12ஆவது சரத்திற்கு அமைய, ஜனாதிபதிக்கு காணப்படுகின்ற அதிகாரங்களை பயன்படுத்தியே ஜனாதிபதி இந்த தீர்மானத்தை எட்டியுள்ளார். நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் பொலிஸாரும் இராணுவத்தினரும் காவல் கடமையில் ஈடுபட்டுள்ளனர். இராணுவ சோதனைச் சாவடிகளை தேவையேற்படும் பகுதிகளில் மாத்திரமே முன்னெடுத்து செல்வதாக இராணுவம் தெரிவிக்கிறது. மேலும் அவசர காலச் சட்டத்தை நீடிப்பதற்கான யோசனை கிடையாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற 30 வருட கால உள்நாட்டு யுத்தம் காரணமாக பல வருடங்கள் அமுல்படுத்தப்பட்டிருந்த அவசரகாலச் சட்டம், யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் இரத்து செய்யப்பட்டிருந்தது. இலங்கையில் கடந்த ஏப்ரல் மாதம் நடத்தப்பட்ட பயங்கர வாதத் தாக்குதல் சம்பவத்தால் ஒன்பது வருடங்களின் பின்னர் அவசரகாலச் சட்டம் மீண்டும் அமுல்படுத்தப் பட்டது. ஏப்ரல் பயங்கரவாதத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட அனைத்து சந்தேக நபர்களும் அவசரகாலச் சட்டம் மற்றும் பயங்கரவாதத் தடுப்பு சட்டம் ஆகியவற்றின் கீழ் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

அவசரகால சட்டம் எப்போது இலங்கையில் முதன்முதலாக கொண்டு வரப்பட்டது. காலணித்துவ ஆட்சியிலிருந்து சுதந்திரம் அடைந்ததன் பின்னர் 1953ஆம் ஆண்டு இலங்கையில் முதன் முறையாக அவசரகாலசட்டம் அமுல்படுத்தப்பட்டது. ஒரு கிலோ அரிசியின் விலை அதிகரிக்கப்பட்டதை அடுத்து, நாட்டில் ஏற்பட்ட அமைதியற்ற நிலைமையினால் 29 நாட்களுக்கு இந்த சட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது. அதனைத் தொடர்ந்து, நாட்டில் ஏற்பட்ட இனக்கலவரங்கள், உள்நாட்டுப் போர் போன்ற காரணிகளினால் அவசரகால சட்டம் தொடர்ந்தும் பல தடவைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

1.சந்தேக நபர்களை கைது செய்வதற்கு பொலிசாருக்கு மாத்திரம் காணப்படுகின்ற அதிகாரம், தற்போது இலங்கையிலுள்ள அனைத்து பாதுகாப்பு தரப்பினருக்கும் வழங்கப்பட்டுள்ளது.

2. பொலிசார் தவிர்ந்த ஏனைய பாதுகாப்பு தரப்பினரால் கைது செய்யப்படும் சந்தேகநபர்கள், அவர்களின் தடுப்பு காவலில் 24 மணித்தியாலங்கள் விசாரணைக்கு உட்படுத்துவதற்கான அதிகாரம் காணப்படுகின்றது.

3. 24 மணித்தியாலங்களின் பின்னர் பொலிஸ ாருக்கு சந்தேகநபர் ஒப்படைக்கப்பட்டு, தடுப்பு காவல் கட்டளையின் பிரகாரம், அவரை ஒரு மாத காலம் தடுத்து வைக்க முடியும்.

4. ஒரு மாத காலத்திற்கு மேல் சந்தேகநபரை தடுத்து வைத்து, விசாரணை செய்ய வேண்டுமாயின், பாதுகாப்பு செயலாளரின் அனுமதியுடன் குறித்த சந்தேகநபர் மேலும் ஒரு மாத காலத்திற்கு தடுத்து வைத்து விசாரணைக்கு உட்படுத்த அதிகாரம் காணப்படுகின்றது.

5. கைது செய்யப்படும் சந்தேகநபரிடம் முழுமையான விசாரணை நிறைவடையும் வரை, நீதிமன்றத்திற்கு பிணை வழங்குவதற்கான அதிகாரம் கிடையாது.

6. கைது செய்யப்பட்டு விசாரணை செய்யப்படும் சந்தேக நபர் குற்றமிழைக்காதவர் என்பதனை பாதுகாப்பு தரப்பு உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில் மாத்திரமே பிணை வழங்கப்படும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

7. தேவை ஏற்படும் பட்சத்தில், பொலிஸ் ஊரடங்குச் சட்டத்தை அமல்படுத்துவதற்கான அதிகாரம் பொலிஸ் மா அதிபருக்கு இந்த சட்டத்தின் ஊடாக வழங்கப்படுகின்றது.


இந்த சட்ட நடைமுறை ஒரு நாட்டின் பாதுகாப்புக்கு சரியான திட்டங்களை கொண்டிருக்கிறது. இந்த சட்டம் மூன்று இனம் உள்ள நாட்டில் பொதுவாக நடைமுறை யில் உள்ளபோது என்பது ஓர் இனத்தின் மீது மட்டும் பாய்வது என்பது எந்தவிதத்தில் நியாயமானதா கும். வடக்கில் அளவுக்கு அதிகமான சோதனை சாவடிகள் திறக்கப்பட்டு போர்க்காலங்களில் இடம்பெற்றது போல் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட அளவுக்கு தெற்கில் இடம்பெறவில்லை என்பது கவலை தரும் விடயமாகும்.

குண்டுவெடிப்பில் சம்பந்தப்பட்ட தரப்புகளின் வாக்குமூலத்தில் இருந்து குற்றத்துக்கு துணைபோனவர்களை வெளிக்காட்டியும் பதவியில் இருக்கும் அவர்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்காமல் விட்டு விட்டு தமிழர் பகுதிகளில் இன்றும் சோதனை நடவடிக்கைகள் தொடர்கிறது. இந்த சட்டம் கொண்டு வரப்பட்டதில் கூடுதலாக தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். மூன்று இனம் வாழும் இந்த நாட்டில் ஒரு இனத்தில் இருந்து தொடர்ந்து ஜனாதிபதியாக வரும் போது மற்ற இனங்களை கண்டுகொள்ளாத நிலைமை தொடர்வது ஏனைய இனங்களுக்கு ஆபத்தான நிலைமையாகும் என்பதை சிங்கள அரசு புரிந்து கொள்ளும் காலம் வருமா?

போர் இடம்பெற்ற காலங்களில் அமுல்படுத்தப்பட்ட சட்டங்களை போர் முடிவடைந்து 10 வருடங்கள் கடந்த நிலையில் மீண்டும் அமுல்படுத்த முயல்வது தமிழ் மக்களை அச்ச உணர்வில் வைத்திருப்பதற்கு ஆகும் என்பது வெளிப்படை. கொழும்பில் குண்டுவெடித்தால் கொழும்பை விட வடக்கில் இயல்பு நிலைபாதிக்கும் என்பது கடந்த ஈஸ்ரர் ஞாயிறு குண்டுத்தாக்குதலில் இருந்து தெரிகிறது. ●

# காலத்தால் உணரப்பட்டதொரு கொடுங்காவியம்

லம்போதரன்



“எந்தக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டாலும் நாட்டுக்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவேன்” என்ற கூற்றோடு இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வாவின் பயணம் ஆரம்பமாகிறது. ‘போர் குற்றம் குறித்த குற்றங்கள் தொடர்பில் கருத்துத் தெரிவிப்பவர்கள், இயற்கை நீதிக்கான நியதிகளின் அடிப்படையில் செயற்படுவது பொருத்தமானதாகும்” எனவும் அவர் தெரிவித்திருப்பது, ஆலோசனையா? அச்சுறுத்தலா? என்பதை வெகுவிரைவில் மக்கள் அறிந்து கொள்ளப் போகிறார்கள்.

‘புலனாய்வுப் பிரிவினரைப் பலப்படுத்த வேண்டியது பிரதான விடயங்களில் ஒன்றென்றும், புலனாய்வுப் பிரிவினரை மையப்படுத்தியே தேசிய பாதுகாப்பு செயற்படுத்தப்படுகின்றது எனவும், நாட்டுக்காகவும், மக்களின் பாதுகாப்பிற்காகவும் செயற்படும்போது எச்சவால்களையும் எதிர்கொண்டு முன்னேறிச் செல்வோம்’ என்றும் அவர் துணிவோடு தெரிவித்திருக்கிறார்.

இறுதி யுத்தத்தின்போது நடைபெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பில் விசாரிக்கப்பட வேண்டிய, யுத்தக் குற்றசாட்டுகளுக்குள்ளான ராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவிற்கு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவினால் பதவி உயர்வு வழங்கப்பட்டிருப்பது, இனி வருங்காலங்களில் பலரை இது போன்ற செயலில் ஈடுபட ஊக்குவிப்பதாக இருக்கும் என்று வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள மக்கள் கருதுகின்றனர். போரில் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தீர்வைத் தேடித்தருவதாக வாக்குறுதி கொடுத்ததோடு மட்டுமல்லாது, அவர்களது வாக்குகளை வாங்கி வெற்றிபெற்றுக் கொண்டு அவர்கள் தலையையே அறுப்பதுபோன்ற செயலில் ஜனாதிபதி மைத்திரி ஈடுபட்டுள்ளதை எண்ணி, நாகரீகமடைந்த சமூகம் வெட்கப்பட வேண்டும் எனவும் அவர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

நம்பியவர்களுக்குத் துரோகமிழைத்தவர் என்ற வகையில் மைத்திரி அதர்மவாதியாக மக்களால் கருதப்படுவது நியாயமானதே. கடந்த ஜனாதிபதி தேர்த்தலின்போது தன்னை ஒரு வேட்பாளராக அறிவிக்கச் சில மணித்தியாலங்களுக்கு முன்பதாகவும், அப்போது ஜனாதிபதியாகவிருந்த மஹிந்தா ராஜபக்ஸவுடன் இரவு உணவை உண்டு களித்தவர் என்றும், அப்போது மக்கள் அதனைக் கூடத் துரோகத்தின் ஒரு வடிவமாகப் பார்க்கத் தவறியதன் விளைவையே தற்போது அவர்கள் அனுபவித்துக் கொண்டிருப்பதாகவும் அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். “அப்போது அவர் தன்னைப் பரிபூரணமாக நம்பிய மஹிந்தாவுக்குத் துரோகமிழைத்தார். தற்போது அதே துரோகத்தைத் தன்னை நம்பிய மக்களுக்கு இழைத்திருக்கிறார். அவ்வளவுதான். இதில் கோபப்பட என்ன இருக்கிறது? நாம் தான் அவரைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை.” என்று தனது கருத்தைத் தெரிவித்திருக்கிறார், காணாமல் ஆக்கப்பட்ட ஒருவரின் உறவு.

அரசியலில் தர்மம் அஸ்தமித்துப் பல வருடங்களாகிவிட்ட நிலையில், தற்போதைய சூழலில் ‘தன்னை ஒரு அரசியல்வாதியென அடையாளப்படுத்துபவன்” நிச்சயம் மனச்சாட்சி அற்றவனாகவும், அயோக்கியவனாகவும் இருப்பான் என்பது இறந்த காலத்து அனுபவம் தந்த பாடங்கள். அதை ஒரு அடிப்படை உண்மை என்றும் கொள்ளலாம். எனவே எந்த அளவுக்கு நாம் அரசியல்வாதிகளை நம்பவேண்டும்? நம்பக் கூடாது! என்று பற்றிய விழிப்புணர்வு எம்மிடம் இருக்க வேண்டும். நாம் அவர்களை நம்புவது என்ற விடயம் எம்மைப் பொறுத்ததே ஒழிய அரசியல்வாதியைப் பொறுத்து அல்ல என்ற கூற்றோடு அவர்களை நாம் அணுகுவோமானால் ஒரு போதும் நாம் ஏமாற்றப்பட்டு விட்டோம் என்று அவர்கள்மேல் கோபப்படமாட்டோம் என்பது எனது கருத்து.

எனவே ஜனாதிபதி மைத்திரி அவர்கள் தான் ஒரு மக்கள் தலைவன் என்றதை மறந்து, தான் ஒரு சுத்த அரசியல்வாதியெனப் பல தடவை நிரூபித்திருக்கிறார். அப்படியே இராணுவத் தளபதி நியமனத்திலும் நடந்து கொண்டிருக்கிறார். அவர் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி வேட்பாளராக நின்ற சமயத்தில், யுத்தகாலத்தில் அவரே பிரதிப் பாதுகாப்பு மந்திரியாகப் பொறுப்பேற்றிருந்தார் எனவும், ஏன் அவரை அப்பதவியில் நியமித்துவிட்டு அப்போது ஜனாதிபதியாகவிருந்த மஹிந்தா வெளிநாடு சென்றார் என்பதுவும் ஒரு கேள்விக்குரிய விடயம். எனவே அவர் சுத்த பௌத்த சிங்கள மக்களின் பிரதிநிதிதான் என்பதை மறந்துவிட்டு அவருக்கு வாக்களிக்கத் தலைப்பட்டதையே ஒரு துன்பியல் சம்பவமாகத்தான் பார்க்கக் கூடியதாக இருக்கிறது. இதே போன்றதொரு பிழையை நாம் இராணுவத் தளபதியாகவிருந்து, ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறங்கிய சரத் பொன்சேகாவுக்கு வாக்களித்தபோதும் விட்டு விட்டோம். தமிழர்களின் ஏகபோக பிரதிநிதிகளாகவிருந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பினரின் வேண்டுகோளை ஏற்றதனாலேயே நாம் அந்தத் தவறைச் செய்ததாகவே கருதலாம்.

> போர்க் குற்றவாளிகள் என்று எவரும் இல்லை. போரில் திறமையாகச் செயற்பட்டவர் சவேந்திர. திறமைமிக்கவர் என்றதாலேயே விமர்சனம் எழுகிறது. ஒருவரைப் பழிவாங்கும் நோக்கத்தில் போர்க் குற்றங்களைச் சுமத்துவதால் அவர் போர்க் குற்றவாளி என்று அர்த்தமில்லை.
>
> – ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன

எனவே வரும் தேர்தல்காலங்களில் அம்மாதிரியான தவறை விட்டுவிட்டு அதன் பலனை அதன்பின்வரும் காலங்களிலும் அனுபவிக்கப் போகிறோமா? தமிழ் தேசியக் கூட்டமைப்பினரின் சொல்லுக்கு அடிமையாகி அவர்கள் சொல்லும் அதர்மத்தின் காப்பாளர் ஒருவருக்கு எமது வாக்கைக் கொடுத்து விட்டு அல்லல் படப்போகிறோமா? கடந்த பல வருட தமிழ் அரசியல் வரலாற்றை விரிவாக உற்று நோக்கி, அவ்வப்போது தமிழ் தலைமைகள் என்னென்ன சொல்லி எம்மை ஏமாற்றினார்கள் என்ற விடயத்தை ஆராய்ந்து செயற்பட வேண்டும். மக்கள் பெருமை பேச நடக்க வேண்டிய இவர்கள் தமது மனைவி, மக்கள் பெருமைபேச நடப்பது வேதனை தருகின்ற விடயம். எமது தமிழ் தலைமைகள் முறைப்படி இல்லாததால்தான் கண்டகண்டவனும் தம்மை தமிழ் தலைவர் என்று சொல்லிக் கொண்டு தமிழர்கள் காதில் பூக்களைச் சுற்றுகின்றனர். மைத்திரியும், ரணிலும் இது போன்ற தமிழர் விரோதச் செயல்களைத் துணிந்து செய்வதற்கு, தமது சேஷ்டைகளுக்கெல்லாம் தமிழ் தலைமைகள் ஆமாப் போடுவார்கள் என்ற துணிவேதான் முக்கிய காரணம் எனலாம். எனவே தமிழ் தலைமைகளை இனிமேலும் நம்பலாமா? என்று கேட்கிறார் ஒரு சமூக ஆர்வலர்.

அதே சமயம் புதிய இராணுவத் தளபதியின் நியமனத்திற்கு ஐ.நா கடும் கண்டனம் தெரிவித்திருக்கிறது. இது இலங்கையின் பாதுகாப்புத்துறையின் பொதுத் தன்மையைப் பாதிக்கின்ற அதே வேளை, ஐக்கிய நாடுகளின் அமைதிப்படையணியில் இலங்கை பங்களிப்புச் செய்வதற்கான வாய்ப்பைக் குறைப்பதாகவும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் மிச்செலி பஜிலெட் தெரிவித்திருக்கிறார். அத்துடன் இது தொடர்பாகத் தான் ஆழ்ந்த கவலை கொள்வதாகவும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்த நியமனத்தின் மூலம் ஐக்கிய நாட்டு மனித உரிமைப் பேரவைக்கு “இது எனது நாடு. எனது நாட்டுக்குள் நடைபெறும் நியமனங்களைத் தீர்மானிக்கின்ற பொறுப்பு எம்முடையது. அந்தத் தீர்மானம் எப்பொழுதும் பெரும்பான்மை விருப்பப்படியே நடக்கும். அது சிறுபான்மைக்கு எதிரானதொரு அநீதியான செயற்பாடாயினும் நாம் அஞ்சப்போவதில்லை.” என்றொரு செய்தியை மைத்திரி வலு தெளிவாகச் சொல்லி இருக்கிறார். அதனை ஐநாவும் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை. எமது தமிழ் தலைமைகளும் அதனை விளங்கிக் கொண்டதாகவும் இல்லை.

தற்போதைய சூழலில் புதியதாக ஜனாதிபதி என்று ஆசனத்தில் அமரப் போகிறவர் ஒரு இந்திய சார்பானவராக இருக்கலாம் எல்லது அமெரிக்க சார்பாக இருக்கலாம். இது இரண்டையும் புறந்தள்ளிவிட்டு அவர் ஒரு சீனத்தின் பாதுகாவலராகவும் இருக்கலாம். இங்கே அதல்ல முக்கியம். இவை எல்லாவற்றையும் விட அவர் ஒரு பௌத்த சிங்கள இனவாதியாக இருக்க வேண்டும் என்பது மிக மிக முக்கியம் என்ற விடயம் காலத்தால் உணரப்பட்டிருக்கிறது.

பிறைவாணன்

வளைகுடா நாடுகளில் வாழும் இந்துக்களுக்கு எதிராக தாக்குதல் நடத்துவதற்கு இஸ்லாமிய அரசு என்று தங்களை அழைத்துக் கொள்ளும் ஐ.எஸ் அமைப்பு அழைப்பு விடுத்துள்ளது. இந்தியாவின் நிர்வாகத்துக்கு உட்பட்ட ஜம்மு - காஷ்மீரின் தன்னாட்சி உரிமையை பாரதிய ஜனதா கட்சி தலைமையிலான இந்திய அரசு நீக்கியதே இதற்கு பின்புலமாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. ஐ.எஸ்ஸின் முதன்மை வார இதழான அல்-நாபாவின் தலையங்கத்தில் இது குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது. உடனடித் தகவல் பரிமாற்ற செயலியான டெலிகிராமில் உள்ள ஐ.எஸ் அமைப்பின் சனல்கள் வாயிலாக ஆகஸ்ட் 22ஆம் திகதியிடப்பட்ட இந்த இதழ் பகிரப்பட்டுள்ளது. இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் சமீபத்திய வளைகுடா நாடுகளின் சுற்றுப்பயணத்தை இது மேற்கோள்காட்டியுள்ளது.

அரபு நாடுகளில் வாழும் ஐ.எஸ் ஆதரவாளர்களுக்கு, தத்தமது நாடுகளில் வாழும் இந்துக்களை பணக்காரர் அல்லது ஏழை என பாரபட்சம் பாராமல், அவர்கள் மீது தாக்குதல் தொடுத்து வெளியேற்றும் கடமை இருப்பதாக அந்த இதழின் தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. 'அவர்களை அச்சுறுத்தி, சொத்துகளை பறியுங்கள்' என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. அரபு நாடுகளில் இந்தியாவை சேர்ந்த மில்லியன் கணக்கானோர் பல்வேறுபட்ட வேலைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

அந்த கட்டுரையில், மோடியின் தலைமையின் கீழ், இந்தியாவிற்கும் அரபு நாடுகளுக்கும் இடையில் வளர்ந்து வரும் வெளிநாட்டு உறவுகள் குறித்து கடுமையான விமர்சனங்கள் இருந்தன. அரபு நாடுகளுடனான இந்தியாவின் உறவில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம், நரேந்திர மோடி ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் பஹ்ரைனுக்கு மேற்கொண்ட சமீபத்திய பயணத்தில் பிரதிபலிக்கிறது. துபாய் ஆட்சியாளர் ஷேக் முகமது அல்-மக்தூம் உடன் நரேந்திர மோடி கைகுலுக்கும் படம் ஐ.எஸ் கட்டுரையில் இடம்பெற்றுள்ளது. இந்தியாவின் நிர்வாகத்துக்கு உட்பட்ட காஷ்மீருக்கு அளிக்கப்பட்டு வந்த சிறப்புரிமைகளை மத்திய அரசு நீக்கிய பிறகு, அதுதொடர்பான முதல் எதிர்வினையை ஐ.எஸ் அமைப்பு இந்த தலையங்கத்தின் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளது.

'விலாயா ஆஃப் ஹிந்த்' என்ற புதிய கிளையை இந்தியாவில் தொடங்குவதாக கடந்த மே மாதம் ஐ.எஸ் அமைப்பு அறிவித்தது. ஆனால், இந்த குழு இதுவரை இந்திய நிர்வாகத்துக்குட்பட்ட காஷ்மீரில் அவ்வப்போது, குறைந்த அளவிலான தாக்குதல்களை மட்டுமே பொறுப்பேற்றுள்ளது. 'அரேபிய தீபகற்பத்தில்' இந்துக்களின் மக்கள் தொகை அதிகரித்து வருவது குறித்து அல்-நாபா கவலை தெரிவித்துள்ளது.

இந்து மதத் தலைவர்கள், அரசியல்வாதிகள் மற்றும் வணிகர்களுக்கு எதிராக தாக்குதல் தொடுத்து பொது மக்களிடையே அச்சத்தை உருவாக்குவதன் மூலம் அவர்களை அரபு பிராந்தியத்தை விட்டு வெளியேற வித்திட முடியுமென்று அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், எவ்வித பாரபட்சமுமின்றி, அனைத்து இந்துக்களும் இது பொருந்தும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வளைகுடா நாடுகளில் இந்துக்களுக்கு எதிராக தாக்குதல் நடத்துவது மிக முக்கியமானது என்றும், அரபு கொடுங்கோல் ஆட்சியாளர்களை பதவி நீக்கம் செய்து, ஷரியா

இந்தியாவில் உள்ள முஸ்லிம்களுக்கு உதவுவதற்கு ஒத்ததாகும்.

காஷ்மீர் விவகாரத்தில் இஸ்லாமிய சமயத்தின் கொள்கைகளுக்கு எதிராக செயல்படும் பாகிஸ்தான் உள்ளிட்ட நாடுகள் அமைதி காப்பதாக தெரிவிக்கிறது. தங்களை போராளிகள் என்று கூறிக் கொள்ளும் காஷ்மீரின் பிரிவினைவாத குழுக்கள் பாகிஸ்தானின் உளவு அமைப்புகளால் முற்றிலும் கட்டுப்படுத்தப்படுகின்றன. இந்தியாவில் வாழும் முஸ்லிம்களின் நிலங்களை பறிப்பது, கொலை செய்வது, மசூதிகளை அழிப்பது உள்ளிட்ட செயல்பாடுகளில் இந்துக்கள் ஈடுபடுவதாக அல்-நாபாவில்



# இந்துக்கள் மீது குறிவைக்கும் ஐ.எஸ்

ஆட்சியை நிறுவுவதற்கு முன்னுரிமை அளிப்பதாக அந்த தலையங்கம் விவரிக்கிறது.

இந்துக்கள் இஸ்லாத்திற்கு விரோதமானவர்கள் என்று கருதப்படுகிறார்கள். எனவே, முஸ்லிம்கள் அவர்களுக்கு பாதுகாப்பு அளிப்பதற்கு கடன்பட்டிருக்கவில்லை. அதாவது, ஷரியா சட்டத்தில் உள்ள ஒரு கருத்து, முஸ்லிம் அல்லாதவர்களின் வாழ்க்கை, சொத்து மற்றும் மரியாதை அனைத்தையும் தீண்டத்தகாததாக ஆக்குகிறது.

ஐ.எஸ்ஸின் போட்டியாளரான அல்-கய்தா கடந்த காலத்தில் வளைகுடா நாடுகளில் இதேபோன்ற தாக்குதல்களை வலியுறுத்தியது. ஆனால், அது கிறிஸ்தவர்களுக்கு எதிராக இருந்தது.

காஷ்மீரை இந்தியாவுடன் இணைத்து, அங்கே ஆயிரக்கணக்கான பாதுகாப்புப் படையினரை குவித்துவிட்டு, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் வந்த பசுவை வழிபடும் மோடிக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. அரபு நாடுகளில் இஸ்லாமிற்கும் முஸ்லிம்களுக்கும் ஆபத்தை விளைவிக்கும் இந்துக்களுடன் போராடுவது காஷ்மீர் மற்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆப்கானிஸ்தான், வங்கதேசம் மற்றும் இலங்கையில் செயல்படும், மத கொள்கைகளுக்கு எதிரான அரசுகளுக்கு இந்தியா ஆதரவளிப்பதுடன், அங்கே முஸ்லிம்களுக்கு எதிராக தாக்குதல் நடத்துவதற்கு தூண்டிவிடுவதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

வளைகுடா பிராந்தியத்திலிருந்து அமெரிக்கா தனது துருப்புக்களை விலக்கிக் கொள்ள வேண்டுமானால், இந்தியாவுடனான உறவை வலுப்படுத்துவது தங்களது பிராந்திய போட்டியாளரான ஈரானை எதிர்கொள்ள உதவும் என்று நினைத்துக்கொண்டு அரபு நாடுகளின் தலைவர்கள் செயல்படுவதாகவும் தலையங்கத்தில் சொல்லப்பட்டிக்கிறது. பொருளாதார மற்றும் கொள்கை ரீதியிலான உறவை மேம்படுத்துவதற்காக ஐக்கிய அரபு எமிரேட்ஸ், குவைத் மற்றும் பஹ்ரைன் ஆகிய இந்துக்கள் அதிகமான முதலீடு செய்துள்ள நாடுகள் தத்தமது நாடுகளில் இந்தியா தனது இராணுவத்தளத்தை அமைப்பதற்கு அனுமதி கொடுக்கப்படலாம் என்றும் அதில் சந்தேகம் எழுப்பப்பட்டுள்ளது.

முஸ்லிம்கள் மீதான இந்துக்களின் 'வெறுப்பு' ஒருபோதும் விலகப்போவதில்லை என்று அல்-நாபாவில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், முஸ்லிம்கள் மீதான இந்துக்களின் வெறுப்பை, இடைக்கால முஸ்லிம் வம்சங்கள் இந்தியாவை வென்ற பிறகு, பல தசாப்தங்களுக்கு இந்து மதத்தை அடக்கியது மற்றும் அவர்களின் கோயில்களை அழித்ததுடன் ஒப்பிட்டு அல்-நாபாவின் தலையங்கம் கருத்து வெளியிட்டுள்ளது.

இஸ்லாமிய அரசு என்று தங்களைக் கூறிக்கொள்ளும் ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பின் தொகுப்புகள் ஆகியேவை காஷ்மீரில் உள்ள பல இளைஞர்கள் மீது தாக்கம் செலுத்தத் தொடங்கின. வரலாற்று ரீதியாக பார்த்தால், காஷ்மீர் பிரச்சனை என்பது இந்திய முஸ்லிம்களின் பிரச்சனையாக இருக்கவில்லை. காஷ்மீரில் இருக்கும் இந்துவோ அல்லது முஸ்லிமோ, தங்களை மற்ற இந்தியர்களைவிட, அவர்கள் தனித்துவம் வாய்ந்தவர்கள் என்றே கருதினார்கள்.

சமீபத்திய ஆண்டுகளில், காஷ்மீரி முஸ்லிம் இளைஞர்கள், இந்தியாவின் மற்ற பகுதிகளில் படிப்பதும், வேலை பார்ப்பதும் அதிகரித்து வருகிறது. உதாரணமாக, அவர்கள் ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம், அலிகர் முஸ்லிம் பல்கலைக்கழகம் போன்ற பிரபல தேசிய கல்வி நிலையங்களில், மாணவர் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள். அவர்கள் கேரளா மற்றும் கோவாவில் பணிபுரிவதைக்கூட பார்க்க முடிகிறது.

காஷ்மீரில் முஸ்லிம்கள் மீதான தாக்குதல் உலக நாடுகளில் உள்ள இந்துக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தவுள்ளன. ஐ.எஸ் முஸ்லிம் தீவிரவாதிகள் தமது மக்கள் எங்கெல்லாம் இருக்கிறார்களோ அவர்களை தாக்குதல்களுக்காக பயன்படுத்தும் என்பதை விட அவர்களும் தாமாகவே ஆதரவை வழங்க முன்வருவார்கள் என்பது இலங்கையில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் இருந்து அறியமுடிந்தது.

முஸ்லிம்கள் மீதான தாக்குதல் என்பது உலக நாடுகள் பாதுகாப்பாக இருக்க வேண்டிய சூழ்நிலையை உருவாக்கியுள்ளது. அதுவும் இந்துகள் மீதான தாக்குதல் என்பது மத ரீதியான முரண்பாடுகளை ஏற்படுத்தும் என்பது உண்மை. அதனால் தான் என்னவோ நல்லூர் ஆலயம் முற்றுமுழுதாக பாதுகாப்புக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

இலங்கையில் ஐ.எஸ் தீவிரவாதிகளின் தாக்குதல்கள் தொடரும் என்று அமெரிக்கா எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள நிலையில் இந்துக்கள் மீது தாக்குதல் நடத்துவோம் என்று ஐ.எஸ் தீவிரவாதிகள் அறிவித்துள்ளார். இந்த நிலையில் இதனை சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடியாத சூழ்நிலை எழுந்துள்ளது. எனவே இந்து ஆலயங்கள் தொடக்கம் இந்துக்கள் கூடும் இடங்கள் வரை பாதுகாப்புக்குள் கொண்டுவரவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. ●

# நான் வாக்காளன் சொல்லுறன், கேளுங்கோ...!



சம்பந்தன் காய்ச்சலுக்கு மருந்தெடுக்கப் போனவர் எண்டுதான் கதைச்சவை. ஆனால் அப்பிடி இல்லை எண்டு இப்ப சொல்லினம். ஆனால் வாத்தியார் சொல்லுறார் அவர் உண்மையிலை காய்ச்சலுக்கு மருந்தெடுக்கத்தான் போனவர். அவற்றை தேகத்துக்கு ஒண்டும் இல்லை எண்டும் .அது அவர் அரசியல் காய்ச்சலுக்குத்தான் மருந்தெடுக்கத்தான் போனவர் எண்டது பிறகு தெரிஞ்சிட்டுது. என்னைப் பொறுத்தவரை உவையள் இப்பவும் திருந்தேல்லை. இனியும் திருந்துவினமெண்டு எதிர்பார்க்கேல்லை. இந்தியாவிட்டை அல்ல எந்த நாட்டிட்டையும் போய் அடிபணியாதையுங்கோ எண்டுதான் சொல்லவாறன். இதென்ன களவே? எங்கடை இனத் உலகத்திலை எல்லாருக்கும் முந்தின இனம். உங்கடை மொழிக்கும் பெரிய வரலாறு இருக்கு. இடையிட்டு வந்த கலவனினம் இல்லை. அதாலை எங்கடை வரலாற்றைச் சொல்லுங்கோ. எங்கடை உரிமையைத்தான் கேக்கிறம் எண்டு சொல்லுங்கோவன். இது கரணட்டி ஓணான் தயைாட்டுற மாதிரி எல்லாருக்கும் ஆட்டுறது. இந்தியாக்கும் ஆட்டுறது. ஆமெரிக்காக்கும் ஆட்டுறது. பிறகு சைனாக்காரனயும் சந்திக்கிறது. இவையள் அவையளைப் பேக்காட்டுறதா நினைக்கிறது. அவையள் இவையளைப் பேக்காட்டுறதா நினைக்கிறது. கடைசியிலை பேக்காட்டப்படுகிறது எங்கடை சனம் தான் எண்டது ஒருதருக்கும் தெரியாது.

முந்தித்தான் சைனாக்காரன் கண்டபடி வரப் பயப்பிட்டவன். இப்ப துணிஞ்சு வாறான். வரேக்கை தன்ரை செவு சித்தாயத்தைச் சமாளிக்க எண்டு கையிலை வாச்சு, கண்ணாடி. சீனக் காப்பு, மோதிரம், போன் எண்டு கனக்கக் கொண்டு வந்து மெல்ல பாங்குகளுக்கை போறான்.ஒபிசுகளுக்கை போறான். வித்திட்டுப் போயிடுறான். ஏன் வாறான்? ஏன்னத்துக்கு வாறான்? ஆரவன்? ஆவன்ரை ஊர், பேர் ஒண்டும் தெரியாது. ஆனால் அவன் தொடர்ச்சியா வாறான் எண்டது மாத்திரம் தெரியிது. ஏல்லாம் கைப்பாசைதான் அவனுக்கு அவன்ரை மொழியை விட்டால் வேறைஒண்டும் பரீட்சயம் இல்லை.

ஆனால் இப்ப இடையிட்டு ஒரு கதை சீனாக்காரன் தனக்குத்தேவையான யாழ்ப்பாணத்து ஆக்களைத் தேடி வலைவிரிச்சிருக்கிறானாம். முக்கிய புள்ளியளை தன்ரை வலையிலை விழுத்தத் திட்டமாம் எண்டு சனம் கதைக்கத் துவங்கிவிட்டுது.ஒண்டு சொல்ல வேணும். யாழ்ப்பாணம் ஒரு சின்ன இடம் பாருங்கோவன். ஒண்டையும் மூடி மறைக்கேலாது. சுட்டெண்டு ஆக்களுக்குத் தெரியவரும்.

உப்பிடித்தான் போன கிழமை எங்கடை சின்னப்பெடி ஒரு பெடிச்சியைக் கூட்டிக்கொண்டு போய் படம் பாத்தவன் அவன் வீட்டுக்கு வர முன்னம் அவன்ரை வீட்டுக்கும். பெடிச்சியின்ரை வீட்டுக்கும் தெரிய வந்திட்டுது. அதே போலத்தான் சம்பந்தரும் பொய் சொல்லிக்கொண்டு போனவர். ஆனால் ஒழிக்கேலாமல்போச்சுது.

அவர் ஒழிச்சுச் செய்தவர். ஆனால் இந்தியா அவரைச் சந்திச்சுப்போட்டுப் படங்களையும் எடுத்து எல்லா இடங்களிலையும் போட்டிட்டாங்கள். அதாலை அம்பிட்டுப் போச்சினம். ஏன்ன செய்யிறது? தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஒண்டும் செய்யப்போறதில்லை. இப்ப உள்ள சூழ்நிலையிலை அவையளாலையும் ஒண்டும் செய்லோது எண்டது சனத்துக்கு விளங்க வேணும். இன்னும் மொக்கயீனப்படலோது. அதோடை கட்சியிலை இருக்கிற ஆக்களுக்கும் கட்சி பற்றியோ, இல்லாட்டி கட்சியை நம்பி இருக்கிற சனத்தைப் பற்றியோ அக்கறை இல்லை. இருக்கிறவரைக்கும் சொகுசா இருந்திட்டுப் போவம் எண்டது நினைப்போ தெரியாது! இல்லாட்டி அடுத்ததரம் தேர்தல் வரேக்கை ஏதாவது சொல்லிச் சமாளிக்கலாம் எண்டு நினைக்கினமோ தெரியாது. மொத்தத்திலை சனத்தைப் பேய் எண்டு நினைக்கினம்போலை கிடக்கு.

தாங்களும் செய்யாங்கள்.மற்றவையளை செய்யவும் விடாங்கள். போன பிழமை தொடங்கின புத்தகக் கண்காட்சியைப் பாருங்கோவன். இதுவரை சொல்லிக் கொண்டிருந்தாங்கள் சனத்துக்கு வாசிப்புப் பழக்கம் குறைஞ்சு போச்சுது. ஒருத்தரும் இப்ப வாசிக்கிறேல்லை எண்டு. ஆனால் புத்தகக் கண்காட்சுக்கு வந்து புத்தகத்தை வாங்கின சனம் எண்டால்... சொல்லி மாளாது. அப்ப புத்தகத்தை வாங்கின சனம் என்ன கிழிச்சுச் சீனி சுத்தவே புத்தகத்தை வேண்டிக் கொண்டு போனவை. ஆப்ப அதிலையும் சனத்தை வாசிக்க விடாமல் "அவைக்கு வாசிக்கிற பழக்கம் இல்லை" எண்டு ஒரு பொய் பிரச்சாரத்தைச் செய்தால் சனம் ஒட்டொமெற்றிக்கா வாசிக்கிறதை விட்டிடுவினம். வாசிக்காட்டில் அறிவு வளராது. அறிவில்லாமல் வளர்ந்தால் ஆடு,மாடு போலைதானே சீவிப்பினம். அப்ப தாங்கள் தொடர்ந்தும் பேய்க்காட்டிச் சீவிக்கலாம் எண்டதுதான் எங்கடை அரசியில்வாதியளின்ரை நோக்கம் எண்டு நினைக்கிறன்.

ஏன்னத்தையம் செய்யுங்கோ. வாற எலக்சனிலை கண்டதுக்கும் கீறிப் போடாதையுங்கோ. கண்டபடி விளையாடாதையுங்கோ. கவனம்.திருப்பியும் அதே ஆக்களை, அதே முகங்களை வோட்டுப் போட்டுப் பார்லிமெண்டுக்கு அனுப்பிப்போட்டுச் சீரழியப்போறமோ எண்டு வடிவாச் சிந்தியுங்கோவன். ஆற அமர இருந்து சிந்தியுங்கோ. அவசரப்படாதையுங்கோ. பேப்பரிலை, றேடியோவிலை செய்தியைப் பாருங்கோ. கேளுங்கோ.ஆனால் அதை உடனை நம்பிவிடாதையுங்கோ. பெரும்பாலும் பொய் எழுதிறாங்கள். பொய் பேசுறாங்கள். ஆரும் சுத்தமா இல்லை. புறணிதான் கூடவாக்கிடக்கு. பேந்தும் பேந்தும் சொல்லுறன். கவனம்.



# பார்த்தேன் ரசித்தேன்

**- யாழவன் -**

ஒரு கணகாட்சி, அதிலும் ஒரு புத்தகக் கண்காட்சி, இந்த அளவில் யாழ் மண்ணில் இடம்பெறுகின்றது என்பது வாசிப்பை நேசிக்கும் எவருக்கும் பெருமகிழ்வைத் தரும் என்பதில் சந்தேகமே இல்லை.இலங்கையின் புத்தக ஏற்றுமதியாளர்கள்,இறக்குமதியாளர்கள் அமைப்பு ஏற்பாடு செய்த "புத்தகக் கண்காட்சி 2019" ஆரம்பமாகி இருக்கின்றது. இது ஒரு வாரம் தொடர்கின்றது...அதாவது ஆகஸ்ட்27இல் ஆரம்பித்தது, செப்டெம்பர் முதலாந் திகதி வரை நீள்கின்றது.

வட மாகாண ஆளுநர் சுரேன் ராகவனின் வழிகாட்டலில்தான் இந்த விழா அரங்கேறி இருக்கின்றது. பன்னாட்டு ரீதியாக அங்கீகாரம் பெற்ற உள்நாட்டு, வெளிநாட்டு பிரசுரகர்த்தாக்களுடன், யாழ் மண்ணின் பதிப்பாளர்கள் தங்கள் பிரசுரங்களை ஒன்றாக கண்காட்சியில் வைக்கும் அரிய வாய்ப்பு இந்த் தடவை கிடைத்திருக்கின்றது.

தேசிய அளவில் ஒரு புத்தகக் கண்காட்சி, யாழ் மண்ணில் நடப்பது இதுவே முதல் தடவை! இதற்கு முன்பாக , ஆண்டுக்கு ஆண்டு புத்தகக் கண்காட்சிகள் கண்டி, கொழும்பு , காலி ஆகிய நகரங்களில் இடம்பெற்றிருக்கின்றன. இந்தக் கண்காட்சியால் யாழ் நகர் "கன்னி கழித்திருக்கின்றது" . ஆங்கிலம், தமிழ், சிங்களம் என்று மும் மொழிகளிலும் நூல்கள் காட்சிக்கு, வந்திருந்தமை இந்தக் கண்காட்சியின் ஒரு தனிச் சிறப்பு என்றுசொல்லி விடலாம். மூன்று மொழிகளிலுமான இந்த நூல்கள் ஒரே கூரையில் இணைந்து மொழிக்கென்ன பேதம் என்று மொழிந்தபடி வீற்றிருந்தமை, கண்கொளாக் காட்சியாக இருந்தது.

பலர் பலவித புத்தகங்களை தங்கள் தேர்வுகளாகத் தெரிந்து , கைகளில் கொண்டு செல்வதைப் பார்க்கும்போது மனம் குதாகலித்தது. உணவைப் போலவே மனிதர்கள் சுவையும் பெரிதாக வேறுபடுகின்றன என்பது துல்லியமாகத் தெரிந்தது. சிலு சில வரிகளை வாசித்து விட்டு "சீ இதென்ன புத்தகம்" என்று தூக்கிப் போட்டுவிடுவார்கள்.அவர்களுக்கு ஒரு சிறு புத்திமதி..

"ஒரு புத்தகம் புரியவில்லை என்றால் கொஞ்ச காலம் கழித்து மறுபடி படித்துபாருங்கள். அப்பபடியும் புரியவில்லை என்றால் இன்னும் கொஞ்ச நாள் காத்திருங்கள். அதற்காக புத்தகம் தவறானது என்ற முடிவிற்கு அவசரமாக வரவேண்டாம். காரணம் எளிய வரிகள் கூட இன்றும் புரிந்து கொள்ளபடாமலே இருக்கின்றன. ஆத்திசூடியில் வரும் ஙப்போல்வளை என்பதற்கு என்ன பொருள் என்று கேளுங்கள். எண்பது சதவீதம் பேர் விழிப்பார்கள். "

21பிரசுர அமைப்புகள் இந்தக் கண்காட்சியில் கலந்து கொள்கின்றன. ,இந்த 21 பேரில், 15பேர் யாழ் மண்ணைப் பின்புலமாகக் கொண்டு செய்ற்படுபவர்கள். பிராந்தியரீதியாகச் செயற்படும் இவர்களுக்கு நாடாளாவியரீதியாக அங்கீகாரத்தைப் பெறுவதே இந்தக் கண்காட்சியின்நோக்கம். பல தசாப்தங்களாக இந்தத் துறையில் ஈடுபட்டுள்ள இவர்களுக்கு இந்தக் கண்காட்சி ஓர் ஊக்கியாகச் செயற்பட வேண்டும் என்பதே பலரதும் எதிர்பார்ப்பு .கவிதா பிரசுரம், நியூ செஞ்சரி பிரசுரம் என்று இரு தென் இந்திய பிரசுர அமைப்புகளும் இதில் பங்கேற்கின்றன. இன்று இலங்கையில் முன்னணி வகிக்கும் விஜிதா யப்பா, ஜெயா புக் சென்டர், சரஸவி பிரசுரம் ஆகிய நிறுவனங்களும் பங்கேற்றுள்ளன.

இதன் பிரதான உபயதாரராக இருப்பது பூபாலசிங்கம் புத்தக நிலையம். பாடசாலைப் பிள்ளைகளுக்கு அட்லஸ் அமைப்பு ஓவியப் போட்டிகளை ஒழுங்கு செய்திருக்கின்றது. பிரித்தானிய கவுன்சில், பிள்ளைகளுக்கு கதை சொல்ல ஏற்பாடு செய்திருக்கின்றது. வர்த்தக வங்கி, அலுவலகரீதியான இணைப்பாளர். ஊடகத்துறை இணைப்பாளர் உதயன் பத்திரிகை நிறுவனம். மின்னியல் ஊடகப் பொறுப்பை டான் தொலைக்காட்சி பொறுப்பேற்றுள்ளது. வெண்பா என்ற பெயருடன் உலாவும் இணைய நூல் விற்பனை நிலையமும் வெளிச்சத்திற்கு வந்துள்ளது. இளஞ் சமுதாயத்திற்கு அவசியப்படும் நல்ல நூல்களை வழங்குவதில் வெண்பா முன்நிற்கின்றது. இதுபற்றி இதுவரை அறியாதிருந்தால் ஹறற.எநடெய. டம.என்ற இணைய முகவரிக்கு ஒரு தடவை விஜயம் செய்யுங்கள்....

நல்லூர் விழாக் காலங்களில் ஓஹோவென்று ஜனத் திரள் இருப்பது புதிதல்ல. புதுவருடக் காலத்தில் யாழ் சந்தையை ஜனங்கள் மொய்ப்பதும் பழைய கதை.ஆடிக் கழிவு என்று சேலைக் கடைகளை பெண்கள் மொய்ப்பதும் வழமை. ஆனால் இந்த விழாவின் முதல் நாளன்று, இந்தப் புதகக் கண்காட்சிக்கு பெருங்கூட்டம் என்னை ஆச்சரியப்பட வைத்தது. ஆச்சரியத்தோடு அளவு கடந்த குதூகலத்தையும் கொடுத்தது. வாசிப்பை நேசிப்பவர்கள் நிறைய இருக்கிறார்கள் என்ற நிஜம் அப்பட்டமாகத் தெரிந்தது. புத்தகங்களை வாசிக்கும் பழக்கம் இருந்தால் சக மனிதர்களை நேசிக்கும் பழக்கமும் வரும்...

சிலம்பு

# அமேசன் காட்டுத் தீ! ஒரு திட்டமிட்ட சதி!!



அமேசன் காடு எரிகிறது என்றால் ஏன் பதறுகிறார்கள். இலங்கையிலும் காடுகள் எரிவதுண்டு. இந்தியாவிலும் எரியும். உலகின் பல பகுதிகளிலும் காடுகள் அடிக்கடி எரிகின்றன தானே. ஆனால் அப்பொழுது எல்லாம் பெரிதும் அலட்டிக்கொள்ளாத உலகம் இப்பொழுது அமேசன் காடுகள் எரிகிறது என்று பெரிதாகப் பதற்றமடைகிறார்கள், குரல் கொடுக்கிறார்கள், அத்தீயை அணைக்க உலகம் முழுவதும் ஆட்சியாளர்களும் தனியாரும் பெரும் நிதி கொடுக்கிறார்கள். பிரேசில் நாடு தனது படைகளின் பெரும் பகுதியை தீயை அணைக்க அனுப்பியுள்ளது. இதெல்லாம் எதற்காக? அந்தக் காடு அத்தனை முக்கியமானதா என்ற வினா பலரின் மனதிலும் எழுவது இயல்பானதே.

**உலகத்தின் உயிரே அமேசன் காடுதான்**

உலகத்தை ஒரு மனிதனாக நினைத்துக் உருவகப்படுத்திக் கொண்டால், மனிதனின் நெஞ்சுதான் அமேசன் காடாகும். மனிதனின் நெஞ்சில் தான் உயிர் வாழ்வதற்கான முதன்மையான நுரையீரலும் இருதயமும் உள்ளன. உயிரினங்கள் அனைத்திற்கும் இவை இரண்டும் தான் உயிரைக் கொடுக்கின்றன. இவை இயங்காவிடில் மனிதன் உயிர் வாழ முடியாது. மற்ற உயிரினங்களும் உயிர் வாழ முடியாது. அவ்வாறே தான் உலகத்தின் நெஞ்சுப் பகுதிபோல் உயிரினங்களுக்குத் தேவையான உயிரகம் (oxygen) இருபது விழுக்காட்டை இந்த அமேசன் காடுகளே உற்பத்தி செய்கின்றன. உயிரினங்களால் வெளியேற்றப்படும் கரியமில வாயுவை இக்காடுகளே பெரிதும் உள்ளெடுத்துக் கொள்கின்றன. அத்தோடு மனிதனால் வளர்ச்சி என்ற பெயரில் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் நச்சுக்களையும் சமன் செய்வது இந்த அமேசன் காடுகளே ஆகும். வெப்ப அதிகரிப்பு, மழையின்மை, வெள்ளம் என்பன விஞ்ஞான வளர்ச்சியால். ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. இக்காடுகள் தான் இவ்வகை அனர்த்தங்களைக் குறித்தும் தவிர்த்தும் வருகின்றன என்று ஆய்வாளர்கள் சொல்கிறார்கள். எனவே தான் அமேசன் காட்டை உலகத்திற்கு உயிர்கொடுக்கும் காடு என்று சொல்லுகிறார்கள்.

**அமேசன் காடு எரிகிறதா? எரிக்கப்படுகிறதா ?**

விஞ்ஞானம் என்றால் தமிழில் அறிவியல் என்று சொல்கிறார்கள். அது சரியான ஈடான தமிழ்ச் சொல் அல்ல. ஆனால் அச்சொல் புழக்கத்திற்கு வந்துள்ளதால் அதனை நாம் ஏற்றுக்கொள்வோம் என்று ஒரு பெரும் தமிழறிஞர் கூறியிருந்தார். இக்கூற்று முற்றிலும் ஏற்றுக்கொள்ளக் கூடியதே ஆகும். விஞ்ஞானம் ஆய்வுகளின் அடிப்படையில் வளர்ந்து கொண்டிருக்கிறது. வியத்தகு சாதனைகளைக் கொண்டிருக்கிறது என்பது மறக்க முடியாது. அதே போல் தான் விஞ்ஞானம் பெரும் அழிவுகளையும் இந்த உலகத்திற்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. ஒரு புறம் நன்மை என்று பார்த்தால், அதன் மறுபக்கம் மிகவும் கொடிய தீங்கை இந்த உலகத்திற்கு கொடுக்கிறது. ஆனால் உண்மையான அறிவியல் என்பது ஆய்ந்து, உணர்ந்து உலகத்திற்கு நன்மை பயப்பதே ஆகும். எனவே அவ்வறிஞர் சொன்னது போல் விஞ்ஞானம் என்பதற்கு ஈடான தமிழ்ச் சொல் அறிவியல் அல்ல என்பதே ஏற்றுக்கொள்ளக் கூடியதாகும். இப்பொழுது விஞ்ஞான வளர்ச்சியின் தாக்கமே உலகம் வெப்ப மயமாதலின் காரணியாகும். இவ்வாறுதான் ஏராளமான தீங்குகள் இந்த உலகைச் சூழ்ந்து கொண்டிருக்க விஞ்ஞானம் காரணமாகிறது. விஞ்ஞானம் இவ்வாறு ஒரு வழியில் தீங்கைக் கொடுத்துக் கொண்டிருக்க, உலக மயமாக்கல் என்ற பெயரில் நடைபெறும் கூத்துகள் இன்னொரு புறம் இயற்கையை அழித்துக் கொண்டு போகிற்து. இப்பொழுது அமேசன் காட்டில் ஏற்பட்ட தீயானது தானாகப் பற்றிக்கொண்டது அல்ல. இது திட்டமிட்டு வைக்கப்பட்ட பெருநெருப்பாகும். காடுகளில் வெப்ப வலயக் காடுகள், ஈர வலயக் காடுகள் என்று இரு வகைப்பட்ட காடுகள் உள்ளன. ஈரவலயக் காடுகளை மழைக் காடுகள் என்று அழைப்பார்கள். வெப்ப வலயக் காடுகளில் தீ பற்றுவது இலகுவான ஒன்றாகும். காற்றின் உராய்வில் தீ பற்றிப் மரங்களுக்குப் பரவிப் பின்னர் காடுகளை அழிப்பது உண்டு. இவற்றிற்கு இலங்கை, இந்தியா போன்ற வெப்ப வலயக் காடுகள் உதாரணமாகும். ஆனால் அமேசன் காடு மழைக் காடாகும். அங்கு தீப்பற்றுவது எளிமையான ஒன்றல்ல. அப்படிப் பற்றினாலும் அது விரைவில் அணைந்து விடும். இது தான் இயற்கையின் கொடையாகும். இப்பொழுது அமேசன் காட்டில் ஏற்பட்டுள்ள தீ தானாக ஏற்பட்டதல்ல. இது காட்டை

## அமேசன் காட்டில் மூட்டப்பட்ட உலகத்தின் நெஞ்சில் வைக்கப்பட்ட தீ!

அழிப்பதற்காகத் திட்டமிட்டு வைக்கப்பட்ட தீ என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. பிரேசில் நாட்டின் குடியரசுத் தலைவரின் நெறிப்படுத்தலில் இது வைக்கப்பட்டுள்ளது. இதற்குப் பெரும் துணையாக பெரிய நாடு ஒன்றும் உதவிகள் செய்துள்ளது. ஓரிரு இடங்களில் தீ எரியவில்லை பரவலாகப் பல ஆயிரம் இடங்களில் தொட்டம் தொட்டமாகத் தீ வைக்கப்பட்டுள்ளது. அது தான் ஈர வலயக்காட்டை நாசம் செய்து கொண்டிருக்கிறது.


**பொருண்மியத் தேவைக்காக வைக்கப்பட்ட தீ**

அமேசன் மழைக்காடு தென்அமெரிக்காவில் அமேசன் என்ற உலகின் பெரிய ஆற்றைச் சுற்றிப் பரவி இருக்கும் காடாகும். இதன் படுக்கை எழுபதாயிரம் சதுரக் கிலோ மீற்றரைப் பரப்பளவாகக் கொண்டதாகும். காட்டின் பரப்பளவு மட்டும் ஐம்பத்தையாயிரம் சதுரக் கிலோ மீற்றரைக் கொண்டதாகும். இக்காட்டின் பெரும்பகுதி அறுபது விழுக்காடு பிரேசில் நாட்டில் உள்ளது. பதின்மூன்று விழுக்காடு பெரு நாட்டிலும் பத்து விழுக்காடு கொலம்பியா நாட்டிலும் இருக்கிறது. மிகுதியானவை அந்நதி ஓடும் பல நாடுகளிலும் இருக்கிறது. அமேசன் காடு மழைப்பொழிவை ஏற்படுத்துவதால், அங்கு எப்பொழுது குளிர்மையான தன்மையே நிலவிவரும் இதற்கு உறு துணையாகத் திகழ்வது அமேசன் ஆறு ஆகும்.

அமேசன் படுகையில் முப்பது இலட்சம் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். காட்டுப்பகுதியில் மட்டும் பத்து இலட்சம் பூர்வகுடிகள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இவர்கள் தான் இந்தக் காட்டின் காவலர்கள் காட்டுக்குள்ளே. பல பகுதிகளில் வாழ்ந்து இடைக்கிடையே இடம்பெயர்ந்து கொண்டிருப்பார்கள். இவர்கள் இடம்பெயர்வதற்குக் காரணம் தாங்கள் வாழ்ந்த இடங்களில் காடு சிறிதளவு அழிந்திருந்தால் இடம் பெயர்ந்த பின்னர் அங்கு புதிய காடுகள் வளர வேண்டும்., என்பதாலே ஆகும். இவ்வாறு இயற்கையாக காடு வளர முடியுமே தவிர மனிதனால் காட்டை உருவாக்க முடியாது. மனிதனால் நூறு வகையான மரங்களைக்கூட நாட்ட முடியுமோ தெரியாது. ஆனால் காடு தானாக உருவாக்கும் மரங்களின் இனங்கள் பல ஆயிரம் வகைகளாக இருக்கும் அது தான் காட்டின் சிறப்பு இயற்கையின் அதிசயம். அமேசனின் சிறப்பே அது தான்

இதேபோல் தான் இக்காட்டில் மனிதனே கண்டுபிடிக்க முடியாத இலட்சக்கணக்கான மூலிகைகள் இருக்கின்றன. அத்துடன் பத்து இலட்சம் முதல் முப்பது இலட்சம்







வரையான உயிரினங்களும் வாழ்ந்து வருகின்றன. இவ்வுயிரினங்களில் பெரும்பாலானவற்றை மனிதனே அறிந்திலன்.

பிரேசில் நாட்டில் பெரிய பொருண்மிய நெருக்கடியால். மக்கள் துன்பச் சூழலில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இதை ஏதாவது செய்து சீராக்கலாம் என்று எண்ணிய ஆட்சி முதலில் அமேசன் காட்டின் ஆயிரத்து முன்னூறு சதுரக் கிலோ மீற்றர் காட்டை அழிக்க நடவடிக்கை மேற்கொண்டு சட்டங்களைத் தயாரித்தது. ஆனால் அங்கு வாழ்ந்த பூர்வ குடிகள் இதனை எதிர்த்து வழக்கு மன்றம் சென்றனர். நீண்ட சட்டப்போராட்டத்தின் பின்னர் நீதித்துறை காடழிப்பதற்குத் தடை விதித்தது. குடிமக்கள் வெற்றி கண்டனர் அதைப் பெரிதாகக் கொண்டாடினர். சுற்றுச் சூழலையும் உலக வெப்பமயமாதல் போன்ற இயற்கைப் பேரிடர்களையும் வைத்து வழக்கின் தீர்ப்பு ஆட்சியாளருக்கு எதிரானதாக வழங்கப்பட்டது.

இதனைப் பொறுத்துக்கொள்ளாத ஆட்சி மிகவும் நுட்பமாகத் திட்டமிட்டு ஆயிரக்கணக்கான இடங்களில் காட்டில் தீயை வைத்துக் காட்டை நாசம் செய்து தனது நோக்கத்தை நிறைவு செய்ய முனைந்தது. இது தான் பிரேசிலில் மழைக்காடட்டில் ஏற்பட்ட தீக்கான காரணமாகும். இதற்குத் துணையாக இருந்தது தான் சீனா. சீனாவின் பல தொழிற்சாலைகள் பிரேசிலில் இருக்கின்றன. அத்தொழிற்சாலைகளுக்காகவும் வேறு சிந்தனையுடனும் இக்காடழிப்பில் சீனா பிரேசிலுக் குத் துணையாக நின்றது. காட்டினை அழித்துப் புல்வெளிகளை ஏற்படுத்தி மாடுகளை பல்லாயிரக் கணக்கில் வளர்த்து அவற்றின் இறைச்சியை ஏற்றுமதி செய்தால் பெரும் இலாபம் அடையலாம் என்று தான் முதலில் திட்டம் கொண்டு வந்தது பிரேசில் ஆட்சி. அது தோற்றுப் போனதால் மாற்று வழியாக காட்டை அழித்து புல்வெளிகளை ஏற்படுத்தி மாடு வளர்ப்பதே ஆட்சியாளர்களின் நோக்கமாகும். இதுவே இன்று தீ பரவிப் பெருகுவதற்கான காரணமாகும். இயற்கையில் மழைக் காடுகளில் தீ பற்றாது அப்படிப் பற்றினாலும் அது தானாகே அணைந்து விடும். இப்பொழுது வைக்கப்பட்ட தீ பல ஆயிரம் இடங்களில் மூட்டப்பட்ட தீ உலகத்தையே அழிக்க கால்கோள் இட்ட தீ என்று தான் சொல்ல வேண்டும்.

பிரேசிலில் எரியும் காட்டுத் தீதானே நாம் எவ்வளவு தூரத்தில் உள்ளோம் இதனால் எமக்குப் பாதிப்பில்லைத் தானே என்று பலர் எண்ணக்கூடும். அது அப்படியல்ல. உலகத்தின் தட்ப வெப்பத்தையே சமனாகவும் சீராகவும் வைப்பதில் பெரும் பங்கை அமேசன் காடுகளே கொண்டுள்ளன. இருபது விழுக்காடு உயிரியத்தை வெளிவிடுவதோடு பெருமளவு கரியமில வாயுவையும் இழுத்து வைத்திருப்பது இக்காடுதான். இது மட்டுமல்ல தற்பொழுது விஞ்ஞானிகளால் ஏற்படுத்தப்பட்டு வரும் நச்சு வாயுக்களையும் சமன்செய்வதும் இக்காடுகளே. இங்கு வாழும் உயிரினங்களும் இவற்றுக்குத் துணையாக உள்ளதாக ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். இக்காடு அழிந்தால் கரியமில வாயுவின் விழுக்காடு அதிகரிக்கும் தடப் வெப்பம் மாறுபட்டு வெப்பம் அதிகரிக்கும். இதனால் மிகப்பெரும் ஆபத்து உலகத்திற்கு ஏற்படும் மிக மிக ஆபத்தான நிலையை நோக்கி உலகம் சென்று கொண்டிருக்கிறது. இது மனிதனால் தான் செய்யப்படுகிறது.

ஏராளமான இராணுவத்தினர் தீயை அணைக்க அனுப்பப்பட்டுள்ளனர். பல நாடுகளும் பெரும் உதவிகளைக் கொடுக்க முன் வந்துள்ளன. இவை எந்தளவுக்கு எப்பொழுது தீயை அணைக்கும் என்பது தெரியாமலே உள்ளது. மீண்டும் அங்கே புதிய காடு இயற்கையாகவே வளர அரசு இடம் கொடுக்குமா, அல்லது தனது திட்டத்தையே செயற்படுத்துமா என்பன விடை தெரியாமல் தான் இப்பொழுது இருக்கிறது.

இவ்வுலகில் இயற்கையை அழிப்பதில் எந்த மிருகமும் ஈடுபடுவதில்லை. மிருகங்கள் இயற்கையின் பாதுகாப்புக்கும் வளர்ச்சிக்கும் தான் பங்களிப்புச் செய்கின்றன. ஆனால் தன்னை மிருகங்களிலும் மேலானவன், உயர்வானவன் என்று சொல்லிக்கொள்ளும் மனித மிருகம் தான் சுற்றுச் சூழலை மாசுபடுத்தி, தட்ப வெப்ப நிலையைக் குலைத்து, உலகத்தை அழித்துக்கொண்டிருக்கிறது. இயற்கையுடன் ஒன்றித்து வாழ்வதே உண்மையான அறிவியல் ஆகும். ●

# காட்டுத் தீயின் பின்னணியில் கனிம வளக் கொள்ளையர்கள்!

அண்ணளவாகச் சொன்னால் ஒரு மாதகாலமாக அமேசன் மழைக்காடு தீப்பற்றி எரிந்து கொண்டிருக்கிறது. ஏறத்தாழ 1400 ஹெக்டர் அளவிலான பச்சைப் பசேல் என்றிருந்த காடு எரிந்து சாம்பல் மேடாக மாறியிருக்கிறது.

அமேசன் காடுகள் தீப்பற்றிக் கொண்டதில் பல உயிரினங்கள் வெந்து போயிருக்கின்ற நிழற்படங்கள் தற்போது இணைய வலைத்தளங்களில் வலம்வரத் தொடங்கிருக்கின்றன. மிகவும் துயர் நிறைந்த செய்தி இது.




நாசா தனது செயற்கைக்கோள் மூலம் பூமியைப் படம் பிடித்துக் கொண்டிருந்தபோது அமேசன் காடுகளுக்கு மேல் புகைப்படலம் போன்றதொரு தோற்றத்தைக் கண்டனராம். அது பனிப்புகாராக இருக்கலாம் என்று எண்ணியவர்களுக்கு அது பனிப்புகாரல்லாததொரு புற வடிவத்தைக் கொடுத்ததென்றும் அறிந்தபோது அவர்கள் விழித்துக் கொண்டனர். பூமியின் நுரையீரல் என்று வர்ணிக்கப்படும் அமேசன் மழைக் காடுகள் தீப்பற்றி எரிவதால் ஏற்படுகின்ற புகைமண்டலமே அது எனக் கண்டு கொண்டனர். உடனடியாகப் பிரேசில் நாட்டுக்கு அது தெரிவிக்கப்பட்டது. "அது வழமையாக ஏற்படும் 'தீ' தான்" என்ற அலட்சியப் போக்கோடு அதனைத் தட்டிக் கழித்தார் அந்த நாட்டுத் தலைவர் ஜேர் பொல்சொனாரோ. ஆனால் மக்கள் விட்டுவிடவில்லை. பல ஊடகவியலாளர்களினால் இச் செய்தியானது ஐநாவுக்குத் தெரிவிக்கப்பட்டது.

முன்னெப்போதும் இல்லாது அமேசன் மழைக்காட்டில் பற்றிக் கொண்ட தீ இம்முறை அதிக வேகம் கொண்டு பல ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலப்பரப்புக் காடுகளை அழித்துக் கொண்டதை உறுதிப்படுத்திய ஐ.நா. இத்தீயை அணைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிரேசில் நாட்டுத் தலைவரைக் கேட்டுக் கொண்டது. ஆனால், அவரின் அசமந்தப் போக்கை அறிந்து கொண்ட ஐ.நா. அதிகாரிகள் தீயை அணைக்க முயலாவிடில் பிரேசில் நாட்டின் மீது பொருளாதாரத்தடையைக் கொண்டுவரப் போவதாக எச்சரிக்கை செய்தனர். அதனைத் தொடர்ந்து தனது நாட்டு இராணுவத்தைத் தீ அணைப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடச் சொல்லிக் கட்டளை பிறப்பித்ததாகப் பிந்திய செய்திகள் சொல்லுகின்றன.

ஆனால் இத்தீப்பரம்பலானது ஒரு திட்டமிட்ட செயல் என அங்குள்ள பழங்குடியினர் தெரிவிக்கின்றனர். பிரேசிலில் நடைபெற்ற கடந்த ஜனாதிபதித் தேர்த்தலில் இராணுவத்தில் அதிகாரியாகப் பணியாற்றிய ஜேர் பொல்சனாரோ. அதிபராகத் தெரிவாகினார். அவர் வலதுசாரிக் கொள்கைகளைப் பின்பற்றுபவர். அவர் பதவிக்கு வந்ததும் பிரேசிலின் அபிவிருத்தியில் கவனம் செலுத்தப் போவதாகச் சொல்லி வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவிக்க வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொண்டார். அதற்காக அங்கு காணப்பட்ட சில சட்ட திட்டங்களையும் தளர்த்தத் தொடங்கினார்.

அமேசன் மழைக் காடுகள் கனிம வளங்கள் நிறையப் பெற்ற இடமாகவும், அதைவிட எரிபொருள் அகழ்வுக்கான இடமாகவும் அடையாளங்காணப்பட்ட நிலையில், ஏற்கனவே இருந்த சட்ட திட்டங்களால் அமேசன் காட்டுப் பகுதியை யாரும் நெருங்க முடியவில்லை. அதிபர் ஜேர் பொல்சனாரோவின் வெளிநாட்டு முதலீட்டை அதிகரிக்க வேண்டும் என்ற கொள்கைகளுக்குச் சாதகமாகச் சட்ட திட்டங்கள் மாற்றப்பட்டதைத் தமக்குச் சாதகமாகக் கொண்ட பல் தேசியக் கொம்பனிகள் அமேசன் பகுதியில் தமது தொழில் திட்டங்களை ஆரம்பிக்க ஆர்வம் காட்டின. பிரேசிலின் சுற்றுப் புறச் சூழல் தொடர்பாகக் காணப்பட்ட சட்டதிட்டங்களில் காணப்பட்ட முதலீடுகளுக்கு எதிரான விடயங்கள் நீக்கப்பட்டன. முந்திய சட்டங்களில் பெரும்பாலானவை அமேசன் காடுகளை அழிப்பதற்கும், அதனுள் பிரவேசிக்கவும் தடைசெய்வதாகக் காணப்பட்டதே புதிய சட்டத் திருத்தத்திற்குக் காரணம் என்று சொல்லப்பட்டது. புதிய சட்டத்தின்படி காடுகளை அழித்து விவசாய நிலங்களாக மாற்ற முடியும் என்றும், அமேசன் பகுதியில் புதிய தொழிற்துறைகளை ஆரம்பிக்கலாம் என்று சொல்லப்படுகிறது. காடழிப்புக்கு எதிராக அங்குள்ள பழங்குடி மக்கள் போர்க்கொடி ஏந்தினர். அவர்களுக்கு சார்பாகப் பல் வேறு நாடுகள், குறிப்பாக மேற்கத்தைய நாடுகளும் ஆங்காங்கே பிரச்சாரத்தில் ஈடுபட்டனர். ஜி7 நாடுகளின் கூட்டத்தில் பிரேசிலின் புதிய நடவடிக்கைகளும் எதிரொலிக்கத் தொடங்கின. அமேசன் காடழிப்பைச் சர்வதேசம் உலகத்திற்கெதிரான நடவடிக்கையாகப் பார்க்கத் தொடங்கின. அது அமேசன் காடழிப்புக்கெதிரான போராட்டமாக உருவெடுக்கத் தொடங்கியது. ஐநா வரை இந்தப் பிரச்சினை கொண்டு செல்லப்பட்டது. பிரேசில் அதிபர் ஜேர் பொல்சனாரோ இதனை உள்வீட்டுப் பிரச்சினை என்று சொல்லிச் சமாளிக்கத் தொடங்கினார். பிரான்ஸ் பிரதமரோ உலகத்தின் பிரச்சினை இது என்று குரலெழுப்பினார். கருத்து வேற்றுமை தொடர்ந்தன. தமது குரலுக்கு அதிபர் ஜேர் பொல்சனாரோ செவி சாய்க்கமாட்டார் என்று தெரிந்ததும் பிரேசிலுக்கு எதிராகப் பொருளாதாரத்தடையைக் கொண்டு வரவேண்டும் என்று அவர்கள் குரல்கொடுக்கத் தொடங்கினர். உடனடியாக அமேசன் தீயை அணைக்க அதிபர் ஜேர் பொல்சனாரோ. நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என வற்புறுத்தினர். அப்போதுதான் அதிபர் ஜேர் பொல்சனாரோ அடிபணியத் தொடங்கினார். தமது படைகளை அந்தப் பகுதிக்கு அனுப்பித் தீயை அணைக்க ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்.

அதிபர் ஜேர் பொல்சனாரோவின் பின்துணையோடுதான் சில பல் தேசியக் கம்பெனிகள் இந்தத் தீ பரம்பலை ஏற்படுத்தியதாகச் சொல்லப்படுகிறது. அவரது ஊக்குவிப்போடுதான் இது நடைபெற்றிருக்கிறதாக அங்குள்ள சுற்றுப் புறச் சூழலியலாளர் கருத்துத் தெரிவிக்கின்றனர். தமது நலனும், நாட்டின் வளமும் சுரண்டப்படக் கூடாது எனப் பழங்குடி மக்கள் போராடத் தொடங்கிவிட்ட பிறகு அவர்களின் எதிர்ப்பைச் சமாளிக்க முடியாது அதிபர் ஜேர் பொல்சனாரோ திண்டாடினார். வழமையாக வலதுசாரிகள் கையாளும் முறையையே இவரும் கையாண்டிருக்கிறார். முதலீட்டாளர்களைக் கொண்டு ஒரு குறுக்கு வழியினை அவர் மேற்கொண்டதே இந்தக் காட்டுத் தீ என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இது ஒரு திட்டமிட்ட செயல் என்பது அவர்கள் விடாப்பிடியான கருத்து. எத்தனை தடைகள் இருந்தாலும் பிரேசிலின் புதிய சட்ட திட்டங்களைப் பயன்படுத்தி அதில் மேலும் பல ஓட்டைகளைப் பல் தேசியக் கொம்பனிகள் ஏற்படுத்துமென்பது உறுதி. இதுவரை அமேசன் காட்டுப் பகுதியில் காணப்படும் கனிம வளங்களைச் சுரண்டக் காத்திருந்த கொள்ளையர்கள் சும்மா இருப்பார்களா? அதைவிட எண்ணெய் வளம் இருப்பதாகவும் சொல்லப்பட்ட பின்னர் மேலும் காட்டுத் தீ என்ற போர்வைகளில் காடழிப்பு நடைபெறப்போகிறது என்பது உறுதி. அந்த நாட்டின் அதிபர் தெரிவு பிழைத்ததால் பிரேசில் காடுகள் எரிகின்றன. ஒரு நாட்டின் அரசின் கொள்கை மாற்றம் உலகையே பாதிக்கும் என்றதற்கு பிரேசில் நல்லதொரு உதாரணமென்கின்றனர் அரசியல் ஆய்வாளர்கள்.

இந்த விடயத்தை இலங்கையில் நாமும் பல ஆண்டுகளாக அனுபவித்து வருகிறோம். எம்மிடம் வளம் அதிகளவு இல்லாவிட்டாலும் எமது நாடு அமைந்துள்ள கேந்திர முக்கியத்துவத்தைத் தமது ஆளுகைக்குட்பட்டதாகக் கொண்டு வருவதற்குப் பல நாடுகள் முயற்சித்து அதில் வெற்றியும் கண்டுள்ளனர். நக்கக் கொடுத்து நாவிழக்கச் செய்துவிட்டனர். இலங்கை மக்களை ஒரு இரவில் கடனாளியாக்கிவிட்டு அதன் இறைமையுள் கை விரல்களை நுழைத்துவிட்ட நாடுகளின் கைப்பொம்மைகளாக மாறிவிட்ட ஆட்சியாளர் அதனின்றும் மீள முடியாது திண்டாடுவதும் தெரிகிறது.

அரச அதிபர்கள் மிகவும் நாட்டுப் பற்றும், மனித நேயமும் உள்ளவர்களாக இருந்தால் தமக்கிருக்கும் இத்தகைய விடயங்கள் தொடர்பாக ஒரு நடு நிலைமைக் கொள்கை உடையவர்களாக இருந்து கொண்டு பிற நாட்டு முதலீட்டை அதிகரித்து, அவர்கள் நாட்டின் இறைமையில் தலையிட முடியாதவாறு பார்த்துக் கொண்டிருக்கலாம். ஆனால் அதனைத் தவறவிட்டுவிட்டுத் தமது ஆசனத்தைத் தக்க வைக்க அவர்கள் படும்பாடு? அது மக்கள் தவிப்பாக மாறியிருக்கிறது.

**நோக்கன்**



# காணி விடுவிப்பை நிராகரித்தனரா மைத்திரியும் சம்பந்தனும்?

துன்னாலைச் செல்வம்

வடக்கின் பொது மக்களின் காணிவிடுவிப்பு சம்பந்தமாக கடந்த 28 ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைப் பீடத்தைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள் கலந்துகொள்ளாததற்கு காரணங்கள் பல உண்டென ஊகிக்கப்படுகின்றது. அந்தக் காரணங்களில் ஒன்று, தமிழ் மக்களுக்கு நன்மை ஏற்படக்கூடிய காரணமாக இருக்குமா? அல்லது மைத்திரிபால சிறிசேனவின் அரசிற்கு நன்மையான காரணமாக இருக்குமா என்று மக்கள் குழப்பத்தில் இருக்கிறார்கள் என வேண்டுமானால் நாங்கள் நினைக்கலாம். ஆனால் மக்கள் தெளிவாக இருக்கிறார்கள் என்பதுதான் உண்மை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மக்கள் விடயத்தை விட, ரணில் அரசை காப்பாற்றுவதில் அதிக கரிசனை யுடன் செயற்பட்டு வருகின்றனர் என்பது கடந்த செயற்பாடுகளில் இருந்து தெரிகிறது. காணி விடயத்தில் அரசுடன் பேசி ஒரு முடிவுக்கு வருவோம் என்று கூறி வந்த நிலையில் இந்தக் கூட்டத்தில் பங்குபற்றாமல் தலைமைகள் நழுவியதில் அரசுடனான அவர்களது அவர்கள் உறவு என்பது பலமாக இருப்பது தெரிகிறது.

தலைமைகள் பங்குபற்றாமல் விட்டு விட்டு தங்கள் தரப்பில் 4 பேரை கூட்டத்துக்கு அனுப்பிவிட்டிருந்தகர். அங்கு தீர்மானம் எதுவும் எட்டப்படாமல் கூட்டம் முடிவடைந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. காணிகள் விடுவிப்பு தொடர்பில் இறுதி முடிவொன்றை எட்டுவதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட இந்தக் கூட்டம் பயனின்றி நிறைவடைந்தது என்று கூறுகின்றனர்.

நல்லுறவை வளர்த்து வந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஐயா மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளும்ன்ற உறுப்பினருமான சுமந்திரன் உட்பட மற்றும் சித்தாத்தன், செல்வம் அடைக்கலநாதன் போன்றோர் இதில் கலந்து கொள்ளாமையால் அதிருப்தியடைந்துள்ளாராம் ஜனாதிபதி. இதனால் கூட்டத்தில் இருந்து இடைநடுவில் வெளியேறினார் என்றும் செய்திகள் வெளிவந்துள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைகள் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை என்றால் கலந்து கொண்ட கூட்டமைப்பு பிரதிநிதிகளுடன் பேசி ஒரு முடிவுக்கு வந்திருக்கலாம். இடையில் வெளியேறியது காணி விடுவிப்பு கூட்டத்தில் முடிவு எட்டப்படாமல் இடம்பெற்றது என்ற மாஸ்ரர் பிளான் தமிழ்த் தேசியக் கூட்டமைக்கும் மைத்திரி அரசுக்கும் இடையில் ஏற்பாடு செய்யப்பட்ட நாடகமா என்று மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கூட்டத்தில் பங்கேற்ற ஜனாதிபதி, காணி விடுவிப்பு தொடர்பான அக்கறையற்றவராகக் காணப்பட்டார் என்றும், அவர் கூட்டத்தில் உன்னிப்பான அவதானத்தைச் செலுத்தவில்லை என்றும் கூட்டத்தில் பங்கேற்றவர்கள் தெரிவிக்கின்றனர். காணிப் பிரச்சினையில் ஜனாதிபதி அக்கறையற்றவர் என்றால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைகள் கலந்து கொள்ளாதது, இருவரும் அக்கறையற்றவர்கள் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது.

கூட்டமைப்பு சார்பில் மாவை சேனாதிராசா, சி.சிறிதரன், யோகேஸ்வரன், சார்ள்ஸ் நிர்மலநாதன், சாந்தி சிறிஸ்கந்தராசா, சிவமோகன், சரவணபவன், சிறிநேசன் ஆகியோர் சந்திப்பில் கலந்து கொண்டனர். இவர்கள் தலைமைகளின் ஆசீர்வாதத்துடன் தான் இந்தக் கூட்டத்துக்கு சென்றுள்ளனர். இது சம்பந்தனின் மாஸ்ரர் பிளான் அல்ல மைத்திரி அரசின் மாஸ்ரர் பிளானுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைசாய்த்துள்ளது எனக் கொள்ளலாம்.

முற்பகல் 11.00 மணிக்கு கூட்டம் ஆரம்பமாகும் என கூறப்பட்டிருந்தபோதும், முற்பகல் 11.20 மணியளவிலேயே அது ஆரம்பமானது. இதன்போது முக்கியத்துவம் வாய்ந்த எந்தவொரு விடயம் குறித்தும் பேசப்படவில்லை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அரை மணித்தியாலத்தின் பின்னர் கூட்டத்திலிருந்து வெளியேறினார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைகள் இந்தக் கூட்டத்தில் பங்கேற்காமைக்கான காரணம் எதுவும் இதுவரை வெளியாகவில்லை. இதில் இருந்து அவர்கள் மக்கள் பிரச்சினையை அடகுவைத்து தமது சுகபோகங்களை மட்டும் கருத்தில் கொண்டு அரசியல் பிழைப்பு நடத்துவது வெளிப்படையாகத் தெரிகிறது.

வடக்கில் காணிகள் விடுவிப்பு தொடர்பில் இறுதி முடிவொன்றை எட்டுவதற்காக இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டபோதும் அவ்வாறான முடிகள் எவையுமே எட்டப்படவில்லை. மாறாக, காணிகளை விடுவிக்க முடியாது என புதிய இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சவேந்திர சில்வா இந்தக் கூட்டத்தில் கடும்தொனியில் கருத்து வெளியிட்டார்.

இந்தக் கூட்டத்தில் மகாவலி அபிவிருத்தி அமைச்சர், தொல்பொருள் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம் ஆகியவற்றின் அதிகாரிகள், வடக்கு ஆளுநர், இராணுவம், கடற்படை அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் பங்கேற்றிருந்தனர். மக்களின் விடயத்தில் எந்த இடமானாலும் பங்குகொள்ளுவது என்பது தமிழ் மக்களின் மீதான அக்கறையைக் காட்டும். ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அக்கறையற்ற நிலைமையும் இங்கு தென்படுகிறது. நல்லிணக்க அரசை எந்த வேளையிலும் காப்பாற்றுவதற்கு நிபந்தனையின்றி ஆதரவு வழங்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு காணி விடுவிப்பு சம்பந்தமாக கூட்டத்திலும் பங்குபற்றாமல் தமது ஆதரவை வழங்கியுள்ளனர் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது.

எனினும் இந்தக் கூட்டத்தில் வடக்கில் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படாத வகையில் விடுவிக்கக்கூடிய காணிகளை விடுவிக்க துரித நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி உரிய துறைகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளதாக கூறப்படுகிறது. மக்களின் காணிகளை பிடித்து வைத்துக் கொண்டு அதனை விடுவிப்பதற்கு தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் வராத வகையில் விடுவிக்க வேண்டும் என்று கூறுவது இந்த நாட்டில் தமிழ் மக்களுக்கு உரிமை இல்லை என்பது தெரிகிறது.

தேசிய பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கு இராணுவ முகாம்கள் அவசியமாகும் என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும். உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் அதற்கான ஒரு அனுபவமாக அமைந்ததுடன், பிரதேசத்தினதும் மக்களினதும் பாதுகாப்பிற்காக பாதுகாப்பு முகாம்கள் காணப்பட வேண்டும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார். நாட்டுக்காக தமிழ்மக்கள் தமது காணிகளை விட்டு விட்டு வீதிகளிலா நிற்க வேண்டும்? உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் இடம்பெற்ற இடத்தில் இல்லாத அளவுக்கு அதிகமான படையினர் வடக்கில் நிலைகொண்டுள்ளனர்.

விடுவிக்கக்கூடிய அனைத்து நிலங்களையும் விடுவிப்பதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்த ஜனாதிபதி, பேச்சுவார்த்தைகளினூடாக அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வுகாண முடியும் என்பதையும் சுட்டிக்காட்டினார்.

இதனைப் பேசுவதற்கு இந்தக் கூட்டத்தில் தமிழ்த் தலைமைகள் என்று சொல்லிக் கொள்பவர்கள் இல்லை. இந்தக் கூட்டத்தில் கண்டிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டிருக்க வேண்டும். இந்த மக்களின் முக்கியமான காணிப்பிரச்சினையில் கலந்து கொள்ளாது மைத்திரி அரசை காப்பாற்றிய கேவலம் எந்த வரலாற்றிலும் இல்லை.

இந்தக் கூட்டத்தில் ஜனாதிபதி காணியை விடுவிப்பேன் என்று சொல்வதும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூட்டத்தில் கலந்துகொள்ளாமல் இருப்பதையும் பார்க்கின்ற போது இரு தரப்பும் மக்கள் விடயத்தில் அக்கறையின்றி எதிர்வரும் தேர்தலில் குறியாக இருப்பது தெரிகிறது.

# கறுப்பி சுமதியின் முகில்கள் பேசட்டும்: உடலின் வேட்கை

வெகு இயல்பாக ஏற்படும் பாலியல் விருப்பத்தைக் கற்போடு சேர்த்துப் புனிதமாக்கியதின் விளைவாகவே தக்க உறவு தகாத உறவு என்பதான சொல்லாடல்கள் உருவாகின. அதன் தொடர்ச்சியாகக் குற்றவுணர்வு கொண்ட மனத்தின் தவிப்புகளை எழுதிக்காட்ட வேண்டியதாகியது என்பது அவ்வகைப்பெண்ணியவாதிகளின் நிலைப்பாடு.இந்நிலைப்பாட்டைக் கவிதைகளில் நீண்ட காலமாகச் சொல்லிவருகின்றனர் பெண்கள். கவிதை வடிவம் வெளிப்படையாக எதனையும் காட்டாது என்பதால் அதற்குள் செயல்படும் பெண் மனத்தை வாசிப்பவர்களின் நிலைப்பாட்டிற்கேற்ப விளக்கம் சொல்லிக் கொள்கிறார்கள். ஆனால் புனைகதை அப்படியான பூடகத்தை அனுமதிப்பதில்லை. அதற்கு ஒருவித வெளிப்படைத் தன்மை உண்டு. கதையின் மைய விவாதத்தை வெளிப்படையாகவோ, குறிப்பாகவோ காட்டிக்கொள்ளாமல் கதையை முடித்துவிட முடியாது.

தீவிரவாதப் பெண்ணிய நிலைபாட்டைத் கொரோசாவாவின் திரைப்படங்கள் என்றால், அம்மாடியோவ் சாப்பாடுகூட வேண்டாம். வீட்டில் எப்போதுமே கசல் மியூசிக்தான். இத்யாதி இத்யாதி நான்சென்ஸ் எல்லாம் அவிழ்த்து விடப் போவதில்லை அந்த இரவு ஐ வாஸ் லுக்கிங் ஃபார் எ குட் கெம்பெனி. அவ்வளவுதான் அந்த இடத்தில் சயனுக்குப் பதிலுக்காக வேறு ஒரு ஆண் இருந்திருந்தாலும் இப்படித்தான் நடந்திருக்குமா என்று கேட்டால் என்னிடம் பதில் இல்லை .இருக்கலாம் இல்லாமலும் இருந்திருக்கலாம் சம்திங் அபொட் சயன்.. என்னை அவனிடம் இழுத்துச் சென்றது அவ்வளவுதான்.

அந்த நிகழ்வை மறக்கத் தக்க நிகழ்வாகச் சொல்லும் அவள் இதையெல்லாம் தனது கணவனிடம் சொல்லிப் பாவ மன்னிப்புக் கேட்கப்போவதில்லை என்பதிலும் தெளிவாக இருக்கிறாள். இந்தத் தெளிவு நடைமுறை வாழ்க்கையில் பலரும் கொண்டிருக்கும் தெளிவுதான். ஆண்கள் ஒவ்வொரு கணத்திலும் வெவ்வேறு குற்ற நடவடிக்கைகளைச் செய்துவிட்டு மறந்துவிட்டு

## எழுதும் பெண்களும் எழுதப்படும் பெண்களும் - 14



தொடர்ச்சியாகத் தனது கதைகளில் எழுதிப் பார்க்கும் தமிழ்ப் புனைகதையாளராக இருக்கிறார் கறுப்பி சுமதி அண்மையில் வந்துள்ள உங்களில் யாராவது முதல் கல்லை எறியட்டும் .(கறுப்புப்பிரதிகள், 2018) என்ற சிறுகதைத் தொகுதியில் இருக்கும் 13 கதைகளுமே பெண்ணியம் என்னும் கோட்பாட்டு நிலையை உள்வாங்கிப் பெண்களையும் ஆண்களையும் முன்வைக்கும் கதைகளாக இருக்கின்றன. 13 கதைகளில் மூன்றாவது கதையாக இருப்பது முகில்கள் பேசட்டும் என்ற கதையின் மையவிவாதமே தொடக்கத்தில் தரப்பட்ட விவரிப்பு. விவரிக்கப்படும் அந்த நிகழ்வில் இடம்பெறும் அந்தப் பெண் என்னவகையான மனநிலையில் இருந்தாள் என்பதையும் அவளது மனவோட்டம் என்னென்ன முடிவுகளை எடுத்தது என்பதையும் கதையில் எழுதிக் காட்டுகிறார் கறுப்பி சுமதி:

அதன் பின்னர் பெட்டிகளை அடுக்குவதும், ஓய்வெடுப்பதும், இந்தியப் பயணத்தை மீட்டுப் பார்த்து சிரித்து மகிழ்வதுமாக இரண்டு நாட்களையும் கழித்து கனடா திரும்பினோம். அந்த இரண்டு நாட்களும் நான் தனியே இருப்பதை தவிர்த்தேன்.

என் நினைவு சயனைச் சுற்றி வருவதை தவிர்ப்பதற்குத்தான் அப்படிச் செய்தேன் என்பதை நானே ஒப்புக்கொள்ள மறுத்துக் கொண்டிருந்தேன். என் சந்தோசத்தை அமுக்கி குற்ற உணர்வு மேலோங்கி மேலோங்கி என்னை அவஸ்தைக்குள் தள்ளி விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்பதில் நான் உறுதியாக இருந்தேன்

உண்மைக் காதலுக்குத் துரோகம் செய்துவிட்டேன் என்று அவஸ்தைப் படவோ, இல்லாவிட்டால் நியாயப்படுத்தவோ நான் விரும்பவில்லை. “யு நோ வாட்?” உங்களுக்கு இதெல்லாம் விளங்காது. எனக்கும் சயனுக்கும் ஒரே அலைவரிசை, இரண்டு பேரும் டிக்கன்ஸ்சை விழுந்து விழுந்து வாசிப்போம்.

நகர்ந்துவிடுகிறார்கள் ஆனால் பெண்கள் மட்டும் குற்றவுணர்வுக்குள் தவிப்பதாகச் சொல்லப்படுகிறது. ஏன் பெண்கள் மட்டும் தங்கள் வாழ்க்கையை இழக்க வேண்டும் என்ற கேள்வியாக இருக்கிறது. அதனையும் கதையின் நிறைவுப்பகுதியில் சொல்லிவிடுகிறார்:

அவனோடுடனான எனது வாழ்க்கையை எதற்காகவும் இழக்க நான் தயாராயில்லை. இந்திய பயணத்தில் அனைத்தையும் நான் ஜேயிற்குச் சொல்லிக் குதூகலிக்க போகின்றேன்.ஆனால் ஒன்றை மட்டும் மறைக்கப் போகிறேன். என் மும்பை பயணம் மறக்க முடியாத ஒன்று அதில் சயன் ஒரு துளி மட்டுமே. விமானம் முகில்களுக்குள் நுழைந்து

**அ.ராமசாமி**

சென்று கொண்டிருந்தது நான் சாய்ந்து கண்களை மூடிக்கொண்டேன். எனக்கு ஜே விமான நிலையத்தில் காத்திருப்பான்( ஜெ. அவளது கணவன்)

சயனோடு ஏற்பட்ட உறவு ஒருதுளி எனச் சொல்லும் அவள், அவனைச் சந்தித்ததையும் ஈர்க்கப்பட்டதையும் பெரும் தயக்கத்தோடு நடந்ததாகவோ, குற்றச் செயலில் ஈடுபடப்போகிறோம் என்ற தவிப்போடு செய்ததாகவும் காட்டவில்லை. இந்தக் கூறுகளே அந்தக் கதையைத் தீவிரநிலைப் பெண்ணியக் கதையாக முன்வைக்கிறது. முகில்கள் பேசட்டும் கதையின் விவாதப்பொருள் இதுதான். ஆனால் கதையின் கட்டமைப்பில் இந்நிகழ்வின் இடம் ஐந்தில் ஒரு பங்குதான். மற்ற நான்கு பங்கு அவர்களின் பயண ஏற்பாடு, மும்பையில் சுற்றித்திரிதல், அங்கே நினைவுப் பொருட்களை வாங்கிப் பெட்டிக்குள் நிரப்புதல், இரவில் தங்குதல் எனப் பயணத்தையே விரிவாக எழுதியிருக்கிறார்.

(தொடரும்)

# யாழ். சர்வதேச திரைப்பட விழா – 2019

## ஐந்தாவது தடவையாக இம்முறையும்

யாழ். சர்வதேசத் திரைப்பட விழா. ஐந்தாவது தடவையாக இம்முறையும் நடைபெறவிருக்கிறது. எதிர்வரும் செப்ரெம்பர் 3 ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கின்ற விழாவானது தொடர்ந்து ஏழு நாட்களுக்கு நடைபெற்று செப்ரெம்பர் 9ஆம் திகதி விருது விழா நிகழ்வோடு முடிவடைகிறது.

யாழ். நகரிலுள்ள மொத்தம் நான்கு அரங்குகளில் குறும்படங்கள், ஆவணப் படங்கள், முழுநீளப்படங்கள், சிறுவர் படங்கள் என ஏறத்தாழ நூறு படங்கள் காண்பிக்கப்படவிருக்கின்ற அத் திருவிழாவின் ஆரம்பத் திரைப்படமாக 'ட்ரான்ஸ்சிற்' (Transit- Germany / 2018 / 101") காண்பிக்கப்படவிருக்கிறது.யாழ். நகரிலுள்ள காகில்ஸ் சதுக்கத்தில் உள்ள மஜெஸ்ரிக் திரையரங்கில் 03.09.2019 அன்று மாலை 4.30 மணி அளவில் நடைபெறவிருக்கும் ஆரம்பவிழாவின் பின்னர் அத்திரைப்படத்தை நீங்கள் பார்வையிடலாம். அங்கு மட்டுப்படுத்தப்பட்ட இருக்கைகளே உண்டு. அதனால் முன்அனுமதி பெற்றவர்கள் மாத்திரமே அனுமதிக்கப்படுவர். இதற்கான இலவச அனுமதியை விழாக் குழுவினரோடு தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

இறுதி நாளான செப்.9 ஆம் திகதி யாழ். நகரிலுள்ள காகில்ஸ் சதுக்கத்தில் உள்ள மஜிஸ்ரிக் திரையரங்கில் நடைபெறவிருக்கும் விருது விழா நிகழ்வைத் தொடர்ந்து பாங்சு ('Paangshu' by Visakesa Chandrasekaram - SriLanka | 2018 | 85") என்ற திரைப்படம் காண்பிக்கப்படும். அன்றைய விழாவுக்கும் முன் அனுமதி பெற்றவர்களே அனு-மதிக்கப்படுவார்கள். அதற்கான இலவச அனுமதியை விழாக் குழுவோடு தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

இந்த விழாவிலே பிரபல சினிமாத் தயாரிப்பாளரும், இயக்குநருமான பிரசன்ன விதானகேயின் படைப்புகள் திரையிடப்பட்டு அவர் திரை உலகப் பயணத்தைப் பின்னோக்கிப் பார்பதோடு அவர் கௌரவிக்கப்படவிருக்கிறார். அத்துடன் வாழ்நாள் சாதனையாளர் என்ற விருதும் வழங்கப்பட இருப்பதோடு வழமையாக இலங்கைக் குறும்படத்துக்கும், தரமான முழு நீளத் திரைப்படத்துக்கும் விருதும் கௌரவமும் வழங்கப்பட இருக்கிறது. இதனிடையே பயிற்சிப் பட்டறையும், சினிமா வகுப்புகளும் நடைபெறவிருக்கிறது.



எம்.அனுசரன்

# உண்மையைத் தேடுகிறோம்... நடந்தது என்ன?

## யாழ்.பல்கலைக்கழகம் பற்றியது




பேராசிரியர் கந்தசாமி யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் நிர்வாகத்தை மீளவும் சீர்படுத்தி சிறந்ததொரு ஒழுங்கமைப்பை தேர்ந்தெடுக்கப்படப் போகும் புதிய துணைவேந்தருக்கு ஏற்படுத்திக் கொடுப்பதற்காக நியமிக்கப்பட்டவர். பல்கலைக்கழக சுயாதிபத்தியத்துக்கு முக்கியத்துவம் அளிக்கும் யாழ். பல்கலைக்கழக பேரவை உறுப்பினராகவுள்ள பேராசிரியர் ஐயதேவ உயங்கொட போன்றவர்களும் துணைவேந்தரை நீக்கி தகுதி வாய்ந்த அதிகாரி ஒருவரை நியமிக்கவேண்டும் என பரிந்துரைத்த பின்னரே தகுதி வாய்ந்த அதிகாரியாக பேராசிரியர் கந்தசாமி நியமிக்கப்பட்டார். அவர் சீர்படுத்திவிட்டு செல்வது மிக அவசியமாகும் புதிய துணைவேந்தரை தேர்ந்தெடுக்கின்ற தேர்தல் அதிகாரியாக மட்டும் அவர் நியமிக்கப்படவில்லை.

களவு, ஊழல் மாணவிகள் மீதான (முக்கியமாக கலைப்பீடம்) பாலியல் சார்ந்த துஸ்பிரயோகங்கள் போன்ற பல விடயங்கள் உள்ள போதும் மாணவர்களின் பரீட்சை மற்றும் பெறுபேறுகளை வெளியிடல் போன்றவற்றை மிக மிக முக்கியமானதாக அவர் நோக்கலாம் கடந்த காலங்களில் வெளிவாரி கற்கை அலகில் இடம்பெற்ற பரீட்சை குளறுபடிகள் பிரசித்தமானவை பேராசிரியர் துரைராஜா காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட வெளிவாரி கற்கை அலகு பரீட்சை எழுதாத மாணவர்களுக்கு பெறுபேறுகளை அறிவித்தும் சித்தி பெறாதவர்களை சித்தி பெற்றவர்களாக அறிவித்தும் பல குளறுபடிகளை மேற்கொண்டது அக்கற்கை நெறிகளின் இணைப்பாளர்கள் உதவிப்பதிவாளர்கள் முதற் கொண்டு அலுவலக தொழி லாளி வரை பல மோசடிகளை மேற் கொண்டமைக்கு ஆதாரங்கள் இருந்தபோதும் இவையாவும் மூடி மறைக்கப்பட்டன அத்துறையில் கடமையாற்றிய சில இணைப்பாளர்களும் உதவிப் பதிவாளர்களும் தமக்கு முன் கடைமையாற்றியவர்களின் தவறுகளையும் ஊழல்களையும் பின்னாளில் தனிப்பட்ட முறையில் தமது நண்பர்களிடம் வெளிப்படுத்தினர். நாடளாவிய ரீதியில் வெளிவாரி கற்கை அலகுகளை சீர் செய்வதற்காக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு இக் கற்கை நெறியையே நிறுத்தி வைத்து சில காலம் செல்ல, ஆட்சி மாற்றம் பதவி மாற்றம் எல்லாம் ஒரு சேர மீளவும் எவ்வித பாரிய சீர்படுத்தருமின்றி கற்கை நெறிகளி மீளுவும் ஆரம்பிக்ப்பட்டு மீண்டும் பழைய கதையே தொடர்கிறது பெரும் எண்ணிக்கையிலான மாணவர்களின் விடைத்தாள்கள் ஒழுங்கான முறையில் திருத்தப்படுகின்றனவா என்பதும் சந்தேகம்தான்

வெளிவாரி கற்கை அலகுகள் மட்டுமல்ல பல்கலைக்கழகம் வருமானம ஈட்டும் சுயநிதியீட்ட கற்கை நெறிகளான "ஒன்லைன்" வியாபாரமுகாமைத்துவம் மற்றும் பட்ட மேற்படிப்பு கற்கை நெறிகளும் கூட - பல்கலைக்கழகத்துக்கு வருமானம் ஈட்டும் சிலர் சுலபமாக பட்ட சான்றிதழ் பெறும் - சில பீடாதிபதிகளும் தற் பெருமையுடன் பீற்றிக் கொள்ள வழிவகுக்கும் கற்கை நெறிகளாகவே காணப்படுவதாக பல கல்வியலாளர்கள் கவலைப்படுகின்றனர் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் கூட பட்ட மேற்படிப்பு கற்கை நெறிகளில் புதியன புகுத்தப்படாமை குறித்து அவருடைய பொது வெளிசந்திப்புகளில் ஆதங்கத்தை வெளிப்படுத்தி உள்ளார். சுயநிதியீட்ட கற்கை நெறிகளின் மூலம் ஈட்டப்படும் வருமானங்களின் மூலம் வேறு பல்கலைக்கழகங்களில் பணியாளர் காப்புறுதி போன்ற நலச்சேவைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட இங்கு காணிக் கொள்வனவு இடம் பெறுகின்றதென்றும், முகாமைத்துவ பீடத்தின் புதிய கட்டிடம் அமைந்துள்ள திருநெல்வேலி பாற்பண்ணைப் பகுதியில் சில பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் எதிர்காலத்தில் பல்கலைக்கழகம் இக் காணியை உயர் விலைக்கு கொள்வனவு செய்யுமென பரப்புரை செய்தே பங்கு சந்தை போல் காணி வியாபாரத்தை ஆற்றிவருவதாக சில காலத்துக்கு முன்னர் ஊழியர் சங்கம் தனது மேடைகளில் குற்றஞ்சாட்டியது.

இவையெல்லாம் கலைப்பீடம் மற்றும் முகாமைத்துவ பீடங்கள் சம்பந்தப்பட்டவை. நாமெல்லாம் மிகவும் ஒழுங்கானவர்கள் என விஞ்ஞானம் சார்ந்த பீடங்களைச் சேர்ந்தவர்கள் மார் தட்ட முடியாதவாறு அங்கும் பிரச்சினைகள் காணப்படுகின்றன.

இம்மாதம் மருத்துவ பீட இறுதியாண்டு மாணவர்கள் தமது பரீட்சை பெறுபேற்றில் ஏற்பட்ட குளறுபடிகள் தொடர்பாக கிளர்ந்தெழுந்தனர். ஆனால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் உதவியுடன் மாணவர்கள் பெறுபேறுகள் மீள சீரமைக்கப்பட கிளர்தெழுந்த மாணவர்கள் கோரிய விசாரணைகள் எதுவும் இடம்பெறாமலே விஷயம் மூடப்பட்டது. இத்தனைக்கும் தமிழ் மக்களின் பிரச்சினைகளை தமிழ் அரசியல்வாதிகள் சரிவர அணுகுவதில்லை எனக்கூறி ஆரம்பிக்கப்பட்ட தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவர்களில் ஒருவரான வைத்திய நிபுணர் ஒருவர் யாழ். பல்கலைக்கழக பேரவையில் அங்கம் வகிக்கின்றார். அவர் யாழ். மருத்துவ பீடத்தின் பழைய மாணவர். மாணவர்களின் முறைப்பாடுகளை அவரது செவிமடுப்பாரா என்பதும் கேள்விக்குறியே.

நடந்தது இது தான். மருத்துவ மாணவர்கள் தமது கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்த பின்னர் உள்ளகப் பயிற்சிகளுக்காக நாடெங்கிலுமுள்ள மருத்துவ மனைகளுக்கு தரம் பிரித்து அனுப்பப்படுவதற்காக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு பொதுவான பரீட்சை முறையொன்றை 15 ஆண்டுகளுக்கு முன் அறிமுகம் செய்தது. இறுதியாண்டின் சில பரீட்சை·வினாத்தாள்கள் நாடெங்கும் பொதுவானவை. இதனடிப்படையில் மாணவர்கள் தரம் பிரிக்கப்படுவர். இதனையும் உள்ளக பரீட்சைகளையும் அடிப்படையாகக் கொண்டு இறுதியாண்டு பரீட்சை முடிவுகள் வெளியிடப்பட்ட பின் புள்ளிக் கணிப்பீட்டில் சிறிய மாற்றங்களுடன் பொதுப் பரீட்சை முடிவுகள் மானிய ஆணைக்குழுவுக்கு அனுப்பப்படும். இதில் தான் தவறு நடந்தது.

உள்ளக பரீட்சையில் 100 புள்ளிக்கு கணிப்பிடப்படும். மருத்துவ உளசிகிச்சையியல் பாட விடைத்தாள், பொது பரீட்சையில் 200 புள்ளிக்கு கணிப்பிடப்படும். ஆனால், முதலாவது மாணவரையும், பட்டியலின் இறுதி மாணவரையும் தவிர ஏனைய அனைவருக்கும் 100 புள்ளிக்கு கணிப்பிடப்பட்டு பெறுபேறுகள் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுக்கு அனுப்பப்பட்டன. இதனால் சகல பல்கலைக்கழக மருத்துவ பீடங்களின் தர வரிசைப் பட்டியல் மானிய ஆணைக்குழுவால் வெளியிடப்பட்ட போது யாழ். மருத்துவ பீட மாணவர்களின் தரவரிசை பின்தங்கியது. தரவரிசைப்பட்டியல் வெளியிடப்பட்ட பின் இடம்பெற்ற மருத்துவ பீடச் சபைக் கூட்டத்தில், இந்த ஆண்டு எமது மாணவர்களின் தரவரிசை பின்தங்கியமைக்கு எமது மாணவர்கள் சரிவரக் கற்காமையே காரணமென குற்றஞ்சாட்டப்பட்டனர்.

ஆனால் இயல்பாகவே புத்திசாலிகளான மருத்துவ மாணவர்கள் ஒரு இளம் விரிவுரையாளரின் துணை கொண்டு ஆராய முற்பட்ட போது அவர்களுக்கு சந்தேகம் எழுந்தது. பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவானது தரவரிசை (Criteria) கிரைட்டீரியாமுறைமையில் ஏதாவது புதிய மாற்றத்தைக் கொண்டு வந்ததா என அறிய முற்பட்டனர். தெளிவான ஆதாரங்கள் இன்றி வழக்கு எதுவும் போட முடியாதென சட்டத்தரணிகள் மறுக்க இவர்கள் அமைச்சர் விஜயகலா அவர்களை சந்தித்தனர். அதிலிருந்து கடவுளின் கிருபை தங்களின் பால் திரும்பியதாக மாணவர் ஒருவர் குறிப்பிட்டார்.

அடுத்த நாள் பிரதம அமைச்சர் ரணில் யாழ்ப்பாணம் வரவிருந்தார். அவருடன் சந்திப்புக்கு விஜயகலா ஏற்பாடு செய்ய, ரணில் உடனடியாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுடன் தொடர்பு கொண்டு மாணவர்களையும் அங்கு செல்லுமாறு பணிந்தார். மானிய ஆணைக்குழு அதிகாரிகள் புள்ளிப்பட்டியலை ஆராய்ந்த போது குறித்த பாடத்துக்கு யாழ்ப்பாண மாணவர்கள் குறைவாக புள்ளிகளை பெற்றிருப்பது தெரியவந்தது. இத்தகவலுடன் மாணவர்கள் யாழ்ப்பாணம் விரைந்து ஏற்கனவே உதவிய விரிவுரையாளரின் துணைகொண்டு ஆராய்ந்த போது மருத்துவ பீடாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற தவறு தெரியவந்தது. புள்ளிப்பட்டியல் திருத்தப்பட்டு மானிய ஆணைக்குழுவுக்கு அனுப்பப்பட்டது.

தவறுகள் இடம்பெறுவது சகஜம் தான். ஆனால் பரீட்சை நெறிமுறைகள் சரிவர பின்பற்றப்படாமையே தவறுக்கான காரணமாக அமைந்தது. சில தனியார் பல்கலைக்கழகங்கள் பட்டம் வழங்கும் போது சில பாட மாற்றங்களுடன் வெளிநாட்டு பல்கலைக்கழக பட்டத்தையும் ஒருசேரப் பெற வழிவகுத்துள்ளன. கணனித்துறையில் பயில்வோர் மாலபே தனியார் பல்கலைக்கழகத்தில் SLITT பட்டம் பெறும் போது அவுஸ்திரேலியாவின் கேட்டின் பல்கலைக்கழக பட்டத்தையும் சில பாட மாற்றங்களுடன் பெறமுடியும். அதுபோலவே இறுதியாண்டு மருத்துவபீட மாணவர்களுக்கும் மருத்துவ மானிப் பட்டத்திற்காக ஒரு பரீட்சையும், சிறிய புள்ளியிடல் மாற்றங்களுடன் அனைத்து மருத்துவ பீட மாணவர்களின் ஒட்டுமொத்த தரவரிசை கணிப்பீட்டுக்காக வேறு பரீட்சை முறையும் நடாத்தப்படுவதாக நாம் இலகுவாக குறிப்பிட முடியும். ஆனால் எல்லாப் பரீட்சைகளின் இறுதிப்புள்ளிகள் பரீட்சை முடிவுகளை பரிசீலிக்கும் பீடச்சபைக்கும், பின் மூதவைக்கும் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வேண்டும். குறித்த பாடத்துக்கு 100 புள்ளிகளுக்கு மதிப்பிட்ட போது அதைப் பரிசீலித்த பீடச்சபை 200 புள்ளிகளுக்கு அது புள்ளிமாற்றம் பெற்றபின் பரிசீலிக்கவில்லை.

கல்விசாரார் ஊழியர் ஒருவர் கணனியில் புள்ளிகளை மாற்றியமைத்த பின், அவரும் பீடாதிபதியும் மட்டும் சம்பந்தப்பட்ட விவகாரமாக இது அமைந்ததாலேயே தவறு கண்டு பிடிக்கப்படவில்லை. குறிப்பிட்ட ஊழியரின் உதவி பீடாதிபதியின் அடுத்த பதவி உயர்வுக்கு தேவை என்பதாலேயே பீடாதிபதி விடயத்தை மூடி மறைப்பதாக மாணவர் ஒருவர் மனம் கசந்து குறிப்பிட்டார். குறிப்பிட்ட ஊழியர் அரசியல் செல்வாக்கின் காரணமாக உள்வாங்கப்பட்டவர் என்பதையும், பீடாதிபதி மிகவிரைவில் துணைவேந்தருக்கு போட்டியிடக்கூடும் என்பதையுமே மாணவர் இவ்வாறு குறிப்பிட்டார் என்பதையும் எம்மால் ஊகிக்க முடிகின்றது.

ஆனால் பேராசிரியர் கந்தசாமி அவர்கள் இவ்விடயத்தில் மௌனமாக இருந்து விட முடியாது. அவ்வாறு மௌனமாக இருப்பதற்காக அவருக்கு தகுதிவாய்ந்த அதிகாரி நியமனம் வழங்கப்படவில்லை. முன்னர் நடந்த ஊழல்களை, தவறுகளை களவுகளை, விசாரிக்க அவர் எந்த முனைப்பும் எடுத்ததாக தெரியவில்லை. ஆனால் அவர் காலத்தில் நடந்த தவறு ஏன் நடந்ததென விசாரித்து இனியும் அவர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இது சம்பந்தமாக மருத்துவபீடத்தில் பணிபுரியும் சிலரை அணுகிய போது அவர்கள் எம்மீது சீறிச்சினந்தனர் இது மாணவர் சம்பந்தப்பட்ட விடயம் அல்லவா அவர்களே மெனமாக இருக்கும் போது எமக்கு எதற்கு வீண்வம்பு? பணியாளர் ஒழுக்கம் என்பது இங்கு அற்றுப் போய்விட்டது. இதுபோல் இனியும் நடக்கும் எனச்சீறிய அவர்கள் கல்விசாரா ஊழியர் ஆட்சேர்ப்பில் உயர்கல்வி அமைச்சர் ஹக்கீம் நடந்து கொண்ட விடயத்தை பத்திரிகையாளர்களால் எழுத முடியாதா? என எம்மிடம் கேள்வி கேட்டனர் அது பற்றி அடுத்த வாரம் பார்ப்போம்.

# ஊடுருவி உலகநாதன்



ஒரு நாட்டில் சட்டம் ஒழுங்காக கடைப்பிடிக்கப்பட்டால் அந்த நாடு சிறந்த நாடாகவும் ஏனைய நாடுகளுக்கு முன்னுதாரணமாகவும் திகழும் என்பது உண்மை. பல குற்றவாளிகள் விடுதலை செய்யப்பட்டாலும் ஒரு நிபராதி தண்டிக்கப்படக் கூடாது என்பதில் சட்டம் கவனமாக கையாளப்பட வேண்டியது அவசியம். இன்றைய சூழலில் மக்கள் தமக்கு ஏற்படும் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு நீதிமன்றம் சென்று தீர்ப்பதற்கு பின்வாங்குகிறார்கள். சரியோ பிழையோ தாங்களே பேசி தமது பிரச்சினையை தீர்த்துக் கொள்கிறார்கள். இதற்குக் காரணம் நீதிமன்றம் சென்றால் அலைச்சல் தான் மிஞ்சும் என்ற பொது கருத்து இருக்கிறது.

காணி தொடக்கம் விவகாரத்து வரை ஒரு முடிவுக்கு வராமல் இழுபட்டுக் கொண்டு போகும் வழக்கில் சம்பந்தப்பட்டவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கின்றனர். தமது வழக்கு இந்த திகதியில் வருகிறது என்று வழக்காடுபவருக்கு தெரியப்படுத்த வேண்டிய சூழலில் அவர்கள் தமது வழக்கு சம்பந்தமாக ஒன்லைனில் இல்லை என்பது தெரிகிறது என்று கவலை தெரிவிக்கின்றனர். காலம் பிந்திய வழக்கு செத்ததிற்கு சமன்.

சட்டத்தரணிகள் வழக்காடி வெற்றி பெறுகிறார்களோ இல்லையோ சம்பந்தப்பட்ட தரப்பினரை மனம் நோகாமல் ஆவது நடத்தவேண்டும். இங்கே ஒருவர் தனக்கு சார்பாக வழக்காடுவதற்கு ஒரு சட்டத்தரணியை தெரிவுசெய்து அவரின் உழைப்புக்கு வேண்டிய பணத்தைவிட அதிகளவில் கொடுத்தும் வழக்கு முடியாமல் இருப்பது மட்டுமல்ல அவரை மரியாதை குறைவாக வழிநடத்தி மனநோகடித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. அதுவும் பிரபல சட்டத்தரணி குடும்பத்தில் வந்த ஒருவருக்கே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதென்றால் பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களை திரும்பிக்கூட பார்க்கமாட்டார்கள் போலும்.

விவகாரத்துக் கோரி ஒரு தனயன் ஒரு பெண் வழக்கறிஞரை அனுகினான் அத் தனயன். சந்தோஷ கரமாக வக்கீல் அம்மா மாண்பு மிகு நீதிபதி முன் வழக்கை ஆரம்பித்து வைத்தார். வழக்கு நடந்து கொண்டே இருந்தது. எதிர்க்கட்சியினர் சமூகமளிக்கவில்லை. ஒரு சார்பாக தீர்க்கப்பட வேண்டிய அவ் வழக்கு தள்ளுபடியாகியது. காரணம் முந்தி பிந்தி விவகாரத்து கோராத அத் தனயன் முழுமையாக நம்பியது அவ் அம்மாவையே. அனுபவம் அற்ற அவனுக்கு அவ் அம்மா எவ்விதத்திலும் ஆலோசனை கூறவுமில்லை அத் தனய்ன் வீட்டில் இருந்து பிரிந்த திகதியை தானாக கூறியதும் இல்லை. அவ் வழக்கறிஞர் அவனிடம் கேட்டு அவ் வழக்கில் குறித்ததும் இல்லை. அந்த ஒரு விடயமே மணநீக்க இரத்துக்கு காரணமாக இருந்தது. அவ் மனுநீக்க வழக்கு 2014 ஆம் ஆண்டில் இருந்து மேல் கோர்ட் உத்தரவின் கீழ் இன்றும் நிலுவையில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

அவ் அம்மா எந்தவொரு தவணையையும் தனது வாடிக்கையாளருக்கு நினைவூட்டியதும் இல்லை. அவ் விடயத்தில் எத்தனை வழக்கறிஞர்கள் யாழ். நகரத்தில் தமது வாடிக்கையாளர்களுக்கு நினைவூட்டியிருக்கிறீர்கள். அவ் அம்மா தனது குடும்ப தேவைக்காக இடம்பெயர்ந்த போது எந்தவொரு வழக்கு கோப்புக்களையும் கையளிக்காது ஓர் திறந்த அஞ்சல் அட்டையில் கீழ்வருமாறு எழுதி வேலை புரியும் விலாசத்துக்கு அனுப்பிவிட்டு சென்றுவிட்டார். (துங்கள் வழக்கு விடயமாக சந்திக்கவும்)

வேறுமொரு வழக்கறிஞர் உன் வழக்கு விடயமாக பேச வேண்டும் ஒரு நாள் சனிக்கிழமை மாலை 7 மணிக்கு வீட்டிற்கு வரும்படி கூறியிருந்தார். அத் தனயனும் சரியாக 7 மணிக்கு அவர் வீட்டிற்கு சென்றிருந்தான். அப்போது வாசலில் வழக்கறிஞரின் மனைவி நின்று கொண்டிருந்தார். அத் தனயன் "அம்மா வணக்கம்! ஐயா இருக்கிறாரா?" என்று கேட்டான். அம்மாவும் உள்ளே இருப்பதாகக் கூறி என்னை அமரும்படி கூறினார். அத் தனயனும் அமைதியாக அமர்ந்திருந்தான்.

சில வினாடிகளில் வெளியே வந்த வழக்கறிஞர் இவனைப் பார்த்ததும் கோபம் கொண்டு "நான் இப்போது தான் வந்துள்ளேன், நான் இன்னும் குளிக்கவில்லை, சாமி கும்பிடவில்லை, சாப்பிடவில்லை," என்று உரத்த தொனியில் அதிகாரப் போக்கில் பேசியிருந்தார்.

அத் தனயன் "ஐயா நீங்கள் தான் இன்று 7 மணிக்கு வரச்சொல்லி கூறியிருந்தீர்கள் அதனால் தான் நான் இங்கு வந்தேன். என்னை நீங்கள் இப்படி மரியாதையில்லாமல் பேசுகிறீர்கள். நானும் ஒரு வழக்கறிஞர் குடும்பத்தைச் சேர்ந்தவன். வாடிக்கையாளர்களை இப்படி தரக்குறைவாக மரியாதையில்லாமல் ஒரு போதும் நடத்தியது கிடையாது" என்று கூறிச்சென்றுவிட்டான்.

சம்பந்தப்பட்டவர்கள் பெயரில் அல்லது இலக்கத்தில் வழக்கறிஞர்கள் கோப்பு வைத்திருக்க வேண்டும். வழக்கினை பிற்போடவிடாது வாதாடும் திறமை இருக்க வேண்டும். உங்களிடம் வருபவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்பதை கேட்டு அவர்களுக்கு வழக்கு சம்பந்தமாக தெளிவுபடுத்த வேண்டும். நிரந்தர வழக்கறிஞர் சமூகமளிக்காத போது உதவி வழக்கறிஞர் சமூகமளித்து தவணை எடுக்கும் திகதியை நிரந்தர வழக்கறிஞர் தெரிந்து கொள்ளவேண்டும். வழக்கு நாள் அன்றே சான்றுகளை தேடுவது.

இப்படியாக சில வழக்கறிஞர்கள் விடும் பிழைகளால் வழக்காளிக்குத் தான் பாதிப்பு ஏற்படுகிறது. பண வீண்விரயத்தில் இருந்து வீணான நாள்கள் போவது வரை பாதிப்பு வழக்காளிக்கே என்பதை சட்டத்தரணிகள் உணரவேண்டும்.

சிறுகுற்றம் புரிந்தவர்கள் அல்லது குற்றம்சாட்டப்பட்டவர்கள் சட்டத்தரணிகளைத் தொடர்பு கொள்ளும் போது சட்டத்தரணிகள் கூறுவது நீ தப்பை ஒத்துக்கொள் சிறு கால தண்டணையுடன் முடித்துக் கொடுக்கிறேன் என்று வாக்கு கொடுப்பார்கள்.

அப்பாவி தானும் குற்றவாளியாக ஒத்துக்கொள்ள சிறைக்குள் போக காவல்துறை அப்பாவியின் வழக்கை சட்டமாஅதிபரிடம் கையளிக்க பல மாதங்கள் வருடங்கள் உருண்டோடும். அப்பாவியின் உறவினரிடம் அப்பாவியை வெளியே எடுத்துத் தருவதாக கூறி தமது உழைப்பு என மேலும் பணத்தை அறவிடுவார்கள்.


அவர்களின் உழைப்பு மேலோங்கும். அந்த உழைப்பை பல அப்பாவிகள் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

புத்திசாலித்தனத்துக்கு கிடைக்கும் பெறுமதி அதிகம் என்றும் வழக்கில் கோட்டை விடுகிறவர்களும் தாங்கள் புத்தியுள்ளவர்கள் என்று கூறி வழக்கை தொடர்வதாலும் பெறுமதி அதிகம் என்றும் சொல்பவர்களால் ஒரு போதுமே பாதிக்கப்படுபவர்கள் தொடர்பில் அவர்களின் பிரச்சினை தொடர்பில் விளக்கிக் கொள்ளப்போவதில்லை என்பது உண்மை.

படித்து என்னவாக வரவேண்டும் என்று கேட்டால் சட்டத்தரணியாக வந்து இந்த நாட்டில் சட்டத்தை நிலைநாட்டுவேன் என்று தான் சபதம் எடுத்து சட்டத்தரணியாக வருகிறார்கள். வந்ததும் தாம் செய்வது சரியா என்று கூட சிந்திக்க நேரமில்லாமல் உழைப்பில் ஓடிக்கொண்டிருக்கிறார்கள்.

எல்லோரையும் குறைகூறவில்லை. பொதுவான அறிவுப்பு. நீங்களும் கேட்கலாம் அவர்கள் செய்வது சரியா என்று. அவர்கள் செய்வது பிழையாக இருக்கலாம் ஆனால் அவர்களை வழிப்படுத்துவதில் சட்டத்தரணிகளின் கையில் இருக்கிறது என்பது உண்மை.

இதை உணர்ந்து கொண்டு நீங்கள் பிரச்சினைக்கு முகம் கொண்டுள்ளவர்களை திரும்பிப் பார்ப்பீர்கள் ஆனால் உங்களை கையெடுத்து கும்பிடுவார்கள் என்பது உண்மை. உங்கள் கடமையை உழைப்பாக நினைப்பார்கள் ஆயின் அந்த உழைப்பு உங்களை மட்டுமல்ல எல்லோரையும் வாழவைக்கும் என்பது உண்மை.



# பத்தும் பலதும்

## தலையைப் பாதுகாக்கும் ஹெல்மெட்டைப் பாதுகாப்பதே ஒரு தலைவலி

நல்லூரிலுள்ள கலியாண மண்டபம் ஒன்றில் அடிக்கடி ஹெல்மெட் களவு நடைபெற்றுக் கொண்டு வந்தது. அதை அந்த மண்டப நிர்வாகத்துக்குத் தெரியப்படுத்தியபோது நிர்வாகம் அது பற்றி அதிக கவனம் எடுத்து நாளடைவில் கள்ளனைப் பிடித்தனர். பார்த்தால் அவன் அதையே தனது வாழ்வாதாரமாகக் கொண்டு செயற்படுவது தெரியவந்தது. என்னைப் பொறுத்தவரை அவனைச் சொல்லிக் குற்றமில்லை. கிட்டத்தட்ட ஹெல்மெட்டும் ஒருவர் அணியும் ஆடை போன்றதுதான். பாவித்த ஹெல்மெட்டும் அழுக்கு நிறைந்ததாகக் காணப்படும். பாவித்ததை ஏன் மக்கள் வாங்குகிறார்கள் என்பதுதான் தெரியவில்லை. இப்படியான பொருட்களுக்குச் சந்தை மானம் உண்டென்று கண்டபின்தானே அவர்கள் அவற்றைத் திருடி விற்கிறார்கள்?

சில தினங்களுக்கு முன்னர் இதே போன்ற சம்பவங்கள் தொடர்ச்சியாக நடைபெற்று வந்தது. நடைபெற்ற இடம் ஒரு சிறப்பு அங்காடி வளாகம். வழக்கமாக அந்த அங்காடி ஒரு பாதுகாப்பான சூழலில் அமைந்திருப்பதனால் அங்கு வருகின்றவர்கள் ஆணோ. பெண்ணோ தாம் அணிந்து வரும் ஹெல்மெட்டுகளைத் தமது மோட்டார் சைக்கிளில் வைத்து விட்டுத்தான் செல்வார்கள். ஆனால் ஒரு வாரத்தில் பல ஹெல்மெட்டுகள் திடீர் திடீர் எனக் காணாமல் போகத் தொடங்கிவிட்டது. பல முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றன. பின் அங்காடி நிர்வாகம் அங்கிருந்த சீ.சீ.ரி.வீ. கமெராக்களை அந்த இடங்களை நோக்கித் திருப்பிவிட்டு அவற்றை கண்காணிக்கத் தொடங்கிவிட்டனர்.

அதனைத் திருடுபவர்கள் எனச் சந்தேக்கிக்கின்றவர்களும் அங்காடியில் பொருட்களை வாங்குபவர்கள் போலத்தான் வருகிறார்கள் என்றதை சீசீரிவி கமெராக்களின் பதிவுகள் வெளிப்படுத்தின. அப்படித் திருட வந்தவர்களில் ஒருவர் பொருட்கள் வாங்குபவர் போல உள்ளே செல்ல மற்றவர் நின்று வருபவர்களை அவதானித்துக் கொண்டே அவர்கள் உள் சென்ற பின்பு ஹெல்மெட்டைத் திருடி வெளியில் காத்திருக்கும் தமது நண்பர்கள் மூலம் அனுப்பிவிடுவதை அங்கிருந்த கமெராக்கள் துல்லியமாகப் படம்பிடித்திருந்தன. அங்காடி நிர்வாகம் அந்த வீடியோக்களை முகநூல்போன்ற சமூக வலைத்தளங்களில் பரவவிட்டதும் திருடர்களின் நண்பர்களும். உறவினர்களும் ஹெல்மெட்டுகளைத் தாமாகக் கொண்டு வந்து கொடுத்துவிட்டுச் சென்றுவிட்டனர்.

முகநூலைப் பார்த்து நேரத்தைப் போக்குகிறார்கள் எனக் குறைபட்டுக் கொள்ளுகிறோம். அதே சமயம் முக நூல் வழி இதுபோன்ற பொது நலச் சம்பவங்களும் நடைபெற்றுக் கொண்டுதான் வருகின்றன. ஆனால் இந்த முகநூல் வழியேதான் பல சமூகவிரோதச் செயல்கள் நடைபெறுவதையும் அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. பல பாடசாலைகளிலும். காரியாலயங்களிலும் இத்தகைய முகநூல் வழியேதான் பார்க்கக் கூடாத படங்களையும். காட்சிகளையும், விடயங்களையும் காட்டிப் பெண்களைக் கெடுக்கிறார்களாம். இது போன்றவர்கள் இப்படிப்பட்ட காட்சிகளைத் தமது மனைவிமாருக்கும், பிள்ளைகளுக்கும் காட்டுவார்களா? என்று ஆசிரியர் ஒருவரினால் பாதிக்கப்பட்ட மாணவியின் தந்தை கேட்கிறார். வடிவேலு சொல்வதைப் போல "ஐயோ ! எல்லாம் வேடிக்கையாக இருக்கிறது" என்றுதான் சொல்ல வேண்டும் போலிருக்கிறது.



# மரணங்களுக்கு ஓர் ஆப்பு...

இதை எழுதும்போது நம்மண்ணின் தெருக்களை நிறைக்கும் ஸ்கூட்டர்கள், உந்துருளிகள்தான் கண்முன்னே வந்து நிற்கின்றன.தினம்தினம் அநியாயச் சாவுகள் அரங்கேறுவதைத் தடுக்க, கடுமையான சட்டம் எதையாவது அரசு கொண்டுவரலாமே என்றே நினைக்கத் தோன்றுகின்றது. எவரெஸ்ட் மலையேற ஆசைப்பட்டு, வழியில் இறப்பவர்கள் தொகை அண்மைக் காலங்களில் அதிகரித்து வருவதால், நேபாள அரசு மலையேறுபவர்களுக்கான கெடுபிடிகளைக் கொஞ்சம் அதிகரித்திருக்கின்றது.

கடந்த நான்கு வருடங்களில் என்றும் இல்லாதவாறு மே மாதத்தில் 8850மீற்றர் உயரத் தில் 14 பேர் இறந்தோ அல்லது தொலைந்தோ போயிருக்கிறார்கள். நேபாளப் பக்கம் 9பேரையும், திபெத் பக்கமுள்ள மலைப்பிராந்தி யத்தில் இருவரையும் காணோம். எவர் வந்தாலும் 11,000 டொலர் கொடுத்தால் மலையேறுவதற்கான அனுமதிப் பத்திரம் வழங்கி வந்த அதிகாரிகளுக்கு இது பலத்த அடி! பணத் தட்டுப்பாட்டிலிருக்கும் அரசுக்கு இது பெரிய வருமானம். எனவே தடுக்கவில்லை. இனி இந்த வசதி கிடையாது.

குறைந்த பட்சம் 6500 மீற்றர் உயரமான மலையேறிய முன் அனுபவம் இருந்தால்தான், அனுமதிப் பத்திரம். நல்ல ஆரோக்கியமானவர்கள் என்ற மருத்துவ அத்தாட்சிப் பத்திரமும் சமர்ப்பித்தாக வேண்டும். உலகின்அதி உயரமான 14 மலைகளுள் எவரெஸ்ட் உட்பட எட்டு மலைகளுக்கு நேபாளம் சொந்தம் கொண்டாடுகின்றது இங்கே குறிப்பிடத்தக்க விடயம். போனஸாக மலைகள் பற்றி வாசித்துச் சுவைத்த கவி வரிகள் - மலைகளே பூமிப் பந்தின் கர்வக் கிரீடங்களே! உங்களை எப்படிப் புகழ்வது ? நெஞ்சு நிமிர்த்தி நிற்குமவீரத்துக்கா, அல்லது சில செடிகளுக்கு வேர் விட வழி விடும் ஈரத்துக்கா?





சிறகில்லாப் பறவை எது என்று யாராவது கேட்டால் தீக்கோழி எனப் பட்டெனப் பதில் வந்துவிடும். ஆனால் இது மட்டுமல்ல, எமு என்றொரு பறவையாலும் பறக்க முடியாது. இதுவும் அவுஸ்திரேலியாவில்தான் காணப்படுகின்றது. பப்புவா நியூகினியிலுள்ள மூன்றாவது பறவையான கஸோவரி (cassowaries) என்ற பறவையும் பறக்க முடியாது என்பது நம்மில் பலருக்குத் தெரியாத சங்கதி. தென் கிழக்கு ஆசிய நாடு களின் காடுகளுக்குரிய இந்தப் பறவை அவுஸ்திரேலியாவிலும் இருப்பதுடன், உலகிலேயே மிக ஆபத்தான பறவையும் இதுவே என்கிறார்கள். முதலைகளைப் பண்ணைகளில் வளர்ப்பதுபோல இதையும் அமெரிக்கர்கள் பண்ணைகளில் வளர்ப்பதுண்டு. இது முதலைகள், காட்டுப் பூனைகள் போல மிக ஆபத்தானவை என்று கூறுகிறார்கள். சமீபத்தில் அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் ஒரு பண்ணையாளர் இந்தப் பறவையால் படு காயமுற்று இறந்துள்ளார். இவற்றின் கால்நகம் 12 செ.மீற்றர் வரை நீளமானது என்பதோடு, குத்து வாள் போல மிக ஆபத்தானது. இது எழுந்து நிற்கும்போது 2 மீற்றர் உயரம்வரை இருக்கும்.தீக்கோழிக்கு அடுத்ததாக அதிக எடைகொண்ட பறவை இதுதான். இன்று அழிவின் விளிம்பில் இவை இருப்பது கவலைக்குரியது. பின்னிணைப்பாக ஒரு புதுக்கவிதை..

பரீட்சை மண்டபத்தில் என்னால் பறவை போன்று பறக்க முடியவில்லை<br>
என்ன அதிசயம்!<br>
எழுத்துக்களால் அலங்கரிக்கப்பட்டு<br>
எழுத்தாளனால் எய்யப்படும் வெண்தாளம்புகள்<br>
பறக்கின்றன சிறகில்லாமலே........




# ஒழிந்துவிடுமா ஒட்டகச்சிவிங்கிகள்...

ஆபிரிக்கக் கண்டத்தில் ஒருகாலத்தில் பெரும் அளவில் திரிந்த ஒட்டகச்சிவிங்கிகள் இன்று ஆங்காங்கே காணப்படுகின்றன.. உலகின் அதி உயரமான பாலூட்டிகளான அவற்றின் எண்ணிக்கை வேகமாகக் குறைந்து கொண்டுவருகின்றது. .ஆனால் அதற்கான போதிய விழிப்புணர்வு இல்லை.1985 முதல் 2015 வரை ஆபிரிக்கக் கண்டத்தில் உள்ள ஒட்டகச்சிவிங்கிகளின் எண்ணிக்கை 40 வீதம் குறைந்து100,000க்கும் குறைவான எண்ணிக்கையில் பதிவாயின. இயற்கைப் பாதுகாப்பிற்கான அனைத்துலகச் சங்கம் (IUCN) அந்தத் தகவலை வெளியிட்டது.



கென்யா, சோமாலியா, எத்தியோப்பியா ஆகிய ஆபிரிக்க நாடுகள், கடந்த மூன்று தசாப்த காலத்தில், 60 வீதமான மிருகங்களைத் தொலைத்துவிட்டு நிற்கின்றன. மத்திய ஆபிரிக்காவிலுள்ள இன்னொரு இனத்தின் 85 வீதம் அழிந்து விட்டது. ஆபிரிக்காவின் புல்வெளிகளில் அலைந்து திரியும் ஒட்டகச்சிவிங்கிகள் ஒரே இனத்தைச் சேர்ந்தவை அல்ல, அவை நான்கு இனங்களைச் சேர்ந்தவை என புதிய ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

யானை, சிங்கம், காண்டா மிருகம் ஆகியவற்றுக்குக் கொடுக்கப்படும் ஆதரவு ஒட்டகச்சிவிங்கிகளுக்கு இல்லை. விலங்கியல் தோட்டங்களிலும் வனப்பகுதிகளிலும் ஒட்டகச்சிவிங்கிகள் எளிதில் தென்படுகின்றன.அதனால் அதன் இனம் செழிப்பாக உள்ளது என்ற தவறான மனப்பான்மையை மக்கள் கொண்டிருக்கலாம் என்று சங்கம் கூறியது.

மற்றைய பகுதிகளைக் காட்டிலும் மத்திய, கிழக்குப் பகுதிகளில் ஒட்டகச்சிவிங்கிகளின் எண்ணிக்கை இன்னும் வேகமாகக் குறைந்து வருகிறது.வேட்டையாடுதல் , சுற்றுச்சூழல் அழிக்கப்படுதல், சண்டை சச்சரவு போன்றவை ஒட்டகச்சிவிங்கிகளின் அழிவிற்கு முக்கிய காரணங்களாகக் கூறப்படுகின்றன. ஆள் பாதி ஆடை பாதி என்று சொல்வதைப் போல, ஒட்டகச்சிவிங்கிகளை ஆள் பாதி கழுத்து பாதி என்று சொல்லலாம்.

# விந்தையான விவசாயிகள்

விவசாயம் என்பது தெரியாத ஒன்றல்ல. பலர் பலவிதமான விவசாயத்தை மேற்கொண்டு வருகிறார்கள். உங்களில் எவராவது "ஐஸ்கட்டி விவசாயம்" செய்திருக்கிறீர்களா? அல்லது அப்படிச் செய்பவர்களைத்தான் அறிந்திருக்கிறீர்களா?இந்த வருடம் ஜப்பான் விசாயிகளுக்கு அமோக"ஐஸ்கட்டி விளைச்சல்" என்கிறது செய்தி! உப்பளம் பற்றி அறிந்து கொண்ட நாம் , இந்த விளைச்சல் பற்றி புரிந்து கொள்வதில் அதிக சிரமம் இருக்காது என்று நம்புகிறேன்.

இயற்கையாக உற்பத்தி செய்யயப்படுவதுதான் இந்தப் பனிப்பாளங்கள். இதைப் பல நிறுவனங்கள் போட்டி போட்டுக் கொண்டு விலைக்கு வாங்குகின்றன. இந்தச் செதுக்கப்பட்ட இயற்கை ஐஸ் கட்டியை இவர்கள் "kakigori" என்று ஜப்பானிய மொழியில் அழைக்கிறார்கள். ஒரு தசாப்த காலத்திற்கு முன்பு, இப்படியான இயற்கை ஐஸ் கட்டிகளை மிகச் சிறிய விலைக்கே வாங்கியதால், இத் தொழிலில் என் தந்தையால் இலாபம் ஈட்ட முடியவில்லை என்கிறார் யமாமொட்டோ என்பவர்.

இவர் கடந்த 13 வருடங்களாக இந்த ஐஸ் உற்பத்தி விவசாயியாகவே இருந்து வருகிறார். இந்த ஐஸ் கட்டி கலந்து செய்யப்படும் இனிப்புணவின் சந்தை விலை இப்பொழுது பல மடங்கு அதிகரித்துள்ளது என்று மேலும் கூறுகிறார் யமாமொட்டோ. கோடை காலத்தியே சாத்தியப்படும் இந்த ஐஸ் விவசாயம், கோடை மழையைக் காணவே கூடாது என்கிறார்கள். வழக்கில் இருந்தொழிந்த பனிக்கடடி வணிகம் பற்றிய அடிக் குறிப்பை இங்கே தரலாம்.பனிக்கட்டி வணிகம் அல்லது உறைந்த நீர் வணிகம் என்பது 19ஆம் நூற்றாண்டில் அமெரிக்காவில் இருந்து இயற்கையாக உறைந்த பனிக்கட்டிகள் வெட்டி எடுக்கப்பட்டு உலகின் பல பகுதிகளுக்கும் அனுப்பப் பட்டு விற்பனை செய்யப்பட்டதைக் குறிக்கும்.

அமெரிக்காவின் பிரடெரிக் தீயூடர் என்பவரால் 1806இல் இவ்வணிகம் தொடங்கப்பட்டது. ஜனவரி மாதத்தில் அமெரிக்காவில் உள்ள ஏரிகள், குளங்கள் உறைந்து பனிக்கட்டி ஆகி விடும். இவற்றை வெட்டி எடுத்து கப்பலில் எடுத்துச் சென்று பல நாடுகளில் இவர் விற்பனை செய்தார். இந்தியாவுக்கும் இத்தகைய பனிக்கட்டிகள் அனுப்பப்பட்டு விற்பனை செய்யப்பட்டன. இந்தப் பனிக்கட்டிகளை சேமிப்பதற்காக கிடங்குகளும் கட்டப்பட்டன.இவ்வாறு அனுப்பப்பட்ட பனிக்கட்டிகள் விற்பனைக்கு வருகையில் ஏறத்தாழ பாதி உருகியிருக்கும் என்பது மனதை உருக்கும் ஒரு செய்தி!




## இங்கே இவர்கள் இப்படி

ஏ.ஜே.ஞானேந்திரன்


# காட்டூன் ஓவியத்தின் அறிமுகமும் கலை வெளிப்பாடுகளில் அதன் பெறுமானமும்

அத்தியாயம் - 3.1




14 ஆம் நூற்றாண்டில் வந்த காட்டூன்களில் மிகப்பிரகாசமான வர்ணங்கள், மிக நுணுக்கமான வேலைப்பாடுகளுடன் கூடிய ஒரு படம் காணப்படுகின்றது. இதில் எழுத்துக்களுடன் அதேமாதிரியான படங்களும் மீளுருவாக்கம் செய்ய முனைந்திருந்தன. இது சர்வதேச அளவில் நகைச்சுவைக்காகப் பயன்படுத்தப்படுகின்றது. இப் படத்தில் கோட்டையைத் தாக்க வெளிப்படும் மக்கள் விலங்குகளாக 14ஆம் நூற்றாண்டில் வெளிவந்த "Flemish book of house" எனும் நூலில் காணப்படுகின் றது.(Cartoon-2003:11)

மறுமலர்ச்சிக் காலத்தில் காட்டூன் என்ற சொல் அது இன்று பெற்றுள்ள அர்த்தத்தைக் கொண்டிருக்கவில்லை. மறுமலர்ச்சிக்கால ஓவிய வரைபடங்களில் ஓவியம் அல்லது சுவரோவியம் அல்லது திரையோவியம் போன்றவற்றை வரைவதற்கு முன் வரையப்படும் ஆயத்த வரைபுகளில் இறுதியானதாகவும், வரையப்படப்போகும் ஓவியத்தின் அதே அளவினதாகவும் இருந்ததையே காட்டூன் என அழைத்தனர். முழு அளவில் வரையப்பட்ட படங்களையும் காட்டூன் என விளம்பினர்.



பத்திரிகைகளின் காலம் தொடங்குமுன் "ஹோகார்த்" (Hogarth), "கோயா" (Goya), "டேமியர்" (Daumier), "ரோலண்சன்" (Rowandson) போன்ற புகழ்பெற்ற ஓவியக் கலைஞர்கள் ஒரே விடயத்தைப் பற்றிச் சித்திரத் தொடர்களை வரைந்தனர். இச் சித்திரத் தொடர்களில் வீரர்களின் சாகசச் செயல்கள் வரையப்பட்டன. இச் சித்திரத் தொடர்களே இன்றைய காட்டூன்களுக்கும் சித்திரத் தொடர்களுக்கும் முன்னோடிகளாக அமைந்தமையை நினைவுகூறலாம்.

15ஆம் நூற்றாண்டில் இருந்து இக் காட்டூன்கள் சுவர் சித்திர ஓவியங்களிலும், வண்ணக்கண்ணாடிக் கலைஞர்களாலும் பயன்படுத்தப்பட்டன. ஐரோப்பிய மறுமலர்ச்சி விளிப்பின் அங்கங்களில் ஒன்றாகிய காட்டூன் 17ஆம் நூற்றாண்டளவில் இத்தாலியில் கையாளப்பட்டது. பின்பு இது ஜேர்மன், பிரான்ஸ், நெதர்லாந்து ஆகிய நாடுகளில் வளர்ந்து 18ஆம் நூற்றாண்டளவில் பிரித்தானியாவை வந்தடைகின்றது. இன்று எல்லா நாடுகளிலும் இது முக்கிய துறையாகக் காணப்படுகின்றது.

18ஆம் நூற்றாண்டில் பிரிட்டனில் மிகச்சிறந்த முதல் காட்டூன் ஓவியராக வில்லியம் ஹோகார்த் இருந்தார். (Britanica-1768:795) 18ஆம் நூற்றாண்டில் காட்டூன்களைப் பத்திரிகைகளில் பயன்படுத்த ஆரம்பித்தனர். முதன்முதலாகப் பத்திரிகை உலகிற்குக் காட்டூனை அறிமுகம் செய்தவர் இங்கிலாந்தைச் சேர்ந்த ஆஸ்பெர்ட் லஸ்காண்டர் ஆவார். இவரது காட்டூன் Daily Express என்ற செய்திப் பத்திரிகையில் வெளிவந்தது. அரசியல் கருத்துரையாடல்களால் இது தீவிரமாகப் பயன்படுத்தப்பட்டது. 1880களில் ஒளிப்பட உருவங்கள் செதுக்கும் முறை குறைந்த செலவில் செய்தித் தாள்கள் தயாரிப்பதையும், விளக்கப்படங்கள் வெளிப்படுத்துவதையும் சாத்தியமாக்கியதால் காட்டூன்கள் பொதுமக்களைச் சென்றடைந்தன.

19ஆம் நூற்றாண்டில் தான் காட்டூன் என்ற சொல் அது இன்று பெற்றுள்ள அர்த்தத்தைப் பெற்றது எனலாம். காட்டூன் இன்றுள்ள நவீன வடிவத்தைப் பெற்றது நெதர்லாந்திலாகும். வளர்ச்சிப் போக்குகளின் அடிப்படையில் பார்த்தால் இன்றுள்ள காட்டூனின் ஆரம்ப வடிவத்தினைக் கரிக்கேச்சரிலும் காணமுடியும். 19ஆம் நூற்றாண் டில் இச்சொல் நகைச்சுவைச் சித்திரம் அல்லது பரிகாசச் சித்திரம் என்று பிரசித்தமான பொருள் பெற்றது. இன்று அரசியல் சார்ந்த கருத்து, ஆசிரியரின் கருத்து, சமூகம் சார்ந்த கருத்து, நகைச்சுவை ஆகியவற்றுக்குப் பயன்படுத்தப்படு கின்றன.

19ஆம் நூற் றாண்டில் பிரான் ஸில் "ஹோனோர்", "டேமியர்" என்போர் தமது கதாபாத்திரங்கள் பேசாத எண்ணங்களை வெளிக்காட்டுவதனை விளக்கவுரையில் அறிமுகப்படுத்தினர். பிரிட்டனின் "The punch", பாரிசின் "Charivari", அமெரிக்காவின் "The life", "Judge" ஆகியன காட்டூன் ஓவியங்களைக் கொண்ட மிகப்பிரபல்யமான பத்திரிகைகளாகும். 20ஆம் நூற்றாண்டிலும் "த நியூயார்க்கர்" காட்டூன்களுக்கான அமெரிக்கத் தரநிர்ணயத்தை அமைத்தது. அமெரிக்காவில் 1922இல் ஆசிரியர் கருத்தைத் தொனிக்கின்ற காட்டூன்களுக்கு (Editorial Cartoons) ஒரு "புலிட்சர்" பரிசு வழங்கப்பட்டது. 20ஆம் நூற்றாண்டுகளிலிருந்து காட்டூன்கள் நாளேடுகளில் ஆசிரியர் பகுதி, விளையாட்டுச் செய்திகள், திரைப்படம் தொடர்பான பகுதிகளில் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டன.

- தர்மதாஸ்.

# வைரமுத்து வாத்தியார் பேசுகிறார்



கேளுங்கள் இந்தக் கொடுமையை. எனது நண்பனைப் பார்க்கலாமென்று போனேன். போகும்போது சும்மா போகவில்லை. தற்போது விடுமுறை என்றபடியால் அவரது பேரப்பிள்ளைகள எல்லோரும் வீட்டில் இருப்பார்கள் தானே என்ற எண்ணத்தில் கையில் இரண்டு பொலித்தீன் பைகளில் சில பழங்களும், பிஸ்கட் பைக்கற்றுகளும் வாங்கிச் சென்றேன்.

நண்பர் வீட்டுக்குச் சென்று பார்த்தால் நண்பரின் மனைவி மட்டும் வீட்டு வாசல படியிலிருந்து வெற்றிலைபோட்டுக் கொண்டிருந்தார். விசாரித்தேன். அவர் பேரப்பிள்ளைகளில் ஒருவரை ரியூசனுக்குக் கொண்டு சென்று விடுவதற்காப் போயிருக்கிறார் என்று சொன்னார் நண்பரின் மனைவி. நண்பரின் மகள், மருமகன் ஆகியோர் பற்றியும் கேட்டேன். ஒவ்வொருவரும் ஒவ்வொரு பிள்ளைகளைக் கூட்டிக் கொண்டு சென்று ரியூசனுக்கு விட்டு வரப் போய்விட்டதாகச் சொன்னார்.

"என்ன இது ரியூசன் கொடுமையாக இருக்கிறதே" என எனது மனத்துக்குள் நொந்து கொண்டேன். அதுவும் பெண் பிள்ளையைக் கூட்டிக் கொண்டு சென்ற அவர் மருமகன் ரியூசன் முடியும்வரை காத்திருந்து அவளை அழைத்து வரவேண்டுமாம். அன்று ஞாயிற்றுக் கிழமை. வேலைக்குச் செல்லும் ஆணோ? பெண்ணோ? வீட்டில் நின்று ஓய்வெடுத்துவிட்டு அடுத்த நாள் வந்து தமது கடமைகளைச் சரிவரச் செய்ய வேண்டும் என்பதற்காகவும், அன்று வீட்டாரோடு இருந்து காலத்தைக் கழிக்க வேண்டும் என்பதற்காகவும்தானே விடுமுறை கொடுக்கிறார்கள். ஆனால் அதனைத் துஷ்பிரயோகம் செய்வது போல இவர்கள் இரண்டையும் செய்வதில்லை. மாறாக ரியூசன் வகுப்பு வாசல் கதவுகள் அருகிலும், அதற்கு முன்னால் இருந்த மரத்தின் கீழும் நின்றபடி தவம் செய்வதாகத் தெரிகிறது.

இந்த முறை சில குடும்பங்களையும் பிரித்திருக்கிறதென்ற துன்பகரமான செய்தியும் உண்டு. இப்படித் தங்கள் பிள்ளைகளை வகுப்புக்குக் கொண்டு விட்டுவிட்டு வெளியே காத்திருந்த ஒரு பெண்ணுக்கும், ஆணுக்கும் காதல் ஏற்பட்டு அது பின்னர் குடும்பப் பிரச்சினையாக உரு வெடுத்துவிட்டதாம். அதன் பின் என்ன நடந்த தெண்டு தெரியவில்லையாம். ஆனால் அவர்கள் அந்த ரியூசன் வகுப்பு வாசலுக்கு இப்போது வருவதில்லையாம். என்ன கொடுமை இது.

அது மட்டுமல்ல இந்தக் கலாசாரத்தை மாற்றக் கல்வித் திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்தக் கல்விமுறை எமக்கும், எமது வாழ்வாதாரத்துக்கும், பிள்ளைகளின் வளமான வளர்ச்சிக்கும் பொருத்தமில்லை என்று ஒரு இளைப்பாறிய கல்வி அதிகாரிதான் எனக்குச் சொன்னார். முறையற்றதொன்றை வைத்துக் கொண்டு திண்டாடப் போகிறோமா? எனவே இதற்கு என்ன செய்யவேண்டும் என அரச அதிகாரிகள் சிந்திப்பார்களா? சிந்திக்க வேண்டுமே!

# அந்த ஒரு நிமிடம்

எஸ். கணபதி

கோகிலாவின் கண் சிவந்திருந்தது."ஸ்கூட்டியில வரேக்கை வல்லைப் பாலத்திலை வண்டுதான் கண்ணுக்கை அடிச்சிட்டுது போலை கிடக்கு" கண்களை கசக்கியபடி மோட்டார் சைக்கிளை விட்டு இறங்கி வந்தாள் அவள்.

"எப்பன் முலைப்பால் விட்டால் ஆறிவிடும்" அம்மாதான் சொன்னாள்.

"இப்ப ஒருத்தரும் பிள்ளையளுக்குப் பால் குடுக்கிறேல்லையே. முலைப்பாலுக்கு ஆரிட்டைப் போறது" நக்கலாகச் சொன்னாள் கோகிலா.

"சரி செண்டு போச்சுது. வந்து சாப்பிடு" என்று வரவழைத்த அம்மாவைப் பின் தொடர்ந்தாள் கோகிலா.

"காலைக் கழுவிப்போட்டு வாறன்" முற்றத்தில் இருந்த தண்ணீர் பைப்பில் இருந்து சீறிப் பாய்ந்த தண்ணீர் அவள் கால்களை மட்டுமல்ல சேலையின் கீழ்க்கரைப் பகுதியையும் நனைத்துக் கொண்டது.

மீண்டும் அன்று டி.எஸ் ஒபிசில் நடந்த சம்பவம் அவள் நினைவில் நீண்டு கொண்டது. "நல்ல காலம். நான் மட்டுமில்லை எண்டால் அந்த மனுசியின்ரை காணியை ஏப்பம் விட்டிருப்பங்கள். பாவம் அந்த மனுசி. அவவுக்கு ஆரும் இல்லை. தனியன்." அன்று நண்பகல் நடந்த விசாரணையின்போது அந்தக் காணிக்கு உரிமையாளரான அந்த மூதாட்டி அவள் காலில் விழுந்து அழுததை அவள் இன்னும் மறந்துவிடவில்லை. தன் தாயே தன்னிடம் வந்து முறையிடுவதாக அவள் எண்ணிக் கொண்டாள்.

"தன்னுடைய காணியில் ஒரு பகுதியை பக்கத்துக் காணிக்காரன் பிடித்து வைத்திருப்பதாக அந்த மூதாட்டி முறையிட்டதைத் தொடர்ந்து அந்த பிரச்சினையை விசாரித்து, அதற்குரிய தீர்வாக இரண்டு பக்கக் காணிகளையும் அரசாங்க சேவையர் ஒருவரை நியமித்து, அவரைக் கொண்டு அளந்து, அதற்குரிய தொரு நியாயமான தீர்ப்பை வழங்கியவள் கோகிலா.

"ஏதோ ஒரு மாதிரிப் பிரச்சினையைத் தீர்த்துப்போட்டியள். வேறை ஆரேன்எண்டால் உந்தளவு மினைக் கெடவும் மாட்டினம். அது இது எண்டு சொல்லி இழுத்திருப்பினம். பாத்தியளே அந்த அம்மா உங்கடை காலிலை விழுந்ததை. பதவி உயர்வு மட்டுமில்லை இது போலை விசியங்கள்தான் நாங்கள் எங்கடை கடமையைச் சரியாச் செய்திருக்கிறம் எண்டதுக்கு அடையாளம்" டி.எஸ் அவளைப் பாராட்டியபோது அவள் மகிழ்ந்து போனாள்.

"ஆனால் அந்த மூதாட்டியின்ரை காணியைப் பிடிச்சு வைச்சவன் தான் பிலத்துப், பிலத்துக் கத்தினான். கள்ளக் கிழவி சாகிற வயசிலையும் வாய் திறந்து பொய் சொல்லுது. அதுக்கு உவவும் உடந்தை. கை நீட்டி ஏதாச்சும் வாங்கிப்போட்டாவோ தெரியாது?" என்று கோகிலாவைப் பார்த்துக் கத்திக் கொண்டிருந்தான். பல பேருக்கு முன்னால் சேவையர் தான் அளந்து கீறிய படத்தைக் கொடுத்துக் காணிப் பிடிப்பை உறுதி செய்தது அவனுக்கு அவமானமாக இருந்தது. அதை மூடி மறைக்கத்தான் அவன் அளவு கடந்து கத்துகிறான் என்றது எல்லோருக்கும் தெரிந்தது.

தன்னை நிரபராதி என்று நிரூபிக்க அவன் எதற்கும் தயாராகியிருந்தான். கோகிலாவின் ஒபிஸ் பியோன் அந்தச் சம்பவம் நடப்பதற்கு இரு தினங்களுக்கு முன்னர் ஒரு பலாப்பழத்தைக் கொண்டு வந்து கொடுத்தான்.

"இது எங்காலை? ஆர் தந்தது?" தனது புருவத்தை உயர்த்தி மூக்குக் கண்ணாடிக்கு மேலால் கோகிலா அவனைப் பார்த்தாள்.

"அந்தக் காணிக்கார ஆள் உங்களிட்டைக் குடுக்கச் சொல்லித் தந்திட்டுப் போறார்" பியோன் சொன்னான்.

"உடனை எடுத்துக் கொண்டு போய்க் குடுத்திட்டு வாரும்" கோகிலா கத்தினாள். பியோன் வெலவெலத்துப் போனான்.

அதற்குப் பின் அவன் நேரில் வந்தான். கோகிலா தனக்கு முன்னால் காணப்பட்ட கதிரையில் உட்காரச் சொல்லிச் சைகை காட்டினாள். அவன் தனது குடும்ப நிலைமையைச் சொன்னான். தனக்கு நான்கு பெண் குழந்தைகள் என்றான். மனைவிக்கு நோய் என்றான். அவளைச் சமாதானம் செய்ய அவன் ஏதோ, ஏதோ எல்லாம் சொன்னான்.

"ஐயா! இப்ப எங்கடை கையிலை ஒண்டும் இல்லை. சேவையரிட்டை அளக்கச் சொல்லியாச்சு. இனி அவர் தாற படத்தை வைச்சுத்தான் முடிவெடுப்பம். விசாரணை எண்டு வந்தாப்பிறகு ஒண்டும் எங்களாலை செய்யேலாது. நீங்கள் சொல்லுறபடி கேட்டு ஏதாவது மாற்றத்தைச் செய்தால் உங்களிட்டை ஏதாவது வாங்கிப் போட்டம் எண்டு வாய் கூசாமல் சொல்ல ஆயிரம்பேர் இருக்கினம். அவ சொல்லுற மாதிரி நீர் அவவின்ரை காணியைப் பிடிச்சு வைச்சதை உண்மை எண்டு ஒப்புக் கொண்டால் அவவிட்டைப் போய்க் கதைச்சுப் பேசிக் கொண்டு வாருங்கோ. அதற்குரிய ஆகக் குறைந்த பெறுமதியைக் குடுத்தால் தன்னும் நான் டி.எஸ் ஸோடை கதைச்சு சமாதானமா ஒரு தீர்ப்பைத் தரலாம். அதைவிட்டிட்டு என்னாலை வேறை ஒண்டும் செய்யேலாது." என்று எழுந்த அவளை அவன் இடைமறித்தான்.

"நீங்கள் என்னை ஆரேண்டு தெரியாமல் கதைக்கிறியள்." இதுவரை கெஞ்சிய அவன் இப்ப மிஞ்சத் தொடங்கினான்.

"இனியும் இருந்து கதைக்காதையும். நான் எல்லாம் உதுக்குப் பயந்த ஆளில்லை. கெதியா..." என்று கோகிலாவும் தன்னுடைய குரலை எழுப்பியபடி, "எழும்பிப்போகு மாறு" கையால் சைகை காட்டினாள் கோகிலா.

முறைத்தபடி அவன் எழுந்து போய்விட்டான். "உமக்கு என்ன? உந்த விசியத்திலை ஏன் இவ்வளவு இறுக்கமா இருக்கிறீர்? அவன் மோசமானவன் எண்டு தெரியுந் தானே?" இதனை அவதானித்துக் கொண்டிருந்த அவள் காரியாலயத் தோழி அவளைப் பார்த்துச் சொன்னாள்.

"/ஹம்.. அவனைவிட என்ரை அண்ணன் சண்டியன்




எண்டு உமக்குத் தெரியுந்தானே? அவனோ நானோ எண்டு பாப்பம். அவனுக்குப் பயந்து அந்த ஆச்சீன்ரை காணியை அவனைப் பிடிக்க விடுகிறதே?" அவள் எழுந்து போய்விட்டாள்.

**நேரம் மாலை 5 மணி 30 நிமி. 32 செக்.**

"என்ன யோசிக்கிறாய், சாப்பாட்டுக்கை கையை வைச்சுக்கொண்டு..?" அம்மா தட்டினாள்.

"ஒண்டும் இல்லை." அன்று நடந்ததை அம்மாவுக்கு சொன்னாள் கோகிலா. அம்மாவும் அவள் செய்ததை சரியென ஒப்புக் கொண்டாள்.

அதற்கிடையில் அவள் கணவன் அவளைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டான். அவளை எதிர்பார்த்து இருப்பதாகச் சொன்னான்.



**நேரம் மாலை 5 மணி 36 நிமி. 22 செக்.**

அவள் ஸ்கூட்டியை அந்தக் கடைக்கு முன்னால் நிறுத்திவிட்டு அவள் கணவன் கேட்டுக் கொண்டபடி அந்தப் பிறந்தநாள் கொண்டாட்டத்துக்குக் கொண்டு சென்று கொடுக்க ஏதாவது வாங்க வேண்டும்.அவள் பல முறை யோசித்தபின்பு சில கொப்பிகளையும், போனாக்களையும் அவற்றுடன் ஒரு தோள் பை ஒன்றினையும் வாங்கிக் கொண்டாள்.

**நேரம் மாலை 5 மணி 44 நிமி. 32 செக்.**

ஸ்கூட்டி அந்த பெருந்தெருவினூடாகப் பறந்து கொண்டிருந்தது. மழை இருட்டு ஆனதால் பெரும்பாலும் எல்லோருடைய வாகனங்களிலும் முன் விளக்குகள் ஒளிபெருக்கிக் கொண்டிருந்தன.

**நேரம் மாலை 5 மணி 53நிமி. 11 செக்.**

அவள் ஸ்கூட்டி பெருந்தெருவை விட்டு கை ஒழுங்கை ஒன்றினூடாகத் திரும்பியது. சிறிது நேரம் பயணித்ததும் அவளுக்கு முன்னால் மோட்டார் சைக்கிள் ஒன்று பேரிரைச்சலோடு அவளைத் தாண்டி முன்சென்றது. சிறிது நேரம் சென்று அந்த மோட்டார் சைக்கிள் மீண்டும் திரும்பி வந்தது. அவளருகே வந்து அதனை மெதுவாகச் செலுத்தியவாறு அதிலிருந்தவன் அவளை கூர்ந்து பார்த்துவிட்டுச் சென்றுவிட்டான்.

**நேரம் மாலை 5 மணி 56 நிமி. 24 செக்.**

அவளைப் பயம் தொற்றிக் கொள்ள அவளை அறியாமலே அவள் கை ஸ்கூட்டியின் வேகத்தை அதிகரித்தது. சற்றுத் தொலைவில், அவளுக்கு முன்னால் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் வலு வேகமாக வந்தன. அவள் கைகள் இன்னும் ஸ்கூட்டியின் வேகத்தை அதிகரித்தது மட்டும் அவளுக்குத் தெரியும்.

**நேரம் மாலை 6 மணி 33 நிமி. 32 செக்.**

கோப்பாய் வைத்தியசாலையில் அவள் கைகளில் ஏற்பட்ட காயத்துக்குக் கட்டுப்போட்டிருந்தனர். அங்கே நான்கு இளைஞர்கள் மோட்டார் சைக்கிள் திறப்புகள், ஹெல்மெட்டுகள் சகிதம் நின்று கொண்டிருந்தனர்.

**நேரம் மாலை 5 மணி 34 நிமி. 12 செக்.**

"ஏன் எண்டு தெரியாது. அம்மா தோட்டக்காணிக்கை கொண்டு போய் ஸ்கூட்டியை விட்டிட்டா. நல்ல காலம் அந்த நேரம் நாங்கள் வந்தம். தோட்டத்துக்கை பறிச்ச எருவுக்கு மேலை ஸ்கூட்டி போய் நிண்டதாலை ஆளுக்கொண்டும் அவ்வளவா அடிபடேல்லை. ஒரு சின்னக் காயந்தான்." அவர்களுள் ஒருவன் சொன்னான்.

கோகிலாவின் கணவன் அவர்களுக்கு நன்றி சொல்லிக் கொண்டிருந்தான்.

# ஆதாரமற்ற வைத்தியசாலை




**மஸ்கெலியா நிருபர் சு.தி.பெருமாள்**

மஸ்கெலியா அரசினர் வைத்தியசாலை 1968 ஆம் ஆண்டு கட்டப்பட்டதாகும். இந்திய வம்சாவளி மக்கள் செறிந்து வாழும் மஸ்கெலியா, சாமிமலைப் பகுதியைச் சார்ந்த சுமார் 165 தோட்டப் பிரிவு மக்களும், கிராம மக்களும் இந்த வைத்தியசாலைக்கே சிகிச்சைகளுக்காகச் செல்ல வேண்டியுள்ளது. மஸ்கெலியா பழைய நகரில் ஆங்கிலேயரால் கட்டப்பட்டு இயங்கிவந்த நிலையில் 60 இல் நீர்மின் உற்பத்தியை மேற்கொள்ளும் பொருட்டு அன்றைய ஐ.தே.க. அரசு, மவுசாகலையில் நீர்தேக்கம் ஒன்றை அமைக்க நடவடிக்கை மேற்கொண்டது.

இத்திட்டம் 1960 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 1964 ஆம் ஆண்டில் நிர்மாணப்பணிகள் பூர்த்தியடைந்தன அதன் பின்னர் மஸ்கெலியா புதிய நகரில் அஞ்சலகம், காவல் நிலையம், பஸ் தரிப்பிடம், மின்சார சபை காரியாலயம், நீர் வடிகால் திணைக்களம், பாடசாலைகள், புனித ஸ்தலங்கள், சந்தைப்படுத்தும் திணைக்களத்திற்கான கட்டிடத் தொகுதிகளுக்கென 160 பேர்ச் காணியில் எல்லாமே புதிதாக உருவாக்கப்பட்டன.

அப்போதைய ஐக்கிய தேசிய கட்சியின் ஆட்சி மஸ்கெலிய நாடாலுமன்ற உறுப்பினராக இருந்த எட்மன் விஜயசூரியவின் வேண்டுகோளுக்கிணங்க மஸ்கெலியாவில் வாழும் இந்திய வம்சாவளிக்கென ஆதார வைத்தியசாலையும, அதில் இலவச சிகிச்சைக்காக 165 படுக்கைகளையும், கட்டணம் செலுத்திச் சிகிச்சை பெறவெனத் தனியான 12 படுக்கை வசதிகளையம் கொண்ட 6 அறைகளும் இருந்தன.

அத்துடன் சத்திர சிகிச்சை கூடம், பல் வைத்தியர் கூடம், மருந்தகம், வெளிநோயாளர் பிரிவு, 24 மணித்தியால சேவைக்கென வைத்தியப் பிரிவு, மாவட்ட வைத்திய அதிகாரி காரியாலயம், வைத்தியசாலை காரியாலயம், தேநீர்சாலை, அம்பியூலன்ஸ் வண்டி வாகனத் தரிப்பிடம், சவச்சாலை, ஆய்வுகூடம், வைத்தியர்கள் தங்கும் சொகுசு விடுதிகள் உட்பட தாதிமார் ஊழியர்கள் தங்குவதற்கென 40 விடுதிகளும் அமைத்துக் கொடுக்கப்பட்டது.

1970 இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் ஶ்ரீலங்கா சுதந்திர கட்சி அரசு பீடம் ஏறியது. மஸ்கெலியா தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராகக் காமினி ஆரியதிலக மற்றும் அப்போதைய சுகாதார அமைச்சர் ஆரியதாச (அப்புத்தளை தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர்) ஆகியோரினால் இவ்வைத்தியசாலை 1972 ஆம் ஆண்டு வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

இக்காலப் பகுதியில் மாவட்ட வைத்திய அதிகாரி உட்பட இரண்டு பதிவு செய்யப்பட்ட வைத்தியர்களும், பல் வைத்தியர், ஆய்வுகூட வைத்தியர் உட்பட 21 தாதிகள் மற்றும் 40 சிற்றூழியர்களும் சேவையில் ஈடுபட்டு வந்தனர். ஏவ்வித குறைபாடுகளும் இல்லாமல் பல வருடங்கள் தங்குதடையின்றி சேவை நடைபெற்ற போதிலும், கடந்த சில வருடங்களாக வைத்தியர், தாதிகள், சிற்றூழியர்கள், மருந்தகர், ஆய்வுகூட வைத்தியர், பல் வைத்தியர் பற்றாக்குறை காணப்படுகிறது

குறிப்பாகப் பல் வைத்தியர், ஆய்வுகூட வைத்தியர் கடந்த சில ஆண்டு காலமாகச் சேவையில் இல்லை. ஆய்வுகூட வைத்தியரைச் சந்திக்க வேண்டுமானால், நுவரெலியா நாவலப்பிட்டிய ஆகிய ஆதார வைத்தியசாலைகளுக்கே செல்ல வேண்டிய துர்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். எனவே மிக விரைவில் நிரந்தரமாக ஓர் ஆய்வு கூட வைத்தியரை நியமிக்க வழி செய்ய வேண்டும்.

அதே போல் பல் வைத்தியர் வாரத்தில் 2 நாட்கள் மட்டுமே வருவதால் மக்கள் பெரும் இன்னலுக்குள்ளாகின்றனர். நிரந்தரமாக ஒருவர் நியமிக்கப்பட வேண்டும். தற்போதுள்ள தாதிமார் பற்றாக்குறைக்காக 21 பேரை நியமிக்க வேண்டும். மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் ஆளணிப் பற்றாக்குறையானது பாரியளவில் நிலவி வருகின்றது. இவ்வைத்தியசாலைக்குப் பெருந்தோட்டத் தொழிலாளர்களும், சாமிமலை, மஸ்கெலியா நல்லத்தண்ணி, குடாமஸ்கெலியா மற்றும் கென்யோன் ஆகிய நகரங்களிலும், கிராமங்களிலும் இருந்து மக்கள் பெருமளவில் சிகிச்சைக்காக வருகின்றனர்

மாவட்ட வைத்திய அதிகாரி ஒருவரும் வைத்திய அதிகாரி இருவரும் தாதிகள் 4 பேரும் சிற்றூழியர் 16 பேர் மட்டுமே உள்ள நிலையில் மாவட்ட வைத்திய அதிகாரி 4 வைத்திய அதிகாரிகள் பதிவு செய்யப்பட்ட வைத்தியர் 4 பேர் உட்பட மருந்தகர் தாதியர் 24 பேர் சிற்றூழியர் 46 பேர் அம்புலன்ஸ் வண்டி சாரதி இருவர் உட்பட 2 அம்புலன்ஸ் வண்டிகளும் தேவைப்படுகிறது.

கடந்த சில வருடங்களுக்கு முன் அம்பியூலன்ஸ் வண்டிச் சாரதி ஓய்வுபெற்றுச் சென்றுள்ளதால், அதனைச் செலுத்த சாரதியொருவர் இல்லாத நிலையில் ஒரு அவசர தேவைக்கு வெளியில் உள்ள அம்பியூலன்ஸ் வண்டியை எடுக்க வேண்டியுள்ளது. எனவே சுகாதார அமைச்சினால் வைத்தியசாலையில் நிலவும் வெற்றிடங்களுக்கு பணியாளர்களை உடன் நியமிக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

சுமார் 10 ஏக்கர் காணியில் அமைக்கப்பட்ட இவ்வைத்தியசாலையைச் சுற்றிப் புற்கள் காடுகளாகிவிட்டதனால் காட்டு மிருகங்களின் தொல்லைகள் அதிகரித்துள்ளன. இதனால் மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர்.



இக்காணியைச் சூழவுள்ள பற்றைக்காடுகளை அகற்றி அதில் வைத்தியர்களுக்கான விடுதிகளை அமைக்கலாம். இவ்வைத்திய சாலையை அப்போது சுகாதார அமைச்சராக இருந்த நிமால் சிறிபாலடி சில்வா ஒஸ்ரியா நாட்டின் உதவியுடன் ஆதார வைத்தியசாலையாக தரமுயர்த்தப்படுமெனத் தெரிவித்திருந்தார்.

ஆனால் இவ்வைத்தியசாலையை மாகாண சுகாதார அமைச்சரோ, மத்திய அரசின் அமைச்சரோ இன்றுவரை நேரில் வந்து பார்வையிட்டு நிலவும் குறைபாடுகளை தெரிந்துக்கொள்ளாமல் இருப்பது கவலைக்குரிய விடயமாகும். மலையக பிரதேசத்தில் மஸ்கெலியா வைத்தியசாலை ஆதார வைத்தியசாலையாகத் தரமுயர்தப்பட்டால் சுமார் 80 ஆயிரம் மக்கள் நன்மை அடைவர்.

நாவலப்பிட்டி ஆதார வைத்தியசாலையானது மஸ்கெலியாவில் இருந்து 50 கி.மீ தொலைவிலும் அதற்கப்பால் 12 கி.மீ தூரத்தில் கம்பளை ஆதார வைத்தியசாலையும், சுமார் 12 மீற்றர் தூரம் சென்றால் பேராதனை போதனா வைத்தியசாலையும், 3 கி.மீ தூரத்தில் கண்டி போதனா வைத்தியசாலையும் அமைந்துள்ளது.

இன்றைய நிலையில் ஆய்வுக்கூடம் இல்லை. மேலும் கடந்த காலங்களில் ஒவ்வொரு தோட்டத்திலும் வைத்தியசாலையும், மகப்பேற்று பிரிவும் இருந்தது. அங்குதான் குழந்தைகளைப் பிரசவித்தனர். ஆனால் கடந்த சில வருடங்களாக வைத்திய அதிகாரிகள் காப்பிணித் தாய்மாருக்கான பரிசோதனைகளை மேற்கொண்டு வந்தனர். தற்போது இவ்வைத்தியசாலையில் மகப்பேற்று பிரிவுகள் மூடப்பட்டுள்ளன. அரச வைத்தியசாலையில் மட்டுமே குழந்தைகளைப் பிரசவிக்கலாம் என்ற நடைமுறையும் கொண்டு வரப்பட்டுள்ளது.

டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலை ஆரம்பித்த பின் கர்பிணித் தாய்மார் பரிசோதனை மேற்கொள்ளும் V.O.G விசேட வைத்தியர் கர்பிணி தாய்மார் அனைவரையும் கிளங்கன் வைத்தியசாலையில் அனுமதிக்குமாறு பணித்துள்ளார். காலை 7 மணி முதல் 12 மணி வரையில் வைத்தியர் வைத்தியசாலையில் இருக்கும் வேளையில் மட்டும் கர்பிணித் தாய்மார் பரிசோதிக்கப்படுகின்றனர். குறித்த வைத்தியர் பிரத்தியேகமாக வைத்திய பரிசோதனை செய்து வருவதால் ஏனைய நேரங்களில் வரும் நோயாளர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

மக்களின் வசதிக்கேற்ப கடந்த காலங்களைப் போல் இப்பகுதி மக்கள் தங்களது மகப்பேற்றை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ள மத்திய மாகாண சுகாதார அமைச்சு முன்வர வேண்டும் V.O.G கிழமையில் ஒரு தடவை மஸ்கெலியா வைத்தியசாலையில் வைத்து கர்பிணி தாய்மாரை பரிசோதித்துவிட்டு பணம் அறவிடுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வைத்தியசாலைக்கு மேற்குறிப்பிட்ட உத்தியோகத்தர்களை நியமிப்பதுடன் மாதாந்தம் குழந்தை வைத்திய நிபுணர் கண் வைத்திய நிபுணர்களை வாரத்தில் ஒரு நாள் இவ்வைத்திசாலைக்கு வரவழைத்து இப்பகுதியில் உள்ள நோயாளிகளைப் பரிசோதித்து அவர்களுக்கு எவ்வித அறவீடும் இல்லாமல் சகல நோய்களுக்கும் மருந்துப் பொருட்களை வழங்கி அவர்களை காப்பாற்ற வேண்டியது சுகாதார அமைச்சின் கடமையாகும்.

அண்மையில் கர்பிணித்தாயொருவர் மகபேற்றுக்காக மஸ்கெலிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது, அதிகளவு இரத்தப்பெருக்கு ஏற்பட்டதால் அவர் டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு மகப்பேற்று வைத்தியர் இல்லாத நிலையில் குழந்தை பிரசவிக்கும் போது அத்தாய் மரணித்து பிழைத்துள்ளார். இனியும் முதல் பிரசவம் என்றால் என்ன கடந்த காலங்களை போல சகல வசதிகளை கொண்ட மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையிலேயே இடம்பெற வேண்டும் எனவும், அதற்கான வைத்தியர்களை நியமிக்க வேண்டியது காலத்தின் கட்டாய தேவையாகும்.

நுவரெலியா மாவட்டத்தின் அமைச்சர்கள் பாராளுமன்ற உறுப்பினர் என பலர் இருந்தும் இவ்வைத்தியசாலையின் குறைபாடுகளை நேரில் சென்று பார்வையிட்டு அவற்றைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க முன்வரவில்லை. வைத்தியசாலைக் குறைபாடுகளைத் தீர்க்க வேண்டியது நுவரெலியாவில் உள்ள சுகாதார மற்றும் உயர் அதிகாரிகளினதும், மத்திய மாகாண சுகாதார அமைச்சினதும் கடமையுமாகும்.

கடந்த காலங்களில் இருந்து சத்திர சிகிச்சை கூடம் தற்போது உடைத்தெறியப்பட்டுள்ளது. அதற்கான காரணம் என்ன என்று புரியவில்லை. அபிவிருத்தியைக் காண வேண்டிய காலக்கட்டத்தில் இவ்வாறு அகற்றுவது நியாயமற்ற செயல் எனவும் மீண்டும் சத்திர சிகிச்சை நிலையத்தைக் கட்ட வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.







# அங்கதன் பதில்கள்

■ **சம்பந்தனின் இந்திய விஜயமும், மோடியுடனான சந்திப்பும் புதுப்பாதை ஒன்றைத் திறக்குமா?**

**இ.வேல்முருகன், பன்னாலை.**

● தற்போது தமிழர்கள் தப்பிப் பிழைக்கக் கூடியதாக இருக்கிற 'வேலிப்பொட்டு' பாதையையும் அடைக்காமல் இருந்தால் சரி!

■ **பாடசாலைக் கல்வியல்லாது வாழ்க்கையில் உயர்ந்தவர்கள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

**த.ஞானமலர், ஒட்டுமடம்.**

● வாழ்க்கை பட்டறிவுப் பாடத்தை அனுபவக் கல்வி மூலம் கற்றுத்தேறிய வர்கள்.

■ **பண்பாடு தெரியாதவன் எவ்வாறு நடந்து கொள்வான்?**

**அன்புச்செல்வன், பண்ணாகம்.**

● யார் எப்பாடுபட்டாலும் அசட்டை செய்து விட்டு தன்பாட்டிலேயே நடந்து கொள்வான்.

■ **உங்கள் வாசிப்பு அனுபவம் எப்படி? அது உங்களை உயர்த்தியதா?**

**சி.பரந்தாமன், வட்டுக்கோட்டை.**

● வாசிப்பு அனுபவமே உலகம் பற்றி எல்லா வகையிலும் என்னை யோசிக்கவைத்தது.

■ **வாக்காளர்களின் வாக்குகளைக் கேட்கும் அரசியல் வாதிகள் தேர்தலின் பின் அவர்களை மறந்துவிடுகிறார்களே ஏன்?**

**த.தம்பையா, செம்பியன்பற்று**

● அதற்கு அரசியல் வாதிகளுக்கு இயல்பாக இருக்கும் வாக்கு மாறாட்டமே காரணம்.

■ **நீங்கள் பிட்டு விரும்பியா? அல்லது இடியப்பத்தில் காதல் உள்ளவரா?**

**க.முருகேசன், மல்லாகம்.**

● இரண்டுமல்ல. பசியாற, வயிறாற எதுவானாலும் உண்டு மகிழ்பவர்.

■ **வருமானத்திற்கேற்ப செலவு செய்யாதவன் பற்றி?**

**த.மதுசூதனன், கொடிகாமம்.**

● கடைசியில் எல்லாவற்றையும் அடமானம் வைத்து, தன்மானத்தை இழந்து அவமானப்படுவான்

■ **படிப்பிக்கத் தெரியாத ஆசிரியர் எப்படிப்பட்டவர்?**

**சி.சிலோசனா, இணுவில்.**

● படிக்க விரும்பாத பிள்ளைகளுக்கு குருவாக இருக்கும் தகுதி பெற்றவர்.

■ **வடபகுதியில் ஆங்கிலம் கற்பது முக்கியமா?**

**பிரான்சிஸ் சிமியோன், நாவாந்துறை.**

● ஊரோடு உறவாட தமிழும், உலகோடு உறவாட ஆங்கிலமும் முக்கியம்.

■ **ஆயிரக்கணக்கில் செலவு செய்து தமது பிள்ளைகளை படிக்கவைக்கும் பெற்றோர்களையும், அதைப் பயன்படுத்தி முன்னேறத்தெரியாத பிள்ளைகளையும் என்ன சொல்லலாம்?**

**க.சிவபாக்கியம், சுன்னாகம்.**

● அக்கறை உள்ள பெற்றோருக்கு ஆர்வம் இல்லாத பிள்ளைகள் இருப்பது அவலமான விடயமே.

■ **வாழ்க்கை வாழ்வதற்கே என்கின்றனர் பலர் ஆனால் உயிர் வாழ சாப்பிடவே கணக்குப் பார்க்கும் கருமிகள் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?**

**இரா. சிவபாலன், புன்னாலைக்கட்டுவன்.**

● முன்னவர்கள் கண்டபடி கணக்கின்றி சாப்பிட்டால் கனத்த வயிறோடும், கனத்த நோயோடும் தான் வாழ வேண்டும். சாப்பாட்டு விஷயத்தில் கருமியாக இருப்பதே ஆரோக்கியமான வாழ்விற்கு வழி

■ **தற்போதைய இளைஞர்கள் முடியலங்காரம் தோட்டத்து வெங்காயப் பாத்தி போலல்லவா இருக்கிறது?**

**மு. தம்பிமுத்து, இளவாலை.**

● முடியலங்காரம் செய்யும் இளைஞர்கள்மீது ஏன் இவ்வளவு கோபம்? நீங்கள் முடி துறந்த முதியவரா?

■ **யாழில் புதுப் புதுக் கோயில்கள் வரவு பற்றி சுருங்கச் சொன்னால்..?**

**வே.கனகமனோகரன், வேணாவில்.**

● மனித நம்பிக்கை வளருகிறதோ இல்லையோ? மத நம்பிக்கை வளருகிறது. அவ்வளவுதான்!

■ **மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற வரிசையில் ஏன்? தெய்வத்தையும், குருவையும் கடைசியாகச் சொல்லிவிட்டனர்?**

**சே. மனோரஞ்சிதம், இணுவில்.**

● மாதாவும், பிதாவும் உயிரெழுத்தை எழுதுபவர்கள். குருவும், தெய்வமும் தலையெழுத்தையல்லவா எழுதுபவர்கள். அதுதான்!

■ **கோயில் இல்லா ஊரில் குடி இருக்க வேண்டாம் என்றனர் முன்னோர். 4–5 ஒலி பெருக்கிகளுடன் இருக்கும் கோயில் உள்ள ஊரில்....?**

**வி.கண்ணன், அரசடி, நல்லூர்.**

● அது ஒலிபெருக்கிகள் கண்டுபிடிக்கப்படாத காலத்திற்கு முன்னர் சொன்ன முது மொழி அது

■ **ஆறில்லா ஊருக்கு அழகு பாழ் என்றுதானே இருக்கிறது. அப்போது யாழ்.குடாநாடு பாழா?**

**போ.புவனராசா. புன்னாலைக்கட்டுவன்.**

● ஏன் இருக்கவே இருக்கிறது வழுக்கியாறும், தொண்டமானாறும். விரலுக்கேற்ற வீக்கம் போல ஆறு என்ற பேருக்கு ஏற்றாற்போல அழகு இருக்கத்தானே செய்யும்.

■ **கவிதை எழுதத் தெரியாதவன் தன்னைத் தானே கவிஞன் என்கிறான். அதை ஏற்கலாமா?**

**மு.பொன்ராசா, கோப்பாய்.**

● மனிதனாக வாழத் தகுதியற்றவனையும் மனிதன் என்றுதானே அழைக்கிறோம்.

■ **துன்பம் நேர்கையில் யாழை எடுத்து வாசிக்கச் சொல்வது பிழை என்கிறேன். நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?**

**எல்.பார்வதி, நெல்லியடி.**

● அப்படியானால் "இடுக்கண் வரும்போது நகுக" என்று வள்ளுவர் சொல்வதும் பிழையே

■ **சீர்காழியின் பாடல்கள் இன்னும் இனிப்பது பற்றி?**

**சோ.மாலினிதேவி, சுதுமலை.**

● மூன்றுவயதில் தேவாரம் பாடியவரின் ஊரில் பிறந்தவரல்லவா அவர்? எனவே அது காலம் கடந்து தேனாக இனிப்பதில் என்ன அதிசயம் இருக்கிறது?



**அங்கதனிடம் பதில்பெற வேண்டுவோர் உங்கள் கேள்விகளை சரியான பெயர் முகவரியுடன் தெளிவாக எழுதி newsdeepam19@gmail.com என்ற முகவரிக்கோ அல்லது இல.151,நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.**

**தரமான கேள்விகளை அனுப்புவோருக்கு 500 ரூபா பணப் பரிசில் வழங்கப்படும்.**

பெயர் :.......................................

முகவரி :.......................................

.......................................

தொலைபேசி இல. .......................................

---

# அவர்கள் சொன்னதும் ஐயா சொல்வதும்

● எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் ஆதரவு எவருக்கு அளிக்கப்பட்டா லும் அதனால் எந்தவித நன்மையும் தமிழ் மக்களுக்கு ஏற்படப்போவதில்லை என்பது உலகறிந்த உண்மை. பெரும்பான்மை தலைவர்களின் சிந்தனையின் அவர்களின் உரிமைகளை மண்ணை. வாழ்வை முற்றாக கட்டம் கட்டமாக அபகரித்து அவர்களை உலக ஏதிலிகளாக ஆக்கும் எண்ணத்தை தவிர வேறெதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. வடக்கிலும் கிழக்கிலும் அவர்கள் அளித்துவரும் தேர்தல் கால வாக்குறுதிகளை எவராவது நம்புவார்களேயானால் அவர்கள் தம் கைவசம் இருக்கும் கோவணத் துண்டையும் பறிகொடுப்பர் என்பதுதான் நிச்சயம்.

● வன் ஜீவராசிகளுக்கு காணி வழங்க மனித ஜீவராசிகளின் இருப்பிடத்தை அபகரிப்பவர்களை நம்புவதை விடவும் இளிச்சவாய்த்தனம் வேறில்லை. இந்த நிலையில் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் நிரந்தரத் தீர்வு தருவதாக எழுத்து மூலம் உறுதி தருபவருக்கே கூட்டமைப்பு ஆதரவு வழங்கும் என சாந்தி எம்.பி. தெரிவித்திருக்கின்றமை நகைப்புக்கிட மான விடயம் அம்மையாரின் அரசியல் அறியாமை யின் வெளிப்பாடே இது. எழுத்து மூலம் உறுதி மொழியை மட்டுமல்ல. கையெழுத்திட்ட உடன்படிக் கைகளையே கிழித்தெறிந்து. அவமானப்படுத்திய வரலாறுகள் அம்மையாருக்குத் தெரியாது போலும். சொந்த வீடு பற்றி எரிகையில் 'பீடி' பற்றவைக்கும் ஆசையுடன் அடுத்த வீட்டில் நெருப்புக் கேட்கச் சொல்லும் மகானுபாவங்கள் போல் கூட்டமைப்பினர் டில்லிக்குக் காவடி எடுக்கவுள்ளனர். அங்கு மோடி ஐயாவின் காலடியில் போய் விழுங்கள் என்று சொல்லுங்கோ அதையே அவர்கள் செய்யப்போகிறார்கள் என்பது பற்றிய விடயமாகவே இருக்கும் போது எழுத்து மூல ஒப்பந்தம், உறுதி மொழி, என்பவற்றையெல்லாம் மக்களை ஏமாற்றும் அறிக்கைகளை, அலங்கார வார்த்தைகளை அரங்கேற்றாமல் இருப்பது நல்லது.

● பௌத்தத்துக்கு முன்னுரிமை வழங்கினாலும் ஏனைய மதத்தவரின் உரிமைகளுக்கு அரசு உறுதி அளிக்கவேண்டும். ஐ.நாவின் சிறப்புஅறிக் கையாளர் அஹமட் ஷகீட் வலியுறுத்தியுள்ளாராம்.

இது இன்னமும் சிங்கள பேரினவாதத் தலைவர் களுக்கும் பௌத்த மத தீவிர சிந்தனையாளருக்கும் சரியாக எட்டவில்லை போலும். எட்டியிருந்தால் இவரை ஒரு இஸ்லாமியத் தீவிரவாதி யென்றோ பட்டம் சூட்டி பெரும் ஆர்ப்பாட்டம் செய்திருப்பார் கள். நியாயமான உரிமைகளை கோருபவரும் அதற்காக போராடுபவர் களும் இந்த நாட்டில் அரசியல் அகராதியில் பயங்கரவாதிகள் என்று தாமே அர்த்தப்படுத்தியிருக்கிறார்களா?

● தற்போதைய அரசியலுக்கு பணம்தான் பெரும் முதலீடு என்றும் அதனால்தான் ஊழல் அதி கரித்திருக்கிறது என்றும் விக்னேஸ்வரன் ஐயா தெரிவித்திருக் கின்றார். யதார்த்தமான கருத்துத்தான். ஐயாவின் எதிர்கால அரசியலுக்கு பெரும் பணம் தேவைப் படுகிறது. என்று சொல்லாமல் சொல்லி யிருக்கின்றார். அதற்காக ஊழல் செயற்பாட்டில் எல்லாம் அவர் ஈடுபட்டமாட்டாரார் என நம்பலாம். ஆனால் பெரும் பணம் முதலிட என்ன செய்யப் போகிறார்கள் என்பதே கேள்வி. அவரது மூளை தனம் – மூலதனமாகுமா? கைகாட்டுபவர்களையும் கைதட்டுபவர்களையும் நம்பி அரசியல் செய்து நஷ்டப்பட்டால் பின்னர் ரகசியமாக கைதட்டும் நிலையும் ஏற்படலாமல்லவா? அரசியலில் இதெல்லாம் சகஜமப்பா என்ற 'கவுண்டமணி'யின் வசனம் இப்போது நினைவுக்கு வருவது தவிர்க்க முடியாதுள்ளது.





# முதன் முதலாக

இந்தியா – வெஸ்ட் இண்டீஸ் அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் போட்டி ஆண்டிகுவாவில் நடைபெற்றது. முதல் இன்னிங்சில் இந்திய வேகப்பந்து வீச்சாளர் பும்ரா இரண்டு விக்கெட்டுக்கள் வீழ்த்தினார். இதன்மூலம் டெஸ்ட் கிரிக்கெட்டில் 51 விக்கெட்டுக்கள் கைப்பற்றி, அதிவேகமாக 50 விக்கெட்டுக்கள் கைப்பற்றிய இந்திய பந்து வீச்சாளர் என்ற சாதனையைப் படைத்தார்.

மேலும், மூன்று வகை (டெஸ்ட், ஒருநாள், டி20) கிரிக்கெட்டிலும் 50 விக்கெட்டிற்கு மேல் வீழ்த்திய முதல் இந்திய வேகப்பந்து வீச்சாளர் என்ற பெருமையை இதன்மூலம் பெறுகிறார் பும்ரா!




# மறுபடியும் மலிங்க

இலங்கை வந்துள்ள நியூசிலாந்து அணியுடனான ரி 20 கிரிக்கெட் தொடருக்கான 15 பேர் கொண்ட வீரர்களின் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. மூன்று போட்டிகளைக் கொண்ட இத்தொடர் எதிர்வரும் செப்டெம்பர் முதலாம் திகதி, பல்லேகல சர்வதேச மைதானத்தில் ஆரம்பமாக உள்ளது.

அஞ்சலோ மத்தியுஸ், திசர பெரேரா, தனஞ்சய டி சில்வா ஆகியோர் அணிக்குள் உள்வாங்கப்படவில்லை என்பதுடன், தனுஷ்க குணதிலக்க மீண்டும் அணிக்குள் இணைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த அணிக்கு லசித் மலிங்க தலைமை வகிப்பார்.

# இன்னுமொரு கிராண்ட்ஸ்லாம்

138 வருடங்களுக்கு முன்பு ஆரம்பித்த யு.எஸ். ஓபின் கிராண்ட் ஸ்லாம் போட்டிகள் (1881 இல்) 139ஆவது தடவையாக மீண்டும் ஆரம்பித்திருக்கின்றன. 2018இல் சாம்பியனாக வந்த நொவாக் ஜோகோவிச் உட்பட, பெடரர், பல முன்னணி வீரர்கள் பங்கேற்கிறார்கள். இந்த ஆண்டின் அமெரிக்க ஓப்பன் தொடர். 2019ஆம் ஆண்டின் கடைசி கிராண்ட் ஸ்லாமான இந்தத் தொடரின் முதல் சுற்றுப் போட்டிகள் 26ஆம் திகதி தொடங்குகின்றன.

ஜோகோவிச், நடால் இருவர் மட்டுமே இதுவரை கிராண்ட் ஸ்லாம் பட்டம் வென்றிருக்கும் நிலையில், ஃபெடரர் பட்டம் வெல்வாரா, ஜோகோவிச்சின் ஆதிக்கம் முற்றுப்பெறுமா என்பதைத் தெரிந்துகொள்ள டென்னிஸ் ரசிகர்கள் பெரும் ஆர்வத்தோடு காத்திருக்கிறார்கள்.

இந்த ஆண்டுக்குரிய பரிசுத் தொகை 57.24 மில்லியன் அமெரிக்க டொலர்கள். இந்தப் போட்டி ஒரு சில கேள்விகளையும் கேட்கத் தவறவில்லை. விம்பிள்டன் தோல்வியிலிருந்து தன்னைச் சுதாகரித்துக் கொண்டு, இந்தக் கிண்ணத்திற்காக றோஜர் பெடரர் (சுவிஸ்) முழுப் பலத்துடன் விளையாடுவாரா? அமெரிக்க வீராங்கனையான செரீனா வில்லியம்ஸ் தனது 24ஆவது ஒற்றையர் கிண்ணத்தை இந்தத் தடவை தட்டிச் செல்வாரா? ஒற்றையர் ஆட்ட சாம்பியன் சுளையாக 3.9 மில்லியன் டொலர் தொகையை அள்ளிச் செல்ல, பரிசுத் தொகையாக 57 மில்லியன் டொலர் தொகை வீரர்களிடையே பகிரப்படுகின்றது.






# மைதானத்தில் ஒரு மந்திரவாதி

இப்படியும் நடக்குமா என்பது போல, இங்கிலாந்து – அவுஸ்திரேலியா மூன்றாவது டெஸ்ட் போட்டியில், வெற்றி இங்கிலாந்திற்குப் போயிருக்கின்றது. தனியாளாக நின்று, தன் அணியை வெற்றிப் பாதைக்கு இட்டுச் சென்றது, மந்திரமா அல்லது தந்திரமா என்றே கேட்கத் தோன்றுகின்றது.

67 ஓட்டங்களுடன் தனது முழு விக்கெட்டுகளையும் இழந்த நிலையில், அணித் தலைவர் ரூட் இனி தன் பதவியைத் தக்கவைத்துக் கொள்ள முடியுமா என்ற கேள்விக்குறியில், தன் ரசிகர்களை ஆரவாரத்தின் உச்சிக்குக் கொண்டு சென்றிருக்கிறார் பென் ஸ்டோக்ஸ்.

ஒரேயொரு விக்கெட்டை வைத்துக் கொண்டு, தேவைப்பட்ட 76 ஓட்டங்களில் 74 ஓட்டங்களை அடித்து, ஒரு விக்கெட் வெற்றிக்கு வழி சமைத்திருக்கிறார் இவர். கடந்த வருடம் மூன்று தடவைகளும், இந்த வருடம் (67 ஓட்டங்கள்) ஒரு தடவையுமாக, 100க்கு குறைந்து ஓட்டங்களை 4தடவைகள் எடுத்த மிக மோசமான அணி என்று கரி பூசப்பட்ட நிலையில், இந்த அதிசய வெற்றி வந்து சேர்ந்துள்ளது. ஆட்டநாயகன் ஸ்டோக்ஸ் அதிசயமானவர் தான்.!




உலக சம்பியன்ஷிப்ஸ் பட்மின்டன் இறுதிப் போட்டியில் இந்திய வீராங்கனை பி.வி.சிந்து தங்கம் வென்று வரலாற்று சாதனைப் படைத்துள்ளார். உலக சம்பியன் ஷிப்ஸ் பட்மின்டன் தொடர் சுவிற்ஸர்லாந்தில் நடைபெற்றது. பெண்களுக்கான ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டி கடந்த ஞாயிறன்று(25.08) நடைபெற்றது. இதில் இந்தியாவின் முன்னணி வீராங்கனையான பி.வி. சிந்து ஜப்பானைச் சேர்ந்த நசோமி ஒகுஹாராவை தோற்கடித்தார்.

இந்த வெற்றியின் மூலம் பிவி சிந்து, இந்தியாவிற்கு உலக சாம்பியன் ஷிப்பில் ஐந்தாவது முறையாக பதக்கம் வென்று சாதித்தார் சிந்து. இதற்கு முன்னர் 2013 ,2014ஆம் ஆண்டுகளில் வெண்கலப்பதக்கம் வென்ற சிந்து, 2017, 2018இல் வெள்ளிப்பதக்கம் வென்றார். தற்போது தங்கப்பதக்கம் வென்று சாதித்துள்ளார் சிந்து. இதன்மூலம் உலக சம்பியன்ஷிப்ஸ் தொடரில் முதன்முதலாக தங்கம் வென்ற இந்தியர் என்ற வரலாற்றுச் சாதனையை பி.வி.சிந்து படைத்துள்ளார்.

# அணிக்கு வராத அஸ்வின்

மேற்கிந்திய அணியினருக்கு எதிராக விளையாடும் இந்திய அணியில் உலகின் சிறந்த சுழல் பந்து வீச்சாளர்களில் ஒருவரான அஸ்வினைத் தெரிவுசெய்யவில்லை என்ற குற்றச்சாட்டு இருந்து வருகின்றது. அஸ்வினுக்குப் பதிலாக ஜடேஜா அணியில் விளையாடுகிறார். இதற்குப் பல காரணங்களை முன்வைக்கிறார்கள். இதுவரையில் 65 போட்டிகளில் விளையாடி 342 விக்கெட்டுகளை வீழ்த்தியிருப்பவர் அஸ்வின்.

அதே சமயம் 42 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி, 193 விக்கெட்டுகளை எடுத்திருப்பவர் அஸ்வின். இந்த இருவரிலும் ஜடேஜாதான் குறைய ஓட்டங்களை கொடுத்து விக்கெட்டுகளை வீழ்த்துபவராக இருப்பவர் ஜடேஜா என்ற காரணமே, இவரின் தெரிவுக்கு தலையாய காரணமாக இருக்கின்றது. அது மாத்திரமல்ல துடுப்பாட்டத்திலும் ஜடேஜா அஸ்வினை விட சிறப்பாக விளையாடி இருக்கிறார். போட்டிகளின் போக்கை மாற்றி வெற்றிப் பாதைக்கு இட்டுச்செல்வதிலும் முன்னிற்பவர் ஜடேஜாவே...





# ஒரு டிக்கெட்டுக்கு 42லட்சமா?

32ஆவது ஒலிம்பிக் போட்டி அடுத்த ஆண்டு (2020) ஜூலை 24ஆம் திகதி முதல் ஓகஸ்ட் 9ஆம் திகதி வரை ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் இடம்பெறப் போகின்றது. உலகின் மிகப்பெரிய விளையாட்டு திருவிழாவான இதில் 33 வகையான பந்தயங்களில் 206 நாடுகளைச் சேர்ந்த 11 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீரர், வீராங்கனைகள் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த போட்டிக்காக ஜப்பான் அரசாங்கம் கிட்டத்தட்ட ரூ.1 லட்சம் கோடி (இந்திய ரூபாவில்) செலவிடும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

ஒலிம்பிக் போட்டிக்கான டிக்கெட் விற்பனை ஏற்கனவே தொடங்கி விட்டது. டிக்கெட் விலை இந்திய மதிப்பில் ரூ.1,700 முதல் ரூ.2 இலட்சம் வரை நிர்ணயிக்கப்பட்டு இருக்கிறது. இந்த நிலையில் போட்டி ஒருங்கிணைப்பாளர்கள் சகல வசதிகளுடன் கூடிய ஆடம்பர டிக்கெட்டை அறிமுகப்படுத்தியுள்ளனர். கோலாகலமான தொடக்க விழா, நிறைவு விழா மற்றும் 9 நாட்கள் நடக்கும் தடகள போட்டிகளை முழுமையாக பார்க்க வகை செய்யும் இந்த டிக்கெட்டின் விலை ரூ.43 இலட்சமாகும். சொகுசு இருக்கை வசதி கொண்ட இந்த டிக்கெட்டில் உணவு, உற்சாக பானங்களும் அடங்கும். ஒலிம்பிக் டிக்கெட்டை பலர் விரும்பி வாங்குவதால் , ஏற்கனவே டிக்கெட் வாங்கியவர்கள் அதை கூடுதல் தொகைக்கு மறுவிற்பனை செய்ய வாய்ப்புள்ளது.













தீபம் பத்திரிகை மற்றும் தொலைக்காட்சிக்கு அனைத்து மாவட்டங்களிலிருந்தும் விளம்பர முகவர்கள் தேவைப்படுகின்றார்கள். உடன் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம் **077 198 9445**



இந்தப் பத்திரிகை இல. 10, வில்வம் தெரு, கொழும்புத்துறை என்ற முகவரியில் உள்ள நோர்சி மீடியா (பிரைவேற்) லிமிடெட் நிறுவனத்தால் 01.09.2019 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.